# ஊரும் உறவும் எனது வாழ்வும்



நூலாசிரியர்
திருமதி.இராஜேஸ்வரி அம்மா திருநாவுக்கரசு

உ

திருச்சிற்றம்பலம்

# ஊரும் உறவும் எனது வாழ்வும்

நூலாசிரியர்

திருமதி. இராஜேஸ்வரி அம்மா திருநாவுக்கரசு

எழுத்தாக்கம் – சித்திரை 2022

எங்கள் குலதெய்வம் – கொக்குவில் தென்னாடு

# அருள்மிகு மனோன்மணி அம்மனுடனுறை
# அருள்மிகு ஐம்பூதநாதப் பெருமான்



பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி

அருக்கனில் சோதி அமைத்தாய் போற்றி
வெண்மதி தண்ணொளி தந்தாய் போற்றி
உயிருக்குள் உயிராய் நின்றாய் போற்றி
ஆதியும் அந்தமும் இல்லாய் போற்றி
ஐம்பூதநாதரே போற்றி போற்றி

உ
திருச்சிற்றம்பலம்

# வெளியீட்டுரை

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும் – திருக்குறள் 50**

வாழும் போது வாழ்த்துவோம், வரலாறுகளைப் பாதுகாப்போம், முன்னோரை மதிப்போம், அவர்களின் வாழ்வியலின் நல்லவற்றை எடுத்து, பண்பாட்டின் வழி நின்று, நாமும் வாழ்ந்து பிறரையும் வாழவைப்போம் என்ற அடிப்படையில், எங்கள் அம்மம்மாவின் சகோதரியான இராஜேஸ்வரி அம்மா திருநாவுக்கரசு அம்மாவின் வாழ்க்கையினை ஒரு புத்தகமாக்க நினைத்து, அவரின் அதீத ஞாபகத்திறத்தினை அடிப்படையாகக் கொண்டு, அவரின் வாழ்க்கை வரலாற்றினூடு எங்கள் குடும்பங்களின் வரலாற்றினையும், ஊரின் வரலாற்றினை யும் ஆவணப்படுத்த திருவருள் துணையுடன் இந்த விண்ணப்பத்தினை அவரிடம் வைத்தேன்.

இத்தனை வயதிலும், உடல்நலக்குறைவிலும் அவர் இதற்கான நேரத்தினை ஒதுக்கி, வரலாற்றினை தெரிந்தவரை துல்லியமாக எழுதியுள்ளார் என்பது எங்கள் எல்லோருக்கும் கிடைத்த வரமே. எம்மைப் பற்றி முழுமையாக அறிய இந்த நூல் எங்களுக்கு அவர் இருக்கும் காலத்திலும் சரி இல்லாத காலத்திலும் துணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அவரின் விருப்பத்தில் அவரினாலேயே இந்த நூல் “ஊரும் உறவும் எனது வாழ்வும்” என்று பெயரிடப்பட்டது. இதில் உள்ள மொழிப் பயன்பாடு, சமூகக் கட்டமைப்பு சார்ந்த தகவல்கள், வடமொழி சார்ந்த சில வழிபாட்டுப் பாடல்கள் மற்றும் எழுத்தாளுமை என்பவை முற்றுமுழுதாக அவரையே சாரும்.

அவரின் எழுத்திலும், மொழிநடையிலும் மற்றும் உள்ளடக்கத்திலும் எந்தவித மாற்றத்தினையும் நான் செய்யவில்லை. சில கருத்துகள், மொழியியல் மற்றும் வழிபாட்டு முறைமைகள் எனது தத்துவத்திற்கு மாறானதாக இருந்தாலும் வரலாற்றினை அவரின் வடிவிலே பதியவேண்டி அப்படியே பதிப்பித்துள்ளேன். அதனால் அவற்றை நான் ஏற்றுக்கொண்டதாக இல்லை.

இப்படி ஒரு நூலினை எங்கள் குடும்பத்தின் வரலாற்று ஆவணமாகத் தந்த எங்கள் இராஜேஸ்வரி அம்மா திருநாவுக்கரசு (பாமினியம்மா) அவர்களுக்கு, எங்கள் குடும்பங்களின் ஒவ்வொருவர் சார்பிலும், நான் நன்றிகளைத் தெரிவித்து, அவர்களின் திருவடிகளை வணங்கி, இந்த மலரினை உங்களிடத்தில் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

குறிப்பாக அவர் காலத்திலே, அவர் சார்பாகவும், எங்கள் பரம்பரை சார்பாகவும் உங்களிடம் இந்த விண்ணப்பத்தினை வைக்கிறேன். எங்கள் பரம்பரையில் வந்தவர்கள் மற்றும் வருகின்றவர்கள், எங்கள் வழி வழி வந்த தாய் மதமாகிய “சைவ சமயத்தின்” வழி

நிற்பது மட்டுமல்லாது "சென்று நாம் சிறுதெய்வம் சேரோம் அல்லோம்" என்ற அப்பர் சுவாமிகளின் வாக்கின்படி சிறுதெய்வங்களையும் சேராமல் வாழ்ந்து, முன்னோர்களையும் வழிபட்டு, பிறவிப் பெரும் பயனை அடைவோமாக,

அடையாளத்தினை இழந்து அநாதைகளாய் வாழாமல், பண்பாட்டுப் பெருமையுடன் நிறைவாய் வாழ்வோம். வாழ்க்கையில் தடுமாற்றங்கள், தடப்புரள்வுகள், ஏற்றத்தாழ்வுகள் வரலாம். அப்படி வந்தாலும், சிவனை இறுகப்பிடித்து மீண்டெழுந்து, மீண்டும் பண்பாட்டுப் பாதையில் பயணிக்க முன்வரவேண்டும்.

மேலும் இப்படியான ஆவணப் பதிப்புகள் எங்கள் வருங்காலத்தினரும் முன்னெடுக்க வேண்டும் எங்கள் பரம்பரையின் பெருமைமிக்க வரலாறுகள் பாதுகாக்கப்படவேண்டும். இதனை அடுத்த தலைமுறையினரும் தொடரவேண்டும் என்றும் வேண்டிக்கொள்கிறேன்.

எங்கள் குலதெய்வமான எல்லாம்வல்ல கொக்குவில் தென்னாடு அருள்மிகு மனோன்மணி அம்மனுடனுறை ஐம்பூதநாதப் பெருமான் எங்களையும், இனிவரும் எங்கள் பரம்பரையினரையும் முன்னின்று காத்து, வையத்துள் வாழ்வாங்கு வாழ துணைநிற்பாராக.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

திருச்சிற்றம்பலம்



*தென்னவன் பார்த்தீபன்*
*(குணரத்தினம் பார்த்தீபன்)*
*தென்னாடு*
*14-04-2024*
*+61423331111*

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | விநாயகர் வணக்கம் | 01 |
| 2. | தனலட்சுமி வாசா | 02 |
| 3. | கொக்குவில் பொற்பதி விநாயகர் ஆலயம் | 06 |
| 4. | கோணாவளை வைரவர் கோயிலும் ஸ்ரீ சாயி துர்க்கை அம்மன் கோயிலின் தொடக்கமும் | 08 |
| 5. | நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் கோயில் | 10 |
| 6. | கொக்குவில் கிழக்கு ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலை | 13 |
| 7. | கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம் | 16 |
| 8. | கொக்குவில் இந்துக் கல்லூரி | 19 |
| 9. | கொக்குவில் கிழக்கு, கொக்குவில் | 22 |
| 10. | அன்பகம் ஆன்மீக நிலையம் | 29 |
| 11. | கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் | 31 |
| 12. | எனது சுயசரிதை | 34 |
| 13. | எனது தந்தையார் வி.பொ.முத்துத்தம்பி | 61 |
| 14. | எனது தாயார் திருமதி. மு. செல்லமுத்து | 69 |
| 15. | எனது சகோதரர்கள் P.M. இராசரத்தினம், இரத்தினம்மா, மாணிக்கவாசகர். | 77 |
| 16. | எங்கள் சைவத் திருப்பணிகள் | 79 |
| 17. | தேர்த் திருவிழாவும் மனிதனின் வாழ்க்கையும் | 84 |

உ

திருச்சிற்றம்பலம்

# விநாயகர் வணக்கம்

சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம்
ப்ரஸன்ன வதனம் த்யாயேத் சர்வ விக்நோப சாந்தயே
மூஷிஹன மோதக ஹஸ்த சாமரகர்ண விலம்பிக ஸூத்ர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர விக்ன விநாயக பாத நமஸ்தே

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம் செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்,
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

திருச்சிற்றம்பலம்

# தனலட்சுமி வாசா

குளங்கரை ஒழுங்கை கொக்குவில் கிழக்கில் 1933ம் ஆண்டு எனது பெற்றோர்களான அமரர்கள் முத்துத்தம்பி, செல்லமுத்து தம்பதியினரால் கட்டப்பட்ட "தனலட்சுமி வாசா" என்ற வீடு அமைந்துள்ளது. அந்த வீட்டில் எனது பெற்றோர் அமரர். முத்துத்தம்பி, அமரர். செல்லமுத்து ஆகியோர் இராஜேஸ்வரி அம்மா ஆகிய அடியேனை 1937ம் ஆண்டு பெற்றெடுத்தார்கள்.

எங்களுடைய குளங்கரை ஒழுங்கை முன்பு கேணியடி ஒழுங்கை என அழைக் கப்பட்டது. எங்களுடைய வீட்டிற்கு எதிர்ப்பக்கத்தில் ஒரு பாழடைந்த கேணியுடன் வெறும் காணி ஒன்று இருந்தது. அதனால் அந்த ஒழுங்கையைக் கேணியடி ஒழுங்கை என்று அழைத்தார்கள். அந்தக் காணி ஐயர் ஒருவருக்கு தர்மசாதனமாக எழுதப்பட்டிருந்ததாக எனது அம்மா சொன்னார். (தற்போது குளங்கரை ஒழுங்கையானது தென்னாடுடைய சிவனைப் பறைசாற்றும் வகையில் "தென்னாடு வீதி" என பெயர் மாற்றப்பட்டு, அழைக்கப்பட்டு வருகின்றது.)

ஆரம்ப காலத்தில் எங்கள் குளங்கரை ஒழுங்கையில் மூன்று குடும்பங்கள் மாத்திரம் குடியிருந்தோம். எனது பெற்றோர், எனது பெரியண்ணை அமரர். இராசரத்தினம், எனது அக்கா அமரர். இரத்தினம்மா, எனது சின்னண்ணை அமரர். மாணிக்கவாசகர், சின்னண்ணைக்குப் பதினோரு வயது இளையவளான இராஜேஸ்வரி அம்மா ஆகிய என்னுடன் சேர்த்து ஆறுபேர் தனலட்சுமி வாசாவில் வாழ்ந்தோம்.

எங்களுக்கு அடுத்த வீட்டில் அமரர்களான சரவணமுத்து (அப்பு), இராசையா (ஐயா), பாக்கியம் (அம்மம்மா) அவர்களின் மகனான சோதிநாதன் (கணேஸ் அண்ணை) மற்றும் செல்லாச்சி (பெத்தாச்சி) ஆகியோர் வாழ்ந்தார்கள். மூன்றாவது வீட்டில் அமரர்களான வல்லிபுரம் (ஐயா), நாகம்மா (நாகம்மாக்கா), திரு. தியாகராசா (தியாகு அண்ணை), திருமதி. தங்கரெத்தினம் (மணி அக்கா), திருமதி. இரத்தின பூபதி (ராணி) ஆகியோர் வாழ்ந்தார்கள். மூன்று குடும்பத் தினர்களும் மிகுந்த ஒற்றுமையாகவும், பாசமும், நேசமும் நிறைந்தவர்களாக வாழ்ந்தோம். ஒரு வீட்டில் ஒரு துயரம் நடந்தால் மற்றைய இரு வீட்டினரும் அவர்களுக்காக மனம் கலங்கி, அவர்களுக்கு ஆறுதல் சொல்லி அரவணைத்து நிற்பார்கள். அமரர்களான இராசையா, பாக்கியம் இருவரும் எனது சிறு பராயத்திலிருந்து என் மேல் மிகுந்த பாசமுடனும், நேசமுடனும் இருந்தார்கள். எங்களது வீட்டில் வீட்டு வேலை செய்வதற்கும், பசுமாடுகளைக் கவனிப்பதற்கும் வேலையாட்களை வைத்திருந்தார்கள் அதனால் என்னை சமயலறைப் பக்கம் போவதற்கு அம்மா விடமாட்டா.

பாடசாலை தவிர்ந்த ஏனைய நாட்களிலும் அமரர். பாக்கியம் (அம்மம்மா) அவர்களுடன் தான் எனது விளையாட்டும், பொழுதுபோக்குமாக இருந்தது. அம்மம்மாவுக்கு சின்னப் பிள்ளை கள் என்றால் நல்ல விருப்பம். அம்மம்மா பயித்தங்காய் முறித்தால் அதை நானும் சேர்ந்து முறிப்பேன். மற்ற மரக்கறி சாமான்களையும் நானும் கை வைத்து விளையாட்டாகச் செய்வேன்.

என்ன செய்தாலும் அம்மம்மா என் மேல் அன்பாக நடந்து கொள்வார். அவரிடமிருந்து தான் மரக்கறி சிலவற்றை கற்றுக்கொண்டேன். இடியப்ப உரலுக்குள் மாவை வைத்து தருவா, பக்கத்துவீட்டு கோசலை அக்காவும், நானும் ஒருவர் மாறி ஒருவராக இடியப்பம் பிழிவோம். அம்மம்மா தான் எனக்கு இடியப்பம் பிழியக்காட்டி தந்தா.

எனது சிறுவயதில் அம்மம்மா தனது உறவினர்கள், நண்பர்கள் வீட்டிற்கு கோயிலுக்கு செல்லும் போது என்னையும் கூட்டிக்கொண்டு செல்வார். நந்தாவில் மனோன்மணி அம்மன் திருவிழாக் காலங்களில் வெளிவீதியில், இரவில் மணி ஐயர் பிரசங்கம் செய்வார். மஞ்சவனப்பதி முருகன் கோயிலில் திருமுருக கிருபானந்த வாரியார் பிரசங்கம் செய்வார். அவர்களது பிரசங்கங்களையெல்லாம் கேட்பதற்கு அம்மம்மா என்னையும் கூட்டிக்கொண்டு செல்வார்.

1942ம் ஆண்டிலிருந்து எங்கள் தனலட்சுமி வாசா வீட்டில் சனத்தொகை கூடிக்கொண்டே வந்தது. எனது அக்கா அமரர். இரத்தினம்மா சிவபாதசுந்தரம், அமரர்களான பேராசிரியர் மகேஸ்வரன், சிவநேசரத்தினம், ஞானேஸ்வரன், சுதந்திரேஸ்வரன், இராஜேஸ்வரன் மற்றும் சிவநேசராணி, சிவநேசமலர், சிவநேசஜோதி ஆகியோரைப் பெற்றெடுத்தார். அமரர். பாக்கியம் இராசையா வீட்டில், கமலாதேவி, வசந்தா தேவி இருவரும் பிறந்தார்கள். அமரர்களான நாகம்மா, வல்லிபுரம், அமரர் செல்வரத்தினம், ஜெகநாதன், சண்முகநாதன், ஜெகதாம்பிகை, சுசீலாதேவி, ரவீந்திரன், புவனேந்திரன் ஆகியோரைப் பெற்றெடுத்தார். பெரியவர்கள், சிறுவர்கள் அனைவரும் ஒற்றுமையாகவும், அன்பு பாசத்துடனும் வாழ்ந்தோம். அமரர்களான பராசக்தி அக்காவின் அம்மா (அன்னம்மா), நடராசா அண்ணை, கந்தசாமி அண்ணை, பராசக்தி அக்கா ஆகியோரின் வீட்டிற்கு பக்கத்தில் கோசலை அக்கா சிறுவயதில் இருந்து வாழ்ந்தார். அவர்கள் அனைவரும் எங்களுடன் அன்பாகவும், ஒற்றுமையாகவும் வாழ்ந்தார்கள்.

பாடசாலை படித்த காலத்தில், விடுமுறை நாட்களில் அமரர். பராசக்தி அக்காவின் வீட்டில் நளன் தமயந்தி போன்ற நாடகங்கள் நடித்து மேடை அமைத்து கொண்டாட்டங்கள் செய்வோம். அந்த நேரத்தில் அண்மையில் காலஞ்சென்ற சுப்ரமணிய சர்மா, அமரர். விசுவநாத சர்மா இருவரும் எங்களுடன் சேர்ந்து நாடகம் நடித்தார்கள். அந்தக் காலம் பெரியவர்கள் போல, சிறுவர்களும் ஒருவருக்கொருவர் அன்பாகவும், ஒற்றுமையாகவும் வாழ்ந்தோம். அது ஒரு பொற்காலம்.

1961ம் ஆண்டு தர்மசாதனமாக எழுதப்பட்டிருந்த பாழடைந்த கேணி அமைந்திருந்த காணியை, அந்த ஐயரின் சந்ததியினர் ஒருவர் மண் பறித்துக் கொட்டி நிரவி காணியை மட்டப்படுத்தினார். பின் 1962ம் ஆண்டு திருமதி. சோதிப்பிள்ளை குடும்பத்தினர் தற்போது பாவிக்கும் கிணற்றை வெட்டிக் கட்டுவித்தார்கள். அமரர்களான சின்னப்பிள்ளை (ஆச்சி), முத்துலிங்கம் (அண்ணை) இருவரும் கிணறு இருக்கும் பக்கம் உள்ள காணியை வாங்கி சிறிய வீடு ஒன்றை கட்டுவித்தார்கள். அமரர்களான சின்னப்பிள்ளை (ஆச்சி), முத்துலிங்கம் (அண்ணை), சோதிப்பிள்ளை, அமரர். ரதி, திரு. ராதா ஆகியோர் 1962ம் ஆண்டில் அந்த வீட்டில் வந்து வாழ்ந்தார்கள்.

அதன்பின் அந்த வீட்டில் திரு. கண்ணனும், அமரர். நந்தினியும் பிறந்தார்கள். சிறிது காலத்தின் பின் சிறிய வீட்டை இடித்துவிட்டு, தற்போது இருக்கும் வீட்டைக் கட்டினார்கள்.

இவர்களின் காணிக்கு அடுத்த பக்கத்தில் உள்ள காணியை திரு. கதிர்காமத்தம்பி என்பவர் வாங்கிக் கிணறு ஒன்றை வெட்டிக் கட்டுவித்தார். கிணறு வெட்டி சிறிது காலத்தின் பின் அமரர். இராசையா (சந்திராவின் மாமனார்) அந்தக் காணியை வாங்கி வீடு கட்டி தனது மனைவி அமரர். தங்கம்மா, மகள் சாந்த கௌரி ஆகியோருடன் வாழ்ந்தார்.

இரண்டு காணிகளுக்கும் நடுவில் உள்ள காணியை சந்திராவின் அண்ணன் அமரர். இரத்தினசிங்கம் என்பவர் 1966ம் ஆண்டு வாங்கி, திருமதி. சந்திரா விஜயகாந்துக்கும் கொடுத்தார். திரு திருமதி. விஜயகாந்தன் சந்திரா தம்பதியினர் அந்தக் காணிக்குள் ஒரு சிறிய வீட்டைக் கட்டி வாழ்ந்தார்கள். அந்த வீட்டில் தான் விஜயா, றெஜிகாந்தன் இருவரும் பிறந்தார் கள். சிறிது காலத்தின் பின் தமது காணிக்குள் கிணறு ஒன்றை வெட்டிக் கட்டுவித்தார்கள். அதன்பின் இப்போது அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் வீட்டை கட்டுவித்தார்கள். அதன்பின் தான் அவர்களுக்கு யசிக்குமரன் (பவா) பிறந்தார்.

1978ம் ஆண்டு அமரர். ஐயாத்துரை ஐயர் தங்களின் பின் காணியில் ஒரு பகுதியை ஏலத்தில் விற்றார். அதனை எங்கள் புதிய வீட்டிற்குப் பக்கத்து வீட்டில் வாழ்ந்த அமரர். அருளம்பலம் (சிறாப்பர்) வாங்கி தனது பெறாமகள் திருமதி. இராசாத்திக்கு வீடு கட்டிக் கொடுத்தார். அந்த வீட்டில் தான் இராசாத்தியும், அவரது பிள்ளைகளான காயித்திரி, திருமுருகன் ஆகியோர் தற்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

எனது அக்காவின் மகன் அமரர். மகேஸ்வரன் வீடு கட்டி வாழ்ந்த காணியும் பிராமண வீட்டுக் காணி. இந்தக் காணி கோணாவளை வைரவர் கோயிலில் பூசை செய்த வைத்தியநாத ஐயரின், மனைவியின் தாயாருடையது. அந்தப் பிராமண அம்மாவிடம் ஒருவர் அந்தக் காணியை வாங்கிக் கிணறு வெட்டி, கட்டி அங்கு சிறிது காலம் தோட்டம் செய்தார். பின் அவர் அந்தக் காணியை விற்றபோது, அமரர். மகேஸ்வரன் அதனை வாங்கி 1980ம் ஆண்டு பெரிய வீடு ஒன்றைக் கட்டி அவரும், அவரது மனைவி திருமதி. இராஜேஸ்வரி மகேஸ்வரனும் அங்கு வாழ்ந்தார்கள். 1998ம் ஆண்டு அமரர். மகேஸ்வரன் காலமாகிய பின் அவரது மனைவி அந்த வீட்டில் வாழ்ந்தார்.

எங்களுடைய தனலட்சுமி வாசா வீட்டுக் காணி உட்பட அந்தச் சுற்றாடலில் உள்ள காணிகள் யாவும் பிராமணர்கள் வாழ்ந்த காணிகளாகும். எங்களுடைய பழைய கிணறின் துலாவுக்குப் பின்னால் பெரிய ஒரு வில்வ மரம் நின்றது. ஐயர் பூசை செய்வதற்கு வில்வம் இலை எடுப்பதற்காக வில்வ மரத்தை நட்டிருந்தார் என்று நினைக்கிறேன்.

1982ல் நாங்கள் எங்களுடைய வீட்டின் பின்பக்கத்தில் உள்ள காணிக்குள் புதிய வீடு ஒன்றை கட்டி, அங்கு 1991 டிசம்பர் மூன்றாம் திகதிவரை வாழ்ந்தோம். எங்கள் புதிய வீட்டின் எதிர் பக்கம் உள்ள காணிக்குப் பின் பக்கமுள்ள காணியை அமரர். சாமி பொன்னையா என்பவர் எங்களிடம் விலைக்கு வாங்கி, தனது தம்பியான அமரர். சுப்பையா என்பவருக்கு கொடுத்தார். அமரர். சுப்பையா தனது பிள்ளைகளான முருகண்டி, கொத்தமல்லி ஆகிய இருவருக்கும் கொடுத்தார். அவர்கள் இருவரும் அந்த காணிக்குள் தனித்தனி வீடுகள் கட்டி தங்கள் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

எங்களுடைய புதிய வீட்டிற்கு இடது பக்கம் உள்ள காணிக்குள் அமரர்களான அருளம்பலம், அன்னம்மா தம்பதியினர் வீடுகட்டி அங்கு வாழ்ந்தார்கள். அவர்களுடன் அமரர். அருளம்பலத்தின் பெறாமகன் அமரர். சிவராமலிங்கமும், அவரது மனைவி திருமதி. விமலா தேவியும், அவரது பிள்ளைகளான மயூரன், துஷ்யந்தன், கர்சன், ஜனார்த்தகி ஆகியோரும் அந்த வீட்டில் வாழ்ந்தார்கள். அனைத்து அயலவர்களும் ஒருவருக்கொருவர் அன்பாக, ஒற்றுமையாக வாழ்ந்தார்கள்.

தற்பொழுது அந்த வீட்டில் விமலாதேவியின் மகன் கர்சனும் அவரது குடும்பத்தினரும் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மயூரனும், சகோதரி ஜனார்த்தகியும் கனடாவில் இருக்கிறார்கள். துஷ்யந்தன் தனது மனைவி பிள்ளைகளுடன் வவுனியாவில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

# கொக்குவில் கிழக்கு பொற்பதி விநாயகர் ஆலயம்

எங்கள் கொக்குவில் கிழக்கில் பொற்பதி விநாயகர் ஆலயம், கோணாவளை வைரவர் கோயில், நந்தாவில் மனோன்மணி அம்மன் கோயில் ஆகியன எனது தாயாரின் பெற்றோர்களான அமரர்கள் செல்லப்பா திருப்பதிப்பிள்ளை தம்பதியினரின் காலத்திலேயே அமைந்துள்ளன. பொற்பதி விநாயகர் கோயிலுக்கு சகோதரர்களான அமரர்கள் குருசாமி ஐயர், நடராசா ஐயர் இருவரும் உரிமையாளர்களாக இருந்தார்கள். வருடத்தில் ஆறு மாத காலம் அமரர் குருசாமி ஐயர் பூசை செய்தார். மிகுதி ஆறு மாத காலம் நடராசா ஐயர் பூசை செய்தார். அவர்களின் பின் குருசாமி ஐயரின் மகனின் பிள்ளைகளான வைத்தியநாத ஐயர், இராசன் ஐயர், ஆகியோரும் நடராசா ஐயரின் மகன் தியாகராசா ஐயர், அவரது மகன் சேகர் ஐயர் ஆகியோரும் உரிமை கோரி பூசை செய்தார்கள். வருடத்தில் ஆறு, ஆறுமாத பூசைகளை இரு குடும்பத்தினரும் செய்து வந்தனர்.

ஆரம்பகாலத்திலிருந்து பொற்பதி விநாயகர் கோயிலில் காலை, மாலை பூசைகள் மற்றும் விசேட தினங்களான தைப்பொங்கல், தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம், சித்திரா பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆவணி சதுர்த்தி, நவராத்திரி ஒன்பது நாள் இரவு பூசைகள், மானம்பூ வாழை வெட்டுத் திருவிழா, ஐப்பசி வெள்ளிக்கிழமைகள், கார்த்திகை விளக்கீட்டுத் திருவிழா, பிள்ளையார் கதை இருபத்தொரு நாட்கள், திருவெம்பாவை பத்து நாட்கள் போன்றவை நடைபெற்றன. ஊர் மக்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருநாள் பூசைகளைப் பொறுப்பேற்று செய்தனர். தைப்பொங்கல் அன்று மாலை நேரத் திருவிழாவை எனது தந்தையின் ஒன்றுவிட்ட தமயன் அமரர். விசுவலிங்கம் (விசுவர் பெரியப்பர்) பொறுப்பேற்று தனது வாழ்நாள் முடியும் வரை செய்து வந்தார். கார்த்திகை விளக்கீட்டுத் திருவிழா எனது தாயாரின் பெற்றோர்களான அமரர்களான செல்லப்பா திருப்பதிபிள்ளை குடும்பத்தினர் ஆரம்ப காலத்திலிருந்தே தொடர்ந்து செய்து வந்தார்கள் என அறிந்தேன்.

அவர்கள் காலமான பின், எனது பெற்றோர் பொற்பதி விநாயகர் கோயில் விளக்கீட்டுத் திருவிழாவை செய்து வந்தார்கள். எனது தந்தையாரின் இறப்புக்கு பின் எனது பெரிய அண்ணை அமரர் P.M. இராசரெத்தினம் கார்த்திகை விளக்கீட்டுத் திருவிழாவை பொறுப்பேற்று செய்துவந்தார். 1961ம் ஆண்டு எனது திருமணத்தின் பின் கார்த்திகை விளக்கீட்டு திருவிழாவை, எங்களை பொறுப்பேற்றுச் செய்யும்படி எனது பெரியண்ணை அமரர் P.M. இராசரெத்தினம் கூறினார். அவரின் சொற்படி 1961ம் ஆண்டு எனது திருமணம் நடைபெற்று சிறிது நாட்களின் பின்வந்த கார்த்திகை விளக்கீட்டுத் திருவிழாவை நாங்கள் பொறுப்பேற்றுச் செய்தோம். 1961ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து ஐம்பது ஆண்டுகள் பொற்பதி விநாயகர் கோயில் விளக்கீட்டுத் திருவிழாவைச் செய்தோம். 1991ம் ஆண்டு இடம்பெயர்ந்து கொழும்பில் வந்து இருந்த போதும் கார்த்திகை விளக்கீட்டுத் திருவிழாவை செய்வதற்கான ஒழுங்குகளை செய்தோம். அதுவே மிகவும் பெரிய மனநிறைவு.

பொற்பதி விநாயகர் கோயிலின் வசந்த மண்டபத்தை சாமியார் அமரர். சோமாஸ் என்பவர் ஊர்மக்களின் உதவியுடன் பெரும் முயற்சி எடுத்து கட்டுவித்தார். வசந்த மண்டபம் கதவு போடப்படாமல் இருந்தது. வசந்த மண்டபக் கதவை நாங்கள் பொறுப்பேற்று செய்து போட்டோம். பின் அந்த கதவுக்கு எங்களுடைய புதிய வீட்டை கட்டிய மேஸ்திரியார், இராசாவை வரவழைத்து வருடா, வருடம் பெயின்ற் (Paint) அடிப்பித்தோம். பிள்ளையார் பெருங்கதை, ஆரம்ப நாள் திருவிழாவை எனது தாயாரின் சகோதரி குடும்பத்தினரான அமரர்கள் இராமசாமி, நாகம்மா தம்பதியினர் வருடா, வருடம் செய்து வந்தனர். அவர்களின் பின் அவர்களது மூத்த மகனான அமரர். பரராசசிங்கம் (மிருக வைத்தியர்) குடும்பத்தினர் வருடா, வருடம் செய்து வந்தார்கள். தைப்பூச திருவிழாவை எனது பெரிய தந்தையார் அமரர் வி. பொ. சின்னத்துரை (வெளிச்சம்) குடும்பத்தினர் செய்து வந்தார்கள்.



அருள்மிகு பொற்பதி விநாயகர் ஆலயம்

# கோணாவளை வைரவர் கோயிலும் ஸ்ரீ சாயி துர்க்கை அம்மன் கோயிலின் தொடக்கமும்

கோணாவளை வைரவர் கோயிலிலும் தினமும் காலை, மாலை பூசையை ஒரு வயோதிப ஐயர் செய்து வந்தார். அவருக்கு மந்திரங்கள் தெரியாது. தமிழில் சொல்லிப் பூசை செய்ததாக செல்லாச்சி, பெத்தாச்சி முன்பு சொல்லுவா. அர்ச்சனைக்கு காசு கொடுத்தால், வைரவர் பெருமானே செல்லாச்சி குடும்பத்தினர்கள் எல்லோரையும் காப்பாற்று என்று சொல்லி கற்பூர தீபம் காட்டி, தீபத்தைக் கொண்டுவந்து தொட்டுக் கும்பிட கொடுத்து, விபூதி பிரசாதம் கொடுப்பாராம். வருடா, வருடம் ஆனி மாதத்தில் அங்கு பொங்கல் பூசைகள் நடைபெற்றன. ஊர் மக்கள் அங்கு சென்று பொங்கல் செய்து, வடை சுட்டு வைரவருக்கு வடை மாலை போட்டு வணங்குவார்கள்.

கோணாவளை வைரவர் கோயிலுக்கு அண்மையில் ஒரு நெல்லி மரத்தின் கீழ் சூலம் வைத்து சிறிய காளி கோயில் ஒன்று இருந்தது. கோணாவளை பொங்கலின் அடுத்த நாள் அந்தக் காளி கோயிலில் கடாய்களை வெட்டி வேள்வி செய்வார்கள். வேள்விக்கு எங்கள் சுற்றாடலி லுள்ள மக்கள் மாத்திரமல்ல, கலட்டி, மேற்குக் கொக்குவில், ஆனைக்கோட்டை, தாவடி, ஆகிய இடங்களில் இருந்தும் தங்கள் கடாய் ஆடுகளைக் கொண்டு வந்து வெட்டிப் பலி கொடுப்பார்கள். எல்லோரும் தங்கள், தங்கள் வீட்டிலுள்ள வளர்ப்பு பிராணிகளான ஆட்டின் கடாய் குட்டிகளை நன்றாக உணவு கொடுத்து கொழு, கொழு என்று வளர்த்து, வேள்வியின் அன்று கொண்டு வந்து வெட்டி பலி கொடுப்பார்கள். தூரத்திலுள்ளவர்கள் தங்கள் கடாய் ஆட்டுக்கு நெற்றியில் பொட்டுவைத்து, கழுத்தில் மாலைபோட்டு, மாட்டு வண்டிகளில் ஏற்றிக் கொண்டு செல்வார்கள் அண்மையில் இருப்பவர்கள் எங்களுடைய குளங்கரை ஒழுங்கை ஊடாக அதேபோன்று பொட்டுவைத்து கழுத்தில் மாலைபோட்டு கால்நடையாகக் கொண்டு செல்வார்கள்.

எனது சின்னன்னை (அமரர். மாணிக்கவாசகர்) வேள்விக்கு கடாய் ஆடுகளை கொண்டு செல்வதைப் பார்த்து, ஒரு தாய் ஆடு தனது கடாய்குட்டி ஆடு திரும்பி வரவில்லை என்று கதறி அழுவது போல ஒரு பாடல் பாடுவார். பாடசாலையில் ஆசிரியர் ஒருவர் எழுதிப் பாடியதாக சொன்னார். இதோ அந்தப் பாடல்

**வன்னப்பொற்தேர் ஏறி, மாப்பிள்ளை போல் சென்றாயே,**
**என்னும் வரக்காணேன், எங்குற்றாய், எங்குற்றாய்,**
**பெண்ணை மணந்து எனது, பிள்ளை வருவான் என்று,**
**எண்ணி மகிழ்ந்திருந்து, ஏமாந்து போனேன் அடா,**
**ஆரைக் கழுத்தழகா, அஞ்சணப்பூங் கண்ணழகா,**
**கோலமருப்பழகா, மாராப்பு மேனியனே,**
**காலில் ஒரு பாவி, கழுத்தில் ஒரு மாபாவி,**
**கோலிப்பிடித்திருக்க, கழுத்து வெட்டு வெட்டினரோ,**
**ஆரை நினைந்தழுவேன், ஆ... என் கண்மணியே!**
**ஆரை நினைந்தழுவேன், ஆ... என் கண்மணியே!**

சிறிது காலத்தின் பின் ஊர்மக்கள் ஒன்றுகூடி கூட்டம் வைத்து, கடாய் வெட்டி வேள்வி செய்வது பாவச்செயல் என்று, வேள்வி செய்வதை தடுத்து நிறுத்திவிட்டார்கள். அந்தக் காளி கோயில் ஒழுங்கை ஊடாக போக்கு, வரவு செய்பவர்கள் போகும் போதும், திரும்பிச் செல்லும் போதும் காளி கோயிலடியில் தாமதித்து நின்று காளி ஆச்சியை வணங்கிச் செல்வார்கள். வெள்ளி, செவ்வாய் நாட்களில் கற்பூரம் ஏற்றி வணங்கி வந்தனர். அந்தக் காளி கோயிலுக்கு அண்மையில் வாழ்ந்த திரு. துளசி என்பவர் காளி ஆச்சிக்கு சிறிதாக ஒரு கோயில் அமைப்பதற்கு அயலவர்களின் உதவியை நாடினார். அயலவர்களும் உதவி செய்ததன் பிராகாரம் ஸ்ரீ சாயி துர்க்கை அம்மன் கோயில் என்ற பெயரில் கோயில் 1984ம் ஆண்டு அமைக்கப்பட்டு நாற்பது நாட்கள் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கும்பாபிஷேகம் நடைபெறுவதைக் கேள்விப்பட்டு கலட்டி, மேற்குக் கொக்குவில், தாவடி ஆகிய இடங்களிலிருந்தும் மக்கள் அங்கு வந்து ஸ்ரீ சாயி துர்க்கை அம்மனை தரிசித்தார்கள். அம்மனுக்கு நிறைய காணிக்கைகள் சேர்ந்தது. தினமும் காலை, மாலை பூசைகள் சிறப்பாக நடைபெற்றன. அந்த சுற்று வட்டாரத்தில் உள்ள மக்கள் தங்கள் குடும்பம் சார்பாக ஒவ்வொரு மாத பூசைகளை பொறுப்பேற்று செய்து வந்தார்கள். நாங்கள் சித்திரை மாத நித்திய பூசையை பொறுப்பேற்று செய்தோம். 1984ம் ஆண்டு ஸ்ரீ சாயி துர்க்கை அம்மன் கோயில் ஆரம்பித்த காலம் தொடக்கம் இருபது ஆண்டுகாலம் சித்திரை மாத நித்திய பூசைகளை பொறுப்பேற்று செய்து வந்தோம். கோயிலுக்கு அமரர். A. C வேலாயுதப்பிள்ளை (Retired Railway Guard) தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். தலைவரும் மற்றும் சுற்றாடலில் உள்ள வேறு சிலரும் கோயிலுக்கு அண்மையிலுள்ள தங்கள் காணியில் ஒரு பகுதியை ஸ்ரீ சாயி துர்க்கை அம்மன் கோயில் விஸ்தரிப்பதற்கு கொடுத்து உதவினார்கள். அதன் பின் கோயில் மண்டபத்தை பெரிதாக அமைத்து கொடித்தம்பம் வைத்து, கொடி ஏற்றம், தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா யாவும் நடைபெற்றன. திருவிழாக் காலங்களில் இரவு சின்னமணியின் வில்லுப்பாட்டு, பிரசங்கம் போன்றன நடைபெற்றன. தேர்த்திருவிழாவின் போது வருடா வருடம் அன்னதானமும் நடைபெற்று வந்தது.

நாங்கள் 1991ம் ஆண்டு இடம்பெயர்ந்த போதில் அமரர். A. C வேலாயுதபிள்ளை மூலம் சித்திரை மாத பூசைக்குரிய பணத்தை செலுத்தக் கூடியதாக இருந்தது. அதன்பின் அமரர். வேலாயுதபிள்ளை தனது குடும்பத்தினருடன் புலம்பெயர்ந்து பிரித்தானியா சென்று, தற்போது காலமாகிவிட்டார்.

# நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் கோயில்

நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் கோயில் எனது தாயாரின் பெற்றோர் களான அமரர்கள். செல்லப்பா, திருப்பதிப்பிள்ளை தம்பதியினர் வாழ்ந்த காலத்திலேயே அமைக்கப்பட்டது.

நாமகள் வித்தியாசாலைக்கு (தற்போதைய பெயர் நாமகள் வித்தியாலயம்) அண்மை யில் வாழ்ந்த அமரர். நடராசா ஐயர் என்பவர் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் கோயிலுக்கு உரிமையாளராக இருந்தார். அமரர் நடராசா ஐயருக்கு நான்கு பிள்ளைகள் இருந் தார்கள். அவர்களில் மூத்த பிள்ளைகள் மூவரும் பெண்களாவர். நான்காவது பிள்ளைதான் அமரர் கோபால் ஐயர் ஆவார்.

அமரர். நடராசா ஐயர் தனது மூத்த மகளான அமரர். ஜெகதாம்பிகையை, அமரர். நாகேஸ்வர ஐயரின் மகனான அமரர். முத்துக்குமாரசாமி ஐயருக்கு திருமணம் செய்து வைத்தார். அவர்களின் திருமணத்தின் பின் அமரர். நடராசா ஐயரும், மருமகனான அமரர். முத்துக்குமாரசாமி ஐயரும், நந்தாவில் கற்புலத்து மனோன்மனி அம்மன் கோயில் பூசைகளை சிறப்பாகச் செய்து வந்தனர்.

தினமும் காலை, மாலை பூசைகள் நடைபெற்றன. விசேட தினங்களான தைப்பொங்கல், தைப்பூசம், மாசிமகம், சிவராத்திரி, பங்குனி உத்தரம், சித்திரா பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆவணிச்சதுர்த்தி, நவராத்திரி பூசைகள், ஐப்பசி வெள்ளி, திருக்கார்த்திகை விளக்கீடு, பிள்ளையார் கதை இருபத்தொரு நாட்கள், திருவெம்பாவை பூசைகள் பத்து நாட்கள் ஆகியனவும் நடைபெற்றன.

மகா சிவராத்திரி தினத்தன்று வருடா வருடம் நான்கு சாமப் பூசைகளும் நடைபெறும். பக்தர்கள் விரதம் பிடித்து, அங்கு சென்று நித்திரை முழிப்பார்கள். ஊர் மக்கள் நிதி சேகரித்து சங்கீத கச்சேரிக் குழுவினரை வரவழைத்து மாலை ஆறு மணி தொடக்கம் அதிகாலை வரை சங்கீதக் கச்சேரிகள் நடைபெறும்.

பங்குனித் திங்கள் நாட்களில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் கோயிலில் வருடா, வருடம் பொங்கல் நடைபெறும். மக்கள் வெளிவீதியில் பொங்கல் செய்து, மோதகங்கள் அவித்து, அம்மனின் சந்நிதானத்தில் கொண்டு போய்ப் படைத்து, கற்பூரம் ஏற்றி வணங்கு வார்கள். பின் கோயிலில் வந்து நிற்கும் அடியார்களுக்கு பொங்கல் பிரசாதம் கொடுத்து, மிகுதியை தாங்கள் வீட்டுக்கு கொண்டு சென்று தங்கள் உறவினர்கள், அயலவர்களுக்கு கொடுத்து தாமும் உண்பார்கள்.

சித்திரா பௌர்ணமி அன்று மக்கள் ஒன்று சேர்ந்து, சித்திரைக் கஞ்சி காய்ச்சி, கோயிலுக்கு வருபவர்களுக்கு கொடுப்பார்கள். ஆனி மாதத்தில் கொடியேற்றம், தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா ஆகியன சிறப்பாக நடைபெற்றன. திருவிழாக் காலங்களில் இரவு பூசை நிறைவு பெற்றபின் வெளிவீதியில் மணி ஐயரின் பிரசங்கம் நடைபெறும். நவராத்திரி பூசைகளும் சிறப்பாக நடைபெற்றது. விஜயதசமி அன்று வருடா, வருடம் வாழை வெட்டும் நிகழ்வும் நடைபெற்று வந்தது.

அமரர். நடராசா ஐயர் காலமான பின் அவரது மருமகன் அமரர். முத்துக்குமாரசாமி ஐயர், கோயில் பூசைப் பொறுப்புகளை ஏற்று சிறப்பாகச் செய்து வந்தார். அமரர். முத்துக்குமார சுவாமி ஐயருக்கு குருக்கள் பட்டம் கிடைத்த பின் முத்துக்குமாரசுவாமி குருக்கள் என்று நாமம் சூட்டப்பட்டது. அமரர். முத்துக்குமாரசாமி குருக்கள் ஊர் மக்களின் வீடுகளில் நடைபெற்ற திருமணங்களை ஓமம் வளர்த்து சிறப்பாகச் செய்து வைத்துள்ளார். முற்காலத்தில் எல்லோரும் தங்கள் பிள்ளைகளுக்கு, தத்தமது வீட்டில் பந்தல் போட்டு, மணவறை வைத்து, குருக்களை அழைத்து, திருமணங்களைச் செய்துவைத்தார்கள். 1961ம் ஆண்டு காலப்பகுதியில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் சந்நிதானத்தில் சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைத்தார்கள்.

நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் கோயிலில் மணவறை வைத்து, ஓமம் வளர்த்து அமரர். முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் சிறப்பாக திருமணங்களைச் செய்து வைத்துள்ளனர். அறுபது ஆண்டுகளுக்கு முன் (6.Nov.1961) எனது தாயார் அமரர். செல்லமுத்துவின் விருப்பப்படி எனது திருமணமும், நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் சந்நிதானத்தில் நடைபெற்றது. அமரர். முத்துக்குமாரசாமி குருக்கள் எங்கள் திருமணத்தை ஓமம் வளர்த்து, சிறப்பாகச் செய்து வைத்தார்.

அமரர். முத்துக்குமாரசாமி குருக்களின் மறைவுக்குப் பின் அவரது மகன் ஜெயந்திநாத சர்மா, நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் பூசைகளை பொறுப்பேற்று செய்து வந்தார். ஜெயந்திநாதர் சர்மாவுக்கு குருக்கள் பட்டம் கிடைத்த பின் ஜெயந்திநாதர் குருக்கள் என்று அழைக்கப்பட்டார். திரு. ஜெயந்திநாதக் குருக்களும், அநேகமான திருமணங்களை வீடுகளிலும், நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் சந்நிதானத்திலும், ஓமம் வளர்த்து சிறப்பாகச் செய்து வைத்துள்ளார்.

1987ம் ஆண்டு இந்திய அமைதிப் படையினர் இலங்கைக்கு வந்திருந்த நேரம், ஒரு நாள் அதிகாலை நேரத்தில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் கோயிலுக்கு அண்மையில் ஏதோ அசம்பாவிதம் நடந்தது. ஊர் மக்கள் அனைவரும் அந்த நேரம் திகைத்துப் போய் செய்வதறியாது, கதிகலங்கி நின்றார்கள். அதன்பின் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் கோயிலுக்கு அண்மையில் வாழ்ந்த பொதுமக்களை விசாரித்தபோது, விபரம் அறிந்தோம். நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் கோயிலில் அன்று அதிகாலைப் பூசை நேரம் இந்திய அமைதிப் படையினர் கோயிலுக்குள் பிரவேசித்து, துப்பாக்கிப் பிரயோகம் செய்ததன் பிரகாரம், கோயிலில் கும்பிட்டுக் கொண்டிருந்த அமரர். சண்முகம் அமரர். A.G.A. குலேந்திரன் மற்றும் கோயிலில் அதிகாலை நேர பூசையை செய்துகொண்டிருந்த திரு.

ஜெயந்திநாதர் குருக்களின் சகோதரியின் மகனான அமரர். கண்ணன் ஐயர் ஆகியோருக்கு மரணம் சம்பவித்துவிட்டது எனக் கூறினார்கள். இதனைக் கேள்விப்பட்ட ஊர் மக்கள் அனைவரும் மிகுந்த கவலைக்குள்ளானார்கள்.

அந்த சம்பவத்தின் பின் திரு. ஜெயந்திநாதக் குருக்கள் குடும்பத்தினர் அனைவரும் இடம்பெயர்ந்து வவுனியாவுக்குச் சென்று அங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதன்பின் ஊர் மக்கள் நிர்வாகம் அமைத்து, வேறு ஐயரை பூசைக்கு அமர்த்தி கோயில் பூசைகள் நடைபெறுகின்றன. நிர்வாகத்தினர் ஊர் மக்களிடம் நிதி சேகரித்து நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் கோயிலை புனர் நிர்மானம் செய்து, கடந்த ஆண்டு திருக்குட நன்நீராட்டு (கும்பாபிஷேகம்) நடைபெற்றதாக அறிந்தோம்.



அருள்மிகு நந்தாவில் அம்மன் திருக்கோயில்

# கொக்குவில் கிழக்கு ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலை

எங்கள் கொக்குவில் கிழக்கில் ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலை, நாமகள் வித்தியாசாலை (தற்போதைய பெயர் நாமகள் வித்தியாலயம்) ஆகிய இரண்டு தமிழ் பாடசாலைகளும், கொக்குவில் இந்துக் கல்லூரி என்ற ஆங்கிலப் பாடசாலையும் அமைந் துள்ளன.

ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலையில் ஆரம்பத்தில் அமரர். இராசையா, கந்தையா (R. கந்தையா வாத்தியார்) தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்தார். அவருடன் அவரது துணைவியார் கனகம்மா கந்தையாவும் அங்கு ஆசிரியராகப் பணிபுரிந்தார். அவர்களுடன் அமரர். நடராசா வாத்தியார், அமரர். கனகசபை வாத்தியார், V. கந்தையா வாத்தியார், அமரர். கந்தையா வாத்தியார் (காந்தி வாத்தியார்) ஆகியோரும் அங்கு பணிபுரிந்தார்கள். ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலையில் அரிவரி வகுப்பு தொடக்கம், பத்தாம் வகுப்பு வரை மாணவர்கள் கல்வி கற்றார்கள். சனிக்கிழமைகளில் பால பண்டிதர் வகுப்பும் நடைபெற்றது.

காலையில் பாடசாலை ஆரம்பிப்பதற்கு அங்கு மணி அடிப்பார்கள். மணி அடித்தவுடன் மாணவர்கள் அனைவரும் இறை வணக்கம் செய்வதற்கு எழுந்து நிற்பார்கள். மாணவ மாணவிகளில் ஒருவர் தேவாரம், புராணம் ஆகியவற்றைப் பாடி “நமப் பார்பதி பதயே” என்று சொல்லுவார். ஏனைய மாணவர்களும் ஒருங்கிணைந்து “அரகர மகாதேவா” என்று சொல்லுவார்கள். தேவாரம் பாடிய மாணவர் மூன்று முறை “நமப்பார் பதிபதயே” சொல்லுவார். ஏனைய மாணவர்களும் ஒருங்கிணைந்து “அரகர மகாதேவா” என்று சொல்லுவார்கள். மாலையில் பாடசாலை விடுவதற்கு மணி அடித்தவுடனும் எழுந்து நின்று தேவாரம், புராணம் பாடி இறைவணக்கம் செய்தபின் தான் மாணவர்கள் தத்தமது வீடுகளுக்கு செல்வார்கள்.

ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலை ஆரம்பித்த காலத்திலிருந்து, மாணவர் களுக்கு, மதிய உணவாக பாணும், சம்பலும் கொடுத்து பசியாற்றினார்கள். மதியம் சாப்பாட்டிற்கு மணி அடித்தவுடன் சில மாணவர்கள் தத்தமது வீடுகளுக்குச் சென்று உணவு உண்பார்கள். கூடுதலான மாணவர்கள் அங்கு தங்கி நின்று மதிய உணவாக பாணும், சம்பலும் சாப்பிடு வார்கள்.

ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலை யில் வருடா, வருடம் தீபாவளிக்கு இரண்டு, மூன்று நாட்களுக்கு முன், வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவ - மாணவிகளுக்கு, சட்டை தைப்பதற்கு சட்டைத் துணிகளை கொடுத்து உதவினார்கள். அந்த சட்டை துணிகளை, கொக்குவிலைச் சேர்ந்தவர்களான அப்பையா, மயிலு (மயில்வாகனம்) ஆகிய புடவைக்கடை உரிமையாளர்கள் அன்பளிப்பாகக் கொடுத்து உதவினார்கள்.

நவராத்திரி விரத ஆரம்ப நாளுக்கு முதல் நாள், அங்கு கல்வி கற்கும் ஒன்பதாம், பத்தாம் வகுப்பு மாணவிகள் பாடசாலையில் அமைந்துள்ள, மேடை மற்றும் வகுப்பறைகள் அனைத்தையும், கூட்டி சுத்தம் செய்து, பின் தண்ணீர் ஊற்றி கழுவி விடுவார்கள். அதன்பின் நவராத்திரி விரத ஆரம்ப நாளன்று மேடையில் சரஸ்வதி தேவியின் படம் வைத்து கும்பம் வைப்பார்கள். விஜயதசமி அன்று அங்கு சரஸ்வதி பூசை நடைபெறும்.

விஜயதசமி அன்று பாடசாலையில் சரஸ்வதி பூசை செய்வதற்கு காசு சேர்ப்பதற்கு, அங்கு கல்வி கற்கும் மாணவ, மாணவிகளின் வீடுகளுக்கு வருவதாக, அவர்களின் பெற்றாருக்கு தலைமை ஆசிரியர் அறிவிப்பார். பெற்றார் ஒவ்வொரு குறிப்பிட்ட நாட்களைக் கூறி தங்கள் வீட்டிற்கு வரும்படி அழைப்பார்கள். மாலை பாடசாலை விட்ட பின் தலைமை ஆசிரியரும், உதவி ஆசிரியர் ஒருவரும் நான்காம், ஐந்தாம் வகுப்பில் கல்வி கற்கும் மாணவ, மாணவிகள் சிலரை அவர்களின் பெற்றாரின் அனுமதியுடன், ஒவ்வொரு வீட்டிற்கும், கூட்டிச் செல்வார்கள். ஒரு நாளில் இரண்டு, மூன்று வீட்டுக்கு கூட்டிச் செல்வார்கள். அடுத்த நாள் இரண்டு, மூன்று, நான்கு வீடுகளுக்கும், கூட்டிச் செல்வார்கள். இப்படியாக தங்களை அழைத்த பெற்றார்களின் அனைத்து வீடுகளுக்கும், மாணவ, மாணவிகளை கூட்டிச் செல்வார்கள். மாணவ, மாணவிகள் அழைத் தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டிற்குள்ளும் சென்றவுடன், கீழ்காணும் பாடலை பாடுவார்கள்.

**கன்னித்திங்கள், வருகுது அம்மா,**
**கருத்துடன் நவராத்திரியாம்,**
**கலைமகள் அம்மன் பூசைகள் செய்ய,**
**காசு பணம் வேண்டும்.**

இந்தப் பாடலைப் பாடி முடித்தவுடன், வீட்டு உரிமையாளர்கள் ஆசிரியர்களுக்கும், மாணவ மாணவிகளுக்கும் அவல், சுண்டல் போன்ற உணவுகளை உண்பதற்கு கொடுப் பார்கள். அதன்பின் சரஸ்வதிப் பூசை செய்வதற்கு தலைமை ஆசிரியரிடம் காசும் கொடுத்து மகிழ்ச்சியுடன் வழி அனுப்புவார்கள்.

சில வீடுகளில் மோதகம், வடை போன்ற, உணவுகளை உண்பதற்கு கொடுத்து, தேனீர், கோப்பி போன்ற பானங்களையும் கொடுத்து ஆசிரியர்களையும் மாணவ, மாணவிகளையும் களைப்பாற்றி வைத்து, சரஸ்வதி பூசை செய்வதற்கு தலைமை ஆசிரியரிடம் காசும் கொடுத்து, மகிழ்ச்சியுடன் அவர்களை வழியனுப்பி வைப்பார்கள். மழைகாலம் அந்திப்பொழுதில் குளிரையும் பொருட்படுத்தாமல் ஆசிரியர்களும், மாணவ, மாணவிகளும் சரஸ்வதி பூசை செய்வதற்கு, வீடு வீடாகச் சென்று பணம் சேகரித்து வருவார்கள்.

சரஸ்வதி பூசைக்கு முதல் நாள் பூசைக்கு வேண்டிய வெற்றிலை, பாக்கு, பழங்கள், கற்கண்டு, அரிசி, பயறு, கடலை, அவல், தேங்காய் எண்ணெய், கற்பூரம், ஊதுபத்தி ஆகியனவற்றை ஆசிரியர்களில் சிலர் கடைகளுக்குச் சென்று வாங்கி வருவார்கள். சரஸ்வதி தேவிக்கு படைப்பதற்கு உரிய உணவு வகைகளை ஒன்பதாம், பத்தாம் வகுப்பில் படிக்கும் மாணவிகள் தயாரிப்பாளர்கள். சரஸ்வதி பூசை சிறப்பாக நடைபெறும். மாணவிகள் சரஸ்வதி தேவிக்குரிய பாடல்களைப் பாடுவார்கள். பாடி முடித்ததும், கற்பூர தீபம் காட்டி, எல்லோரும் சரஸ்வதி தேவியை வணங்கிய பின் பூசையை நிறைவு செய்வார்கள்.

பூசை நிறைவு பெற்ற பின் தலைமை ஆசிரியர் ஒரு தாம்பாளத்தில் மஞ்சள் கலந்த அரிசியைப் பரப்பி சிறுவர்களுக்கு ஏடு தொடங்குவதற்கு ஆயத்தமாவார். பெற்றார் சிலர் தங்கள் பிள்ளைகளுக்கு ஏடு தொடங்குவதற்கு அங்கு கூட்டிக்கொண்டு வருவார்கள். தலைமை ஆசிரியர் சிறுவர்களை ஒவ்வொருவராகக் கூப்பிட்டு, அவர்களின் கையை பிடித்து, தாம்பாளத்தில் மஞ்சள் கலந்து வைத்திருக்கும் அரிசியில் “அ” எழுதச் செய்வார். பின் அவர்களுக்கு, கற்கண்டு கொடுத்து, “அ, ஆ” எழுதிய ஓலைச்சுவடி ஒன்றையும் கொடுப்பார்.

ஏடு தொடங்கி முடித்தபின், அங்கு வந்திருக்கும் பெற்றார்கள், சிறுவர்கள், மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், அனைவருக்கும் சரஸ்வதி தேவிக்கு படைத்த உணவுகளைக் கொடுப்பார்கள். அனைவரும் உண்டு மகிழ்ந்து தங்கள் வீடுகளுக்குச் செல்வார்கள். அங்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும், பத்தாம் வகுப்பு மாணவியில் ஒருவர் சிவபுராணத்தை ஒவ்வொரு வரியாக சொல்லிக் கொடுப்பார். அனைத்து மாணவ, மாணவிகளும் அதனைத் திரும்பச் சொல்லுவார்கள். சிவபுராணம் பாடி முடிந்ததும், வழமைபோல் தேவாரம், புராணம் பாடியபின் பாடசாலை ஆரம்பமாகும். எனது ஆரம்பக் கல்வியை அங்கு கற்றபோது இவையாவும் நடந்தன.




ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலை

# கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்

நாமகள் வித்தியாசாலையில் ஆரம்பத்தில் அமரர். கனகரெத்தினம் என்பவர் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்தார். அரிவரி தொடக்கம் ஐந்தாம் வகுப்பு வரை மாணவ, மாணவிகள் அங்கு கல்வி கற்றார்கள். அங்கும் பாடசாலை தொடங்குவதற்கு மணி அடித்தவுடன், தேவாரம் பாடி, இறைவணக்கம் செய்த பின் மாணவ, மாணவிகளுக்கு பாடம் ஆரம்பமாகும். மாலையில் பாடசாலை விடுவதற்கு மணி அடித்தவுடன் தேவாரம் பாடி, இறைவணக்கம் செய்தபின் மாணவ மாணவிகள் தத்தமது வீடுகளுக்குச் செல்வார்கள்.

நாமகள் வித்தியாசாலையிலும், விஜயதசமி அன்று சரஸ்வதி பூசை செய்வதற்கு காசு சேர்ப்பதற்கு, அங்கு ஆசிரியராகப் பணிபுரிந்த அமரர். சோமசுந்தர வாத்தியார் மாணவ, மாணவிகளின் பெற்றோரின் அனுமதியுடன் மாணவ, மாணவிகளை வீடுகளுக்கு கூட்டிச் சென்று காசு சேகரிப்பார். அமரர். சோமசுந்தர வாத்தியார் எனது பெரியண்ணை அமரர். P. M இராசரத்தினத்துடன் ஒன்றாகக் கல்வி கற்றவர். பெரியண்ணையின் உற்ற நண்பனும் கூட, அதன் காரணமாக நாமகள் வித்தியாசாலையில் சரஸ்வதி பூசை செய்வதற்கு, காசு சேர்ப் பதற்காக, அமரர். சோமசுந்தரம் வாத்தியார் மாணவ, மாணவிகளை எங்களுடைய வீட்டுக்கு கூட்டிக்கொண்டு வருவார். ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலை எனது ஆரம்ப பாட சாலை ஆதலால், தலைமை ஆசிரியர் அமரர். R. கந்தையா வாத்தியாரும், மாணவ, மாணவி களும் முதலில் எங்கள் வீட்டிற்கு காசு சேர்க்க வருவார்கள். இரண்டு, மூன்று நாட்களின் பின் நாமகள் வித்தியாசாலை ஆசிரியரும், மாணவர்களும் காசு சேர்க்க வருவார்கள். எங்கள் வீட்டில் இரு பாடசாலையினரையும் வரவேற்று, அவல், சுண்டல் போன்ற உணவுகளையும் உண்பதற்கு கொடுத்து, கோப்பியும் கொடுத்து உபசரித்து சரஸ்வதி பூசை செய்வதற்கு காசும் கொடுத்து வழி அனுப்புவார்கள்.

நாமகள் வித்தியாசாலைக்கு ஆரம்பத்தில் குறைந்த எண்ணிக்கையில் மாணவர் சென்றதனால், ஐந்தாம் வகுப்பு வரை தான் மாணவர்கள் அங்கு கல்வி கற்றார்கள். சிறிது காலத்தின் பின், மாணவர்களின் எண்ணிக்கை கூடுதலாக இருந்த போது அங்கு பத்தாம் வகுப்பு வரை மாணவர்களுக்கு கல்வி புகட்டப்பட்டது. எங்கள் குளங்கரை ஒழுங்கையில் வாழ்ந்தவ ரான அமரர். முத்துலிங்கம், திருமதி. சோதிப்பிள்ளை ஆகியோரின் மூத்த மகள் அமரர். யோகராணி (ரதி) நாமகள் வித்தியாசாலையில் பத்தாம் வகுப்பு வரை கல்வி கற்று, அங்கிருந்து பத்தாம் வகுப்பு பரீட்சை எடுத்து தேர்ச்சி பெற்றார். அதன் பின் எங்கள் அயலில் உள்ள சிறுவர்களுக்கு பாடம் சொல்லிக்கொடுத்தார். இதுவே உள்ளங்கையில் நெல்லிக்கனி போல் சான்றாக உள்ளது.

நாமகள் வித்தியாசாலை காணிக்குள் ஒரு பக்கத்தில், சிறிய ஒரு கட்டிடத்தில் நெசவு சாலை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அங்கு ஒரு ஆசிரியை பன்னிரெண்டு தொடக்கம் பதினைந்து வரையிலான மாணவிகளுக்கு நெசவு அடிப்பதற்கு பயிற்சி கொடுத்தார்.

பாடசாலைக்கும், நெசவு சாலைக்கும் எதுவித தொடர்புமில்லை. பத்தாம் வகுப்பு வரை கல்வி கற்றுவிட்டு, மேற்கொண்டு கல்வியைத் தொடர இயலாத மாணவிகளுக்கு தொழில் வாய்ப்புக் கொடுப்பதற்காக, கூட்டுத் தாபனம் மூலம் அந்த நெசவுசாலை அமைக்கப்பட்டதாக அறிந்தேன். பயிற்சி கொடுத்த ஆசிரியையும் மாதம், மாதம் ஊதியம் பெற்றார். பயிற்சி பெற்ற மாணவிகளும் அவர்களுக்கு தகுந்த ஊதியத்தை மாதம், மாதம் பெற்றுக் கொண்டார்கள்.

ஆசிரியையின் வழிநடத்தலின் கீழ் மாணவிகள் அனைவரும் சேலைகள், படுக்கை விரிப்புகள். ஆண்கள் அணியும் கயிலிகள் (சாரங்கள்) தைப்பதற்கு உரிய துணிகள், ஆகியவற்றை பல வர்ணங்களிலும் பல நிறங்களிலும் நெசவு செய்தார்கள். நெசவு சாலை அமைந்திருந்த சுற்றாடலில் உள்ளவர்கள், அங்கு நெசவு செய்த சேலைகள், படுக்கை விரிப்புகள், ஆண்கள் அணியும் கயிலி (சாரம்) தைப்பதற்குரிய துணிகள் ஆகியவற்றை உடனுக்குடன் தமது தேவைகளுக்கு விலை கொடுத்து வாங்கி பாவிப்பார்கள். வேறு இடங்களில் இருந்தும், சிலர் அங்கு சென்று தங்களுக்கு வேண்டிய சேலைகள், படுக்கை விரிப்புகள், கயிலி (சாரம்) தைப்பதற்குரிய துணிகள் ஆகியவற்றை செய்து தரும்படி முன்கூட்டியே சொல்லி வைத்து செல்வார்கள். அவர்களுக்கு குறிப்பிட்ட கால எல்லைக்குள் யாவற்றையும் நெசவு செய்வித்து, அங்கு பணிபுரியும் ஆசிரியை கொடுப்பார்.

நாங்களும் இதனைக் கேள்விப்பட்டு அங்கு சென்று, நெசவில் மாணவிகள் நெய்து கொண்டு இருக்கும் சேலைகள், படுக்கை விரிப்புகள், ஆண்கள் அணியும் கயிலி (சாரம்) தைப்பதற்குரிய துணிகளை பார்வையிட்டு, எங்களுக்கு விரும்பிய வர்ணங்களில் முன்கூட்டியே சொல்லி வைத்துவிட்டு வருவோம். ஆசிரியை எங்களுடைய வேண்டுகோளை ஏற்று, அவற்றை ஒரு குறிப்பிட்ட நாளில் நெய்து வைக்கின்றோம், வந்து பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறுவார். நாங்களும் குறிப்பிட்ட நாளில் அங்கு போய், அவற்றுக்குரிய பணத்தைக் கொடுத்து மிகுந்த மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொள்வோம். இவையாவும் நாங்கள் எங்களுடைய பிறந்த மண்ணில் வாழ்ந்த போது நடைபெற்றன. தற்போதைய நிலைமைகள் பற்றி எனக்குத் தெரியாது.

1970ம் ஆண்டு காலப்பகுதியில், கல்வி கற்று விட்டு தொழில் வாய்ப்பு எதுவும் இன்றி வீட்டிலிருந்த மாணவர்களின் குடும்பத்தினருக்கு அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட தொகை பணத்தை மாதா, மாதம் கொடுத்து உதவியது.

இந்த கொடுப்பனவை பெற்றுக் கொள்வதற்கு, கிராம சேவை அலுவலர் (விதானை) அலுவலகத்தில் அதற்குரிய மனுப்பத்திரத்தைப் பெற்று, அதனை நிரப்பி கிராமசேவை அலுவலரிடம் கொடுக்க வேண்டும். கிராம சேவையாளர் பத்திரத்தில் குறிப்பிட்டவையாவும் உண்மையானதா என்பதை விசாரித்து அறிந்த பின் சிபாரிசு செய்வார். சிபாரிசு செய்த மனுப் பத்திரங்களை கிராமசேவையாளர் கச்சேரியில் கொண்டுசென்று ஒப்படைப்பார். அதன்பின் ஒரு வீட்டில் ஒரு மாணவன் தொழில் வாய்ப்பு எதுவும் இன்றி இருந்தால் அவர்களுக்கு ஐம்பது (50) ரூபா மாதாந்த கொடுப்பனவாகவும், ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் தொழில் வாய்ப்பு எதுவுமின்றி வீட்டில் இருந்தால் நூறு (100) ரூபா மாதாந்தக் கொடுப்பனவாகவும், அவரவர் வீடுகளுக்கு அருகாமையிலிருக்கும் தபால் அலுவலகங்களுக்கு கச்சேரியிலிருந்து பணம் அனுப்பி வைத்தார்கள்.

பிரதான குடியிருப்பாளர்கள் ஒவ்வொருவரும் தபால் அலுவலகத்துக்குச் சென்று, அதற்குரிய பத்திரத்தில் கையெழுத்து இட்ட பின் அவர்களின் குடும்பத்திற்க்கு உரிய கொடுப்பனவை பெற்றுக் கொள்வார்கள். எனது கணவர் பணிபுரிந்த கோண்டாவில் தபால் அலுவலகத்திலும், இப்படியான கொடுப்பனவுக்கு உரிய பணத்தை பெற்றனர். பலர் அங்கு வந்து பெற்றுக்கொண்டார்கள் என்பது நிதர்சனம். முன்பு கூறிய நெசவுசாலையும் இப்படியான திட்டங்களில் ஒன்றாக அமைக்கப்பட்டிருக்கலாம்.



**கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்**

# கொக்குவில் இந்துக் கல்லூரி

கொக்குவில் இந்துக் கல்லூரி அமரர். செல்லையா வாத்தியார் என்பவரால் 1910ம் ஆண்டு புகையிரத வீதி (Station Road) கொக்குவிலில் உள்ள காணி ஒன்றில் சிறிய கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்டதாக அறிந்தேன். ஆரம்பத்தில் குறுகிய தொகை மாணவர்களுக்கு, ஐந்தாம் வகுப்பு வரையில் அங்கு கல்வி கற்பிக்கப்பட்டது. காலம் செல்ல செல்ல மாணவர்கள் தொகை கூடுதலாக இருந்தபடியால், அங்கு கூடுதல் வகுப்பறைகளை அமைத்து, அரிவரி வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை பாடங்களை தமிழிலும், ஆறாம் வகுப்பிலிருந்து S.S.C (Senior School, Certificate) வகுப்பு வரை தமிழ், சமய பாடம் தவிர்ந்த ஏனைய பாடங்களை ஆங்கிலத்தில் அங்கு கற்பித்தார்கள்.

சிறிது காலங்களின் பின் அங்கு மாணவர்கள் தொகை கூடிக்கொண்டே போனது, அப்போது பழைய மாணவர்கள், பெற்றோர் ஆகியோர்களின் ஆதரவில் புதுக்கோயிலுக்குப் பக்கத்தில் உள்ள பெரிய காணி ஒன்றை வாங்கி, அந்தக் காணிக்குள் ஓலையால் வேயப்பட்ட பெரிய கொட்டில்களை அமைத்தார்கள். பின் அந்தக் கொட்டில்களை ஓலையினால் கட்டப்பட்ட தட்டிகளால் A,B,C,D,E என்று ஒவ்வொரு வகுப்பு அறைகளாக பிரித்து, அதற்குள் Six standard first form, Second form, Third form, J.S.C ஆகிய வகுப்பு மாணவ, மாணவியர்களுக்குக் கல்வி கற்பித்தார்கள்.

ஆரம்ப காலத்தில் கட்டிய கட்டிடத்தில் அமைக்கப்பட்ட வகுப்பறைகளில் அரிவரி வகுப்பிலிருந்து, ஐந்தாம் வகுப்பு வரையிலுள்ள தமிழ் பள்ளிக்கூடமும் Prep S.S.C, S.S.C, H.S.C Junior, H.S.C Senior ஆகிய ஆங்கில வகுப்புக்களும் நடைபெற்றன. பழைய கட்டத்திலேயே இரசாயன ஆய்வுகூடம், பௌதிக ஆய்வுகூடம் (Physics Laboratory) ஆகியன இயங்கின. ஓலையால் (கிடுகு) வேயப்பட்ட கொட்டில்களில் அமைக்கப்பட்ட வகுப்பறைகள் யாவும் 1954ம் ஆண்டு தீக்கிரையாகிவிட்டன. அப்போது பணிபுரிந்த அதிபர், உப அதிபர் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் மனக்குழப்பம் அடையாமல் பாடசாலை வகுப்புக்களை இருபகுதிகளாகப் பிரித்து, காலை ஏழு மணி தொடக்கம் மதியம் வரை ஒரு பகுதி மாணவர்களுக்கும், மதியத்திலிருத்து மாலை ஆறு மணிவரை மறுபகுதி மாணவர்களுக்கும் கல்வி கற்பித்தார்கள். அதன் பின்னர் பழையமாணவர்கள், பெற்றார், பாடசாலை நலன் விரும்பிகள் ஆகியோரின் ஆதரவில், பாடசாலை கொட்டில்களில் அமைக்கப்பட்ட வகுப்பறைகள் இருந்த காணிக்குள் மூன்று மாடிக்கட்டிடங்களுடன் பரந்து விரிந்து கம்பீரமாக நிற்கின்றது.

மொழி, கலை கலாச்சாரங்களையும், சிறந்த கல்வி அறிவையும், நற்பண்புகளையும் புகட்டி தாயகத்திலும், வெளிநாடுகளிலும், பல அறிஞர்கள், கலைஞர்கள், விளையாட்டு வீரர்களையும் உருவாக்கிய பெருமைக்குரிய பாடசாலையாக கொக்குவில் இந்துக் கல்லூரி மிளிர்கின்றது. கடந்த 2010ம் ஆண்டு கொக்குவில் இந்துக் கல்லூரி நூறாவது ஆண்டுவிழாவை கொண்டாடியது.

## கொக்குவில் இந்துக் கல்லூரி கீதம் :

தெளிதரு கலைபயில் பல மாணவர்தேர்
கொக்குவில் இந்துக் கல்லூரி

கொக்கூர்க்கு இந்துக் கல்லூரிநீ தீபம்
கிராமத்துக் கொண்மணி மகுடம்.
நினதுயர் கலைமுறை நிதம் நிதம் பெற்றோம்
நினதருள் யாமினி மறவோம்.
நீயே வித்தை யினுறையுள் , நினதே எங்களினுயர்வு.
நினதடி யேத்து வோமே.

பல்லவி

நினதருள் மிகுமொழி நமதே பொருளாம் நீதரு ஞானம தீதம்
ஜெயஹோ! ஜெயஹோ! ஜெயஹோ! ஜெய, ஜெய, ஜெய , ஜெயஹோ!
நீ தரு ஞானம தீதம்.

அறிவுச்சுடர் கொண் டறம் பொருள் ளின்பம்
தழுவும் வாழ்வினைத் தந்தாய்
கற்றன ஒழுகும் சீருறு வழிநீ
காட்டினை நீடுக எனவே
அற்புத நடமா டமலன் அடிமனதொடுவழி படுவோம்
வழிமுறை மிளிர்க நின் நாமம்.

பல்லவி

நினதருள் மிகுமொழி நமதே பொருளாம் நீதரு ஞானமதீதம்
ஜெயஹோ! ஜெயஹோ! ஜெயஹோ! ஜெய, ஜெய, ஜெய , ஜெயஹோ!
நீ தரு ஞானம தீதம்.

உள்ளத்துறுதி தருவாயுன்றன்
பாரம் பரியம் பேண
பூமியில் நீபெறும் நல்லிசை மேலாம்
பெருமிதம் மாணவர்க் கென்றும்
முயல்குவம் நீயுயர் வழிகள் முழுமன தொடுமகிழ் வாக
கொக்குவில் இந்து நமதே.

நினதருள் மிகுமொழி நமதே பொருளாம் நீதரு ஞானமதீதம்
ஜெயஹோ! ஜெயஹோ! ஜெயஹோ! ஜெய, ஜெய, ஜெய , ஜெயஹோ!
நீ தரு ஞானம தீதம்

பாடசாலை சின்னத்தில் :

ஓம், விளக்கு, சங்கு, சக்கரம், தாமரை ஆகியனவும் கற்றதொழுகு என்ற வாசகமும் எழுதப்பட்டுள்ளது.

**ஓம் - இந்து சமய பண்பாட்டு ஒழுக்கத்தைக் குறிக்கிறது.**
**விளக்கு - அறிவை வளர்த்தலைக் குறிக்கின்றது.**
**சங்கு - மென்மையும் தூய்மையும் குறிக்கிறது.**
**சக்கரம் - தர்ம சிந்தனையை உணர்த்துகின்றது.**
**தாமரை - செல்வத்தையும், அழகையும், உயர்வையும் உணர்த்துகின்றது.**

கற்ற தொழுகு - கற்க வேண்டியவற்றை ஐயம் திரிபற கற்று, அதன்படி ஒழுக வேண்டும் என்பதை உணர்த்துகின்றது.




**கொக்குவில் இந்துக் கல்லூரி**

# கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

எங்கள் வீட்டிற்கு அருகாமையில் கிராம அரசினர் வைத்தியசாலை (Dispensary), கிராமக் கோடு (V.C), புகையிரத நிலையம் ஆகியன அமைக்கப்பட்டிருந்தன. கிராம அரசினர் வைத்திய சாலையில், வைத்தியர் ஒருவரும் மருந்தாளர் ஒருவரும் பணிபுரிந்தார்கள். காலை எட்டு மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரையும், பின் மாலை மூன்று மணி தொடக்கம் மாலை ஐந்து மணி வரை அங்கு நோயாளர்களுக்கு வைத்திய சேவைகள் நடைபெற்றன. கொக்குவில் கிழக்கில் உள்ள நோயாளர்கள் மட்டுமல்ல மேற்குக் கொக்குவில் தாவடி, கலட்டி, கோண்டாவில் திருநெல்வேலி ஆகிய இடங்களிலிருந்தும், நோயாளர்கள் அங்கு வந்து வைத்திய சேவை களைப் பெற்றுச் சென்றனர். 1977ம் ஆண்டு காலப் பகுதியில் தான் கோண்டாவில் கிழக்கில் கிராம அரசினர் வைத்தியசாலை அமைக்கப்பட்டது. அதன்பின் கோண்டாவில் மக்கள் அங்கு வந்து வைத்திய சேவைகளைப் பெற்றுக்கொண்டனர்.

கிராமக்கோட்டில் (V.C) மக்கள் தமது சோலைவரி, மின் கட்டணம், ஆகியன வற்றிற்குரிய பணத்தை அங்கு செலுத்தி, அவற்றிற்குரிய பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டார்கள். துவிச்சக்கரவண்டிப் பாவணையாளர்கள் வருடா, வருடம் அங்கு பணத்தைச் செலுத்தி துவிச்சக்கர வண்டிகளுக்கு இலக்கத் தகட்டை (Number Plate) பெற்றுக்கொண்டார் கள். கொக்குவில் கிழக்கில் வசிக்கும் மக்கள் மாத்திரமல்ல, கலட்டி, மேற்குக் கொக்குவில், கோண்டாவில் ஆகிய இடங்களில் இருப்பவர்களும், கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள கிராமக் கோட்டில் தான், தமது சோலை வரிப்பணம், மின்கட்டணம், துவிச்சக்கரவண்டிக்குரிய இலக்கத் தகட்டை பெற்றுக்கொள்வதக்குரிய பணம், ஆகியனவற்றைச் செலுத்தி பற்றுச்சீட்டுக் களைப் பெற்றுக்கொள்வார்கள். சிறுவர்களுக்கு அம்மைப்பால் கட்டுவது, போலியோ தடுப்பு மருந்து கொடுப்பது, ஆகிய சேவைகளும் அங்கு நடைபெற்றன.

கிராமக்கோட்டில் எப்போ அம்மைப்பால் கட்டுவது, எப்போ போலியோ தடுப்பு மருந்து கொடுப்பது என்பது பற்றி பறைசாற்றும் ஒருவர் கிராமக்கோட்டில் இருந்து துண்டுப் பிரசுரங்களை எடுத்துக் கொண்டு வந்து, சந்திக்குச் சந்தி பறைசாற்றி ஊர் மக்களுக்கு அறிவிப்பார். ஊர் மக்கள் “என்ன பறை அடிக்கும் சத்தம் கேட்கிறது” என்று தங்கள் வீடுகளிலிருந்து வெளியில் வந்து விடயத்தை அறிந்து கொள்வார்கள். பறை மூலம் அறிவித்தல் கிடைத்த பின், தங்கள் சிறுவர்களை அந்த குறிப்பிட்ட நாளில் அங்கு கூட்டிச் செல்வார்கள். கர்ப்பிணிப் பெண்களுக்கு மாதம், மாதம் அங்கு வைத்திய சேவையும் நடைபெற்றது. ஒரு வைத்தியரும் அங்கு சேவை செய்வதற்காக நியமிக்கப்பட்ட தாதியும், அங்கு வந்து கர்ப்பிணிப் பெண்களை பரிசோதித்து அவர்களுக்கு வேண்டிய வைடமின் மாத்திரைகள், திரிபோசா என்ற சத்துமாப் பொதி ஆகியவற்றை அவர்களுக்கு கொடுத்து செல்வார்கள்.

கொக்குவில் புகையிரத நிலையம் முன்பு எங்கள் வீட்டுக்கு அண்மையில் அமைக்கப் பட்டிருந்தது. தற்போது அதனை விஸ்தரிப்பதற்காக பிறவுண் வீதிக்கு அண்மையில்

அமைத்துள்ளார்கள். புகையிரத நிலையம் அமைக்கப்பட்டுள்ள இடத்திற்கு அண்மையில், கொக்குவில் மயானமும் (சுடுகாடு) இருக்கிறது. எனது பெற்றோர், சகோதரி, உற்றார் உறவினர், அயலவர்கள் அனைவரின் பூதவுடல்கள் அனைத்தும் அந்த மயானத்தில் தான் தகனம் செய்யப்பட்டன. எங்கள் கொக்குவில் மக்களின் பூதவுடல் மாத்திரமல்ல, கலட்டி, கந்தர்மடம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் வாழும் மக்களும் அங்கு தான் தமது உற்றார், உறவினர் ஆகியோரின் பூதவுடல்கள் அனைத்தையும் கொண்டு வந்து தகனம் செய்வார்கள். எங்கள் கிழக்கு கொக்குவிலில், தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு பல்வேறு கிராமங்களில் இருந்தும் மாணவர்கள் தொழில்நுட்பம் கற்றுக்கொள்வதற்கு வருவார்கள்.

எங்கள் கொக்குவில் கிழக்கில் அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்கு மூன்று பலசரக்கு கடைகள் இருந்தன. ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலைக்கு அண்மையில் அமரர். சீவரத்தினம் கனகசபாபதி (கடை அண்ணை கடை), பழைய புகையிரத வீதியில் (Old Station Road) அமைந்திருந்த அமரர். கந்தப்பிள்ளை கனகராசா கடை (கனகு அண்ணன் கடை) மற்றும் ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலை முன்னாள் தலைமையாசிரியர் அமரர் R. கந்தையா வாத்தியார் வீட்டிற்கு அண்மையில் அமைந்திருந்த Small கடை எனும் கடைகளாகும்.

இந்தக் கடைகள் இருந்ததனால் எங்கள் ஊர் மக்கள் தங்களுக்கு வேண்டிய அத்தியாவசிய உணவுப் பொருட்களையும், மற்றைய பொருட்களையும் சுலபமாக வாங்கி தங்கள் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது. இந்தக் கடைகள் அங்கு அமைந்திருக்காவிடில் எங்கள் ஊர் மக்கள் பல சிரமங்களின் மத்தியில் யாழ்ப்பாணப் பட்டணம் சென்று தான் தங்கள் அத்தியாவசியப் பொருட்களையும், மற்றைய பொருட்களையும் வாங்கி உபயோகிக்க வேண்டியிருந்திருக்கும். அமரர். சீவரத்தினம் கனகசபாபதி கடையில் அரிசி, மாவு, சீனி, பருப்பு வகைகள், பலசரக்கு, நல்லெண்ணை, தேங்காய் எண்ணெய், மண்ணெண் ணெய், ஆகிய அத்தியாவசிய பொருட்கள் விற்கப்பட்டது. முன் முகப்பிலுள்ள மேசையில் பெரிய போத்தல்களில் கறுவாப்பட்டை, தோடம்பழ இனிப்பு, பேரீச்சம்பழம், அரிசிப் பல்லிமுட்டை, ஆகியனவும் விற்பனைக்கு வைத்திருந்தார்கள். ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலை மாணவர்கள், பாடசாலை விட்டவுடன் அங்கு சென்று அவற்றை வாங்கி ஒருவருக்கொருவர் கொடுத்து மகிழ்ச்சியுடன் சாப்பிடுவார்கள். அமரர். சீவரெத்தினம் கனகசபாபதி கடை (கடை அண்ணை கடை) கூப்பன் கடையாகவும் செயல்பட்டது. மக்கள் கூப்பன் பொருட்களையும் அங்கு ஒவ்வொரு கிழமையும் பெற்றுக் கொண்டார்கள்.

எனது சிறுபராயத்திலிருந்தே அரசாங்கத்தினர் கூப்பன் மட்டைகளை விநியோகித்தது ஞாபகத்தில் உள்ளது. ஒவ்வொரு குடும்பத்திலும் ஆறு மாதக் குழந்தை தொடக்கம் அதற்கு மேற்பட்ட வயதினர் ஒவ்வொருவருக்கும் கூப்பன் மட்டைகள் விநியோகித்திருந்தார்கள். மக்கள் தங்கள் குடும்பத்திற்கு உரிய கூப்பன்களை ஒவ்வொரு கிழமையும் கடையில் கொண்டு போய் கொடுத்து அரிசி, பருப்பு வகைகள், சீனி, மண்ணெண்ணெய், போன்றவற்றை கட்டுப்பாட்டு விலைக்கு பெற்றுக் கொண்டார்கள். 1kg அரிசி - 56 சதம், 1kg சீனி - 56 சதம் இப்படியாக கூப்பன் புள்ளிகளை வெட்டிக்கொண்டு அத்தியாவசியப் பொருட்களை கடைக்காரர் கொடுப்பார். முக்கிய மாக வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்த மக்கள் பலருக்கு இது ஒரு வரப்பிரசாதம். 1978 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசாங்கம் கூப்பன் மட்டைகளை விநியோகிப்பதை நிறுத்தி விட்டார்கள்.

Small கடை அந்த சுற்றாடலில் உள்ள மக்களுக்கு மிகவும் வசதியாக இருந்தது. தேநீர் தயாரிக்கும் போது சீனி போத்தல் காலியாக இருந்தால் Small கடையில் ஓடிப்போய் வாங்கிக்கொள்ள சுலபமாக இருந்தது. ஊரடங்கு சட்டம் போட்டாலும் ஒழுங்கையில் அமைந்திருந்த Small கடையில் நினைத்த நேரம் சமையலுக்குத் தேவையான பொருட்களை மக்கள் வாங்கிப் பாவிப்பதற்கு மிகவும் வசதியாகவும் சுலபமாகவும் இருந்தது.

அமரர் கந்தப்பிள்ளை கனகராசா (கனகண்ணை கடை) கடையில் பாண், வாழைப் பழங்கள், அரிசி வகைகள், பருப்பு வகைகள், மா, சீனி, பலசரக்கு யாவும் வாங்கக் கூடியதாக இருந்தது. நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், பாடசாலை உபயோகத்துக்கு உரிய அப்பியாசக் கொப்பிகள், பென்சில்கள், ஆகியனவும் கடையில் விற்பனைக்கு வைத்திருந்தார்கள். ஊர் மக்கள் சிலர் அமரர். கந்தப்பிள்ளை கனகராசா கடையில் கொப்பி வைத்து அந்த கொப்பியில் தாங்கள் வாங்கும் பொருட்களை பதிவு செய்து, விலைகளை குறிப்பிட்டு எழுத்தில் வாங்கி கொள்வார்கள். மாத முடிவில் கணக்கை கூட்டி பார்த்து அதற்குரிய பணத்தை செலுத்தி கடை உரிமையாளரை வரவு வைக்கச் சொல்வார்கள்.

பிள்ளைகள் பாடசாலைக்கு போக அவசரப்பட்டால் கொப்பியை கொடுத்து கனகண்ணை கடையில் போய் பாணும், வாழைப்பழமும் வாங்கி வந்து சாப்பிடச் சொல்வார்கள். பாடசாலைக்கு ஆயத்தமாகும் நேரம் தமது பிள்ளைகள் அப்பியாசக் கொப்பி, பென்சில், கேட்டால் கனகண்ணை கடை பற்று வரவு கொப்பியை கொடுத்து, அங்கு போய் வாங்கிக் கொண்டு போகும்படி பெற்றோர் சிலர் கூறுவார்கள். கையில் பணப் புழக்கம் இல்லாத நேரம் கொப்பியில் கணக்கை எழுதி பொருட்களை வாங்குவதற்கு ஊர்மக்கள் சிலருக்கு கனகண்ணை கடை மிகவும் வசதியாக இருந்தது.

பழைய புகையிரத நிலையத்திற்கு மிக அண்மையில் தண்டவாளத்துக்கு மறுபக்கத்தில் இயக்கச்சி கனகண்ணையின் சிறிய தகப்பனார் அமரர். முத்துக்குமார் என்பவர் தேநீர் கடை வைத்திருந்தார். அங்கு தோசை, இடியப்பம், பிட்டு, ஆகிய உணவுகளும் வடை, சுண்டல், பகோடா, போன்ற சிற்றுண்டி வகைகளும் தயாரித்து விற்பனை செய்தார்கள். அவர்கள் கூலிக்கு வேலை ஆட்களை வைத்து உணவுகளை தயாரிக்காமல் சகல உணவுகளையும், தங்கள் குடும்பத்தினரே தயாரித்து விற்பனை செய்தார்கள். அங்கு தேநீர் தயாரிப்பு இடத்தின் முன் பகுதியில் வாழைப்பழக் குலையும் கட்டித் தூக்கியிருப்பார்கள். புகையிரத நிலையத்தில் வேலை செய்தவர்கள், பயணிகள், பயணம் அனுப்ப வருபவர்கள், கிராமக் கோட்டில் வேலை செய்பவர்கள், வழிப்போக்கர்கள் யாவரும் அங்கு சென்று உணவுகளை உண்டு, தேநீர் அருந்தி களைப்பாறுவார்கள்.

எங்கள் ஊர் மக்களும் தங்களுக்கு தேவை ஏற்படும் நேரங்களில் அமரர் முத்துக்குமார் கடைக்குச் சென்று தமக்கு வேண்டிய உணவுகளை வாங்கி தமது வீட்டிற்கு எடுத்துச் சென்று தனது குடும்பத்தினருடன் சென்று அவர்களுடன் உண்பார்கள். அவர்களுடைய தேநீர் கடைக்கு எதிர்பக்கமுள்ள தெரு ஓரமாக, கள்ளுத் தவறணை ஒன்றும் அப்பொழுது இருந்தது. அங்கு தினமும் “கள்” அருந்த வருபவர்களும், அங்கு சென்று வடை, சுண்டல், பகோடா, ஆகிய சிற்றுண்டிகளை கள்ளுக்கு பதமாக வாங்கிக்கொண்டு சென்று உண்பார்கள்.

இவை மாத்திரமல்ல சாவகச்சேரி, கொடிகாமம், ஆகிய இடங்களில் இருந்து கிடுகு வண்டிகள், பனையோலை மட்டை வண்டிகள், வைக்கோல் வண்டிகள், குடில் வைத்து புகையிலை உணர்த்துபவர்களின் தேவைக்கு கொச்சி, ஊமல், ஆகியன கொண்டுவரும் வண்டிகள் யாவும் அதிகாலையில் அங்கிருந்து புறப்பட்டு பின்னர் காலை பத்து மணியளவில் கொக்குவில் புகையிரத நிலைய வீதியை வந்தடையும். வண்டி ஓட்டுநர்களும், அவர்களுடன் உதவிக்கு வந்தவர்களும், தங்கள், தங்கள் வண்டிகளை அமரர் முத்துகுமார் கடைக்கு எதிர்பக்கமுள்ள தெருவோரத்தில் நிறுத்தி மாடுகளை காலார வைத்த பின், அவரது கடைக்குள் போய் அங்குள்ள உணவுகளை வாங்கி உண்டு, தேநீரும் அருந்தி களைப்பாறுவார்கள். அதன் பின் தமது வண்டிகளை குடிமனைகள் இருக்கும் இடங்களுக்கு கொண்டு சென்று கொண்டு வந்த பொருட்களை விற்பனை செய்தபின் ஊருக்கு திரும்பிச் செல்வார்கள். அவர்களுக்கு முத்துக்குமார் கடை ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருந்தது.

அதிகாலை ஆறு மணி தொடக்கம் இரவு ஒன்பது மணி வரை தேநீர்க் கடை வியாபாரம் மிகவும் சுறு சுறுப்பாக நடைபெற்றுக் கொண்டே இருக்கும். எனது சிறுபராய காலத்திலிருந்தே அவர்களின் தேநீர்க் கடை ஏறக்குறைய முப்பது வருடங்களுக்கு மேலாக செயற்பட்டுக் கொண்டிருந்தது. மாலை நேரங்களில் தேநீருடன் உண்பதற்கு எனது தாயார் வடை, பகோடா, சுண்டல், போன்ற சிற்றுண்டிகளை எங்களுக்கு செய்து தருவார். எங்கள் வீட்டில் எனது தாயார் செய்யும் பகோடாவிலும் பார்க்க அவர்களின் தேநீர் கடைப் பகோடா நல்ல வாசனையுடன் கூடிய சுவையாக இருக்கும்.

அந்தக் காலத்தில் அவர்களின் தேநீர்க் கடையில் பத்து சதம் கொடுத்து பகோடா தரும்படி கேட்டால், புதினப் பத்திரிகையின் தாளை கிழித்து சுருட்டி அதற்குள் ஒரு கை கொள்ளக் கூடிய அளவு பகோடாவைப் போட்டு பக்குவமாக மடித்துக் கொடுப்பார்கள். எனது சின்னண்ணை அமரர். மாணிக்கவாசகர் பாடசாலையில் படிக்கும் காலத்தில் சிலநேரங்களில் வெளியில் அவர்களின் தேனீர் கடைக்கு சென்று, இரண்டு பத்துச் சதங்ளைக் கொடுத்து, இரண்டு சரை பகோடா வாங்கி வந்து, எனக்கு ஒரு சரை பகோடாவை சாப்பிடத் தருவார். பகோடாவை வாங்கிச் சாப்பிட்டபடியால் தான் அதன் சுவை பற்றி இங்கு எழுதியுள்ளேன். அவர்கள் வயோதிபம் காரணமாக பின் தேநீர்க் கடை வியாபாரத்தை நிறுத்திவிட்டார்கள்.

ஒருமுறை எங்கள் பக்கத்து வீட்டில் வாழ்ந்த தியாகண்ணை (திரு. M. V. தியாகராசா) தனது மோட்டார் வண்டியில், நல்லூர்க் கந்தசாமி கோயிலுக்குச் சென்று கொண்டிருந்த போது, அமரர். முத்துக்குமாரும், அவரது பாரியாரும் கோயிலில் மாவிளக்கு போடுவதற்குத் தேவை யான பொருட்களை சுமந்து கொண்டு, கோணாவளை வீதி ஊடாக நடந்து சென்று கொண்டி ருந்தார்களாம். அவர்களைக் கண்டவுடன், தியாகண்ணை தனது மோட்டார் வண்டியை தெரு ஓரமாக நிறுத்தி, அவர்களை தனது வண்டியில் ஏற்றி கோயிலில் கொண்டுபோய் விட்டு, பின் திரும்பி கோயிலிலிருந்து வரும்போதும் தனது வண்டியில் ஏற்றிக்கொண்டு வந்து, அவர்களின் வீட்டிற்கு அண்மையில் விட்டாராம். வண்டியில் வந்துகொண்டு இருந்தபோது, பல கதைகளைக் கதைத்துக் கொண்டு வந்த தியாகண்ணை, இப்பவும் அந்தச் சுவையான பகோடா சுடுகிற நீங்களோ என்று அவர்களைக் கேட்டாராம். கேட்ட போது அவர்கள் தாங்கள், இப்போ வயோதிபம் காரணமாக தேநீர்க் கடை வியாபாரத்தை நிறுத்தி விட்டோம் என்றார்களாம்.

அதன் பின்னர் அன்று மாலை நேரத்தில், அமரர் முத்துக்குமார் பகோடா பொதி ஒன்றை தியாகண்ணை வீட்டிற்கு கொண்டு வந்து, தியாகண்ணையிடம் கொடுத்தாராம். தான் சும்மா கதைத்த போது அந்த சுவையான பகோடா பற்றி கேட்டேன் நீங்கள் அதனை சுட்டுக் கொண்டு வந்து விட்டீர்கள் என்று சொல்லி தியாகண்ணை அவரை உட்கார வைத்து தேநீர் கொடுத்து உபசரித்து அனுப்பி வைத்தாராம். இதிலிருந்து தமிழர்களின் நன்றியுணர்வும், பண்பாடும் விளங்குகிறது.

திரு. முருகண்டி வீட்டுக்கு பக்கத்து வீட்டில் முத்து ஆச்சி என்பவர் அப்பம் சுட்டு விற்றார். அவரிடம் அப்பம் தேவையானவர்கள் முதல் நாளே சொல்லிவைத்து, அடுத்த நாள் அதிகாலை யில் போய் அப்பங்களை வாங்கிச் செல்வார்கள். நாங்கள் "நாளைக்கு இத்தனை அப்பங்கள் தேவை" என்று சொல்லி வைத்தால், ஆச்சி அதிகாலையில் அப்பங்களை சுட்டு, ஓலைப்பெட்டியில் அடுக்கி, எங்கள் வீட்டில் கொண்டு வந்து தந்து விட்டு அதற்குரிய பணத்தை வாங்கிச் செல்வார்.

பொற்பதி வீதியிலுள்ள ஒரு வீட்டிலும் ஒரு ஆச்சி அப்பம் சுட்டு விற்றார். அவருக்கு முதுகு கூனல். நிமிர்ந்து நடக்க மாட்டார். அப்படி இருந்தும் தினமும் கூலி கொடுத்து அப்பத்திற்கு மாவு இடித்து அப்பம் சுடுவார். அவரிடமும் மக்கள் தமக்கு தேவையான போது போய் அப்பம் வாங்குவார்கள். அவரிடமும் இத்தனை அப்பம் தேவை என்று முதல் நாள் சொல்லிவைத்தால், அடுத்த நாள் அதிகாலையில் அவரது கணவர் அப்புவிடம் அப்பங்களை கொடுத்து அனுப்பி விடுவார். அப்பு கொண்டு வந்து தந்து விட்டு அதற்குரிய பணத்தை வாங்கிச் செல்வார். இவற்றில் இருந்து கொக்குவிலில் Home delivery சேவைகள் அந்தக் காலத்திலும் இருந்தது என்பது விளங்குகிறது.

முன்பு எங்கள் ஊரில் பனைக் காணிகள் நிறைய இருந்தன. 1948ம் ஆண்டு காலப் பகுதியில் தீவுப்பகுதி மக்கள் சிலர் (குறிப்பாக நெடுந்தீவு, புங்குடுதீவு) மக்கள் எங்கள் ஊருக்கு வந்து, வாடகை வீடுகளில் இருந்து கொண்டு, பனை வளங்களை சேகரித்து, தமது பொருளா தாரங்களை மேம்படுத்தினார்கள். அவர்கள் கொக்குவிலில் பனைக் காணிகள் வைத்திருக்கும் உரிமையாளர்களிடம் முற்பணம் செலுத்தி அவர்களின் காணியில் விழும் பனம் பழங்கள் அனைத்தையும் சேகரித்து தாங்கள் இருக்கும் குடியிருப்புக்கு கொண்டுபோய், அதன் மூலம் வருமானத்தை ஈட்டினார்கள். அநேகமாக ஆனி மாத பிற்பகுதியில் பனம் பழங்கள் விழத் தொடங்கும். அவர்கள் ஆண், பெண் இருபாலாரும் அதிகாலையில் எழுந்து உரப்பைகள், கடகங்கள் ஆகியவற்றைக் கொண்டுவந்து அங்கு விழும் பனம் பழங்களை பொறுக்கி எடுத்து, தமது குடியிருப்புக்கு அனைத்தையும் கொண்டு செல்வார்கள். இப்படியாக நாளாந்தம் விழும் பனம் பழங்களை பொறுக்கி எடுத்து, தமது குடியிருப்புக்கு அனைத்தையும் கொண்டு செல்வார்கள்.

நாளாந்தம் கொண்டு செல்லும் பனம் பழங்களின் தோல்களை உரித்த பின், பெரிய பாத்திரங்களில் போட்டு சிறிது தண்ணீர் விட்டு, பிசைந்து பனங்களி எடுத்து பெரிய பாய்களில் ஊற்றி, பரப்பி, பனாட்டு செய்வதற்கு, வெய்யிலில் காய விடுவார்கள். வெய்யிலில் ஒரு பக்கப் பனாட்டு காய்ந்தபின், மறுபக்கம் பனாட்டுத் தட்டுகளை பிரட்டி விட்டு காய விடுவார்கள். பனாட்டு தட்டுகள் நன்றாக வெய்யிலில் காய்ந்த பின் அவற்றை எடுத்து பக்குவமாக மடித்து, பக்குவப்படுத்தி வைப்பார்கள், தயாரித்த பனாட்டுக்களில் ஒரு பகுதியைப் பாணிப் பனாட்டு செய்வார்கள். பாணிப்

பனாட்டு செய்வதற்கு நாங்கள் கரணைக்கிழங்கு சமைப்பதற்கு சிறு, சிறு துண்டுகளாக வெட்டுவது போல, பனாட்டுத் தட்டுக்களை முதலில் சிறு, சிறு துண்டுகளாக வெட்டி வைப்பார்கள். அதன்பின் பனங்கட்டிகளை ஒரு பெரிய பாத்திரத்தில் வெட்டிப்போட்டு, அவற்றிற்கு அளவாகத் தண்ணீர் விட்டு, பாணி காய்ச்சி, காய்ச்சிய பாணிக்குள், சீரகம், மிளகு இரண்டையும் அளவாக எடுத்து, வறுத்து இடித்து அவற்றின் பொடியைப் போட்டு கலந்து ஆற விடுவார்கள்.

காய்ச்சிய பனங்கட்டி பாணி ஆறியபின், ஒரு பெரிய மண் பானைக்குள் வெட்டிய பனாட்டுத் துண்டுகளை போட்டு அதற்குள் காய்ச்சிய பனங்கட்டி பாணியை ஊற்றி, பானையின் வாய்ப்பகுதியை இறுக்கமாக ஒரு சுத்தமான துணியால், மூடிக் கட்டி பத்திரப்படுத்தி வைப்பார்கள். அவர்கள் காலை உணவாக, பனாட்டுத் துண்டுகளை கடித்துக்கொண்டு பழம் சோற்று தண்ணியை பருகுவார்கள். மாலையில் தேநீர் நேரத்தில், பாணிப் பனாட்டு துண்டுகளில் சிறிது எடுத்து சாப்பிட்டு தேநீர் அருந்துவார்கள். பனங்காய் பினைந்து பனங்களி எடுத்து, அதனுடன் கோதுமை மா அளவாகச் சேர்த்து குழைத்து, பனங்காய் பணியாரம் எண்ணெயில் போட்டு சுட்டெடுத்து சாப்பிடுவார்கள். எங்கள் ஊர் மக்கள் சிலர் அவர்களிடம், பனாட்டு, பாணிப் பனாட்டு ஆகியனவற்றை, பணம் கொடுத்து வாங்கி சாப்பிடுவார்கள் சிங்கப்பூரிலிருந்து எங்கள் ஊருக்கு வருபவர்கள், பாணிப் பனாட்டை யாழ்ப்பாணத்து சொக்கிலேற் என்று சொல்லி பணம் கொடுத்து வாங்கி சிங்கப்பூருக்கு கொண்டு செல்வார்கள். சிலர் தங்கள் உறவினர்களுக்கு அவர்களிடம் கொடுத்து அனுப்புவார்கள். அவர்கள் பத்திரப்படுத்திய பனாட்டுக்கள், பாணிப் பனாட்டுக்கள் முதலியவற்றை, தமது ஊருக்கும் கொண்டு செல்வார்கள்.

பனங்களி எடுத்த பின், பனம் விதைகளை தமது குடியிருப்பின் ஒரு பகுதியில் குவித்து வைத்திருப்பார்கள். பின் மண்ணை வெட்டி மேடாக்கி, அதன்மேல் பனம் விதைகளை அடுக்கி, பனம் பாத்தி போடுவார்கள். ஐப்பசி மாதத்தில் பனம் பாத்தி போட்டால் மழை காலம் தானே, பனம் விதைகள் யாவும் முளைத்து பனங்கிழங்குகள் வந்துவிடும். அநேகமாக தை மாதத்தில் பனங் கிழங்குகளை பிடுங்குவார்கள். பிடுங்கிய பனங்கிழங்குகளின் தோல்களை உரித்து, சுத்தம் செய்து ஒரு பகுதிக் கிழங்குகளை பச்சையாக கிழித்து, பாயில் பரப்பி வெய்யிலில் காயப்போட்டு ஒடியல் தயாரிப்பார்கள். மிகுதி பனங்கிழங்குகளை பெரிய பாத்திரத்தில் அடுக்கி தண்ணீர் விட்டு அவித்து, கயிறுகளால் கொடிகட்டி கொடிகளில் காய விடுவார்கள், அவித்துக் காயவிட்ட பனங்கிழங்குகள் தான் புழுக்கொடியல்.

ஒடியல், புழுக்கொடியல் யாவும் வெய்யிலில் நன்றாகக் காய்ந்த பின், பெரிய சாக்குகள், உரப்பைகள் ஆகியனவற்றுள் போட்டுக்கட்டி பத்திர படுத்துவார்கள். ஒடியலை சிறிய துண்டுகளாக முறித்து உரலில் போட்டு இடித்து மாவு எடுத்து, பிட்டு அவிப்பார்கள். கூழ் காய்ச்சி குடிப்பார்கள். புழுக்கொடியலை இளம் வயதினர் முறித்து துண்டு, துண்டாக்கி சாப்பிடுவார்கள். சிலர் அவற்றை சிறு துண்டுகளாக பாக்கு வெட்டியால் வெட்டி உரலில் அவற்றைப் போட்டு இடித்து மாவாக்கி, அதனுடன் தேங்காய்ப்பூ, சீனி முதலியவற்றை சேர்த்து இடித்து, சிறு, சிறு உருண்டைகளாக உருட்டி, தேநீர் நேரத்தில் உண்பார்கள். தீவுப்பகுதி மக்கள் எங்கள் ஊரின் பனை வளங்களின் மகத்துவத்தை அறிந்து, ஊர் விட்டு ஊர் வந்து தங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொண்டார்கள். தங்கள் கடின உழைப்பால் பொருளாதாரத்தை மாத்திரமல்ல, இப்படியான உணவுகளை தமது நாளாந்த உணவுகளுடன் தயாரித்து உண்டு தமது உடல் நலத்தை பேணிப் பாதுகாத்துக் கொண்டார்கள்.

நாங்கள் எங்கள் ஊரில் உள்ள பனை வளங்களின் மகத்துவத்தை தெரிந்துகொள்ளா மல், பாணை வாங்கி நிறைய தேங்காய்ப்பூவை போட்டு சம்பல் செய்து காலை உணவாக உண்டோம். நிறைய தேங்காய்ப் பாலை பிழிந்து ஊற்றி கறிகளை சமைத்து சாப்பிட்டோம். அதன் காரணமாக நாளாந்தம் எங்கள் உடம்பில் கொஞ்சம் கொஞ்சமாகக் கொழுப்பை சேகரித்து, இரத்தக் குழாய் அடைப்பு ஏற்பட்டு, நோய்வாய்ப்பட்டதுதான் மிச்சம். “புத்திமான் பலவான்” என்ற முதுமொழிக்கு அமைய அவர்கள் தமது உடல் நலத்தையும் பேணிப் பாதுகாத்து, தமது பொருளாதாரத்தையும், மேம்படுத்திக் கொண்டார்கள். “நாங்கள் சோம்பல் மிகக் கெடுதி பாப்பா” என்ற பாடலைப் படித்தோமே தவிர அதன்படி நடந்துகொள்ளத் தவறி விட்டோம். எனது அக்கா அமரர். இரத்தினம்மாவின் மகள் சிவநேசராணி எங்கள் வீட்டில் பிறந்திருந்த போது, அவர்களின் குடும்பத்தினருக்கு சமையல், மற்றும் உதவிகள் செய்வதற்கு, புங்குடுதீவிலிருந்து ஒரு ஆச்சியை கூப்பிட்டிருந்தார்கள். அப்போது உதவிக்கு அங்கு வந்த ஆச்சியின் மூத்த சகோதரி திருமதி. தெய்வானை சுப்ரமணியம் என்பவரின் குடும்பத்தினர் கொக்குவிலில் வாடகை வீட்டில் குடியிருந்தார்கள்.

அவர்கள் எங்கள் வீட்டிற்கு முன்னால் உள்ள பனைக்காணியின் உரிமையாளர்களிடம் முற்பணம் கொடுத்து வைத்து, பனம் பழங்கள் விழத் தொடங்கியவுடன், அவற்றைத் தினமும் பொறுக்கி எடுத்துக் கொண்டு போய், மிகவும் பிரயாசைப்பட்டு பனாட்டு, பாணிப் பனாட்டு, புழுக்கொடியல், ஒடியல் ஆகியவற்றைத் தயாரித்து பக்குவப்படுத்தி வைத்தார்கள். பின் அவற்றை தாமும் உண்டு எங்கள் ஊர் மக்களுக்கும் விற்பனை செய்து நிறைய வருமானங்களை பெற்றார்கள். எஞ்சியவற்றை தமது ஊருக்கு கொண்டு சென்று அங்குள்ளவர்களுக்கும் விற்று, தமது வாழ்க்கைச் செலவுகளுக்கு வேண்டிய வருமானத்தைப் பெற்றுக் கொண்டார்கள். பின் எனது அக்கா அமரர் இரத்தினம்மாவின் மகன் அமரர். இராஜேஸ்வரன் பிறந்திருந்த போதும், அக்கா அந்த ஆச்சிக்கு கடிதம் போட்டு உதவிக்கு வரும்படி கூப்பிட்டிருந்தா, அந்த ஆச்சிக்கு கடிதம் கிடைத்தவுடன், எங்கள் வீட்டுக்கு வந்து இரண்டு மாதங்கள் உதவி செய்வதற்கு தங்கியிருந்தா. அப்பொழுதும் அந்த ஆச்சியின் சகோதரி திருமதி. தெய்வானை, சுப்பிரமணியம் குடும்பத்தினர் கொக்குவிலில் வாடகை வீட்டில் இருந்தது. எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது.

# அன்பகம் ஆன்மீக நிலையம்

எங்களுடைய குளங்கரை ஒழுங்கைக்கு, வடக்கில் உள்ள நான்காவது ஒழுங்கையில் (கோயில் வீதி நான்காவது ஒழுங்கையில்) ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலையின் ஆரம்பகால தலைமை ஆசிரியர் அமரர். இராசையா கந்தையா (R. கந்தையா வாத்தியார்) அவர்களது வீடு அமைந்திருந்தது. தற்பொழுது அவரது மகன் திரு. கந்தையா சுசீந்திரன், தனது பெற்றாரின் பூர்வீக நிலத்தில், புதிய கட்டிடம் ஒன்றை அமைத்து, தனது பெற்றார் அமரர். இராசையா கந்தையா (இளைப்பாறிய அதிபர்) அவரது துணைவியார் அமரர். கனகம்மா கந்தையா (இளைப்பாறிய ஆசிரியர்) ஆகியோரின் ஞாபகார்த்தமாக "அன்பகம் ஆன்மீக நிலையம்" என்று பெயரிட்டு அங்குரார்ப்பணம் செய்துள்ளார். தான் பிறந்து வளர்ந்த ஊரில், தனது பெற்றாரின் பூர்வீக நிலத்தில், அவர்களது ஞாபகார்த்தமாக, இப்படி ஒரு நிலையம் அமைத்தது மிகவும் போற்றத்தக்க பெருமைக்குரிய விடயம். திரு. கந்தையா சுசீந்திரன் குடும்பத்தினர்களுக்கு எனது ஊர் மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் பாராட்டுக்களையும், மனம் நிறைந்த பொன்னான வாழ்த்துக்களையும் மனமகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கிறேன்.

அன்பகம் ஆன்மீக நிலையத்தில் ஆன்மீகம், உலகியல் வாழ்க்கை சார்ந்த சிறப்புரைகள் ஆற்றுவதற்கு ஒழுங்குகள் செய்துள்ளார்கள். கதிரையில் அமர்ந்திருந்து செய்யும் அப்பியாசங்களும், யோகாசனமும் அங்கு கற்றுக்கொடுக்கிறார்கள். மூத்தோருக்கு ஆங்கில மருத்துவம், ஆயுர்வேத மருத்துவம் சம்பந்தமான மருத்துவ ஆலோசனைகளை வழங்கும் வசதிகளையும் செய்து கொடுக்கிறார்கள். மக்கள் தாமாகவே பல விடயங்களைக் கற்று அறிந்து கொள்ளும் வகையில் நூலக சேவையும் ஏற்படுத்தி உள்ளார்கள். சமயம் சம்பந்தமான பெரியபுராணம், கந்தபுராணம், திருவாதவூரர் புராண உரைகள், போன்றனவற்றின் விளக்கம், திருக்குறள், திருமந்திர உரையும், விளக்கமும், மகாபாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசங்களின் உரைகளும் விளக்கமும் என்னும் பல விடயங்களையும் மக்களுக்கு இலவசமாக அறியத் தருகின்றார்கள்.

பொதுவாக மனிதர்களுக்கு உடம்பில் நோய் ஏற்பட்டால் அது பற்றியே சிந்தித்துக் கொண்டு கவலைப்பட்ட வண்ணம் இருப்பார்கள். இதனால் நோயின் தாக்கம் கூடிக் கொண்டே போகும் இப்படியான ஆன்மீக நிலையங்களுக்குச் சென்று மனதில் ஆன்மீக சிந்தனைகளை ஏற்படுத்தி கொள்வதால் நோயின் தாக்கம் குறைவடைந்து, புத்துணர்வு ஏற்படும். எமது இளைய சமுதாயத்தினரும் சமயம் சம்பந்தமான உரைகளைக் கேட்டு, பண்ணிசைகளை அங்கு கற்று சமயப்பற்று உள்ளவர்களாகவும், ஒழுக்கசீலர்களாகவும் வாழ்வார்கள். எங்கள் கொக்குவில் கிழக்கில் வாழ்ந்து கொண்டிருக்கும் மூத்தோர் மற்றும் இளைய சமுதாயத்தினர் அனைவருக்கும் திரு. கந்தையா சுசீந்திரன் குடும்பத்தினர் அமைத்துள்ள "அன்பக ஆன்மீக நிலையம்" பெரும் வரப்பிரசாதமாகும்.

இது மாத்திரமல்ல திரு. கந்தையா சுசீந்திரன் குடும்பத்தினர் ஸ்ரீ சாயி துர்க்கை அம்மன் கேயிலுக்கு அண்மையிலும் “யாழ் விசன் இந்து மன்றம்” என்ற பெயரில் பல வருடங்களுக்கு முன் பொது நிலையம் அமைத்துள்ளதாக அறிந்தேன். அங்கு மாணவர்களுக்கு இலவச பிரத்தியேக வகுப்புகளும், கலைத்துறை சம்பந்தமான சங்கீதம், நடனம், சித்திரம் ஆகிய வகுப்புக்களும் நடத்தப்படுகின்றன. அங்கு கற்கச் செல்லும் மாணவர்களுக்கு சீருடைகளும், உணவும் இலவசமாக வழங்குகிறார்கள். இப்படியான அரும்பெரும் சேவைகளினால் எமது இளைய சமுதாயத்தினர் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்குகிறார்கள் என்பது திண்ணம். மீண்டும் அவர்களின் சேவைகளுக்கு நன்றிகளையும், மனம் நிறைந்த பொன்னான வாழ்த்துக்களையும் மனமகிழ்வுடன் கூறிக்கொள்கிறேன்.

# கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்

குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கில் எனது பெற்றார் அமரர்களாகிய முத்துத்தம்பி செல்லமுத்து தம்பதியினரால் அமைக்கப்பட்ட "தனலட்சுமி வாசா" என்ற வீட்டில் ஆண்டாண்டு காலமாக எனது பெற்றார் அவர்களுடைய சந்ததியினரும் வாழ்ந்து வந்தோம். அந்த வீட்டின் ஒரு பகுதியில் எனது பெற்றாரின் மூத்த பூட்டனும், அமரர்களான சிவபாதசுந்தரம், இரத்தினம்மா தம்பதியினரின் மூத்த பேரனும், அமரர்களான குணரத்தினம், சிவநேசரத்தினம் தம்பதியினரின் மூத்த மகனும் ஆகிய திரு. குணரத்தினம் பார்த்தீபன் (தென்னவன்) "தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்" என்ற பெயரில் சிவமடம் ஒன்றை நிறுவியுள்ளார். அந்த சிவமடத்தில், தினமும் காலையிலும், மாலையிலும், செந்தமிழால் பூசைகள் நடைபெறுகின்றன. அடியேன் அங்கு பிறந்து வளர்ந்து, ஐம்பத்து நான்கு வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து அனுபவித்த எங்களுடைய பூர்வீக சொத்தில் "தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்" அமைக்கப்பட்டிருப்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைந்தேன். ஓம் சிவ சிவ ஓம். திரு. குணரத்தினம் பார்த்தீபனுக்கு எனது நன்றியையும், மனம் நிறைந்த பொன்னான வாழ்த்துக்களையும் மனமகிழ்ச்சியுடன் கூறிக் கொள்கின்றேன்.

நடேசர் சிலை, மனோன்மணி அம்மன் சிலை, மாணிக்கவாசகர் சிலை, குத்துவிளக்குகள், தூண்டாமணி விளக்குகள், போன்ற பெறுமதிமிக்க பொருட்களை அன்பளிப்புச் செய்துள்ளார்கள். மற்றும் சமயக்குரவர்கள், சித்தர்கள் ஆகியோரின் சிலைகளும், கருங் கல்லினால் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவர்களின் குருபூசைகள் திதி நட்சத்திரங்கள் வரும் நாட்களில், அவர்களின் உருவச் சிலைகளை அலங்கரித்து, அவர்களுக்கு விசேட பூசைகள் நடைபெறு கின்றன. அங்கு நடைபெறும் ஒவ்வொரு பூசைகளையும், ஒவ்வொரு உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் ஆகியோரின் குடும்பத்தினர் தாமாகவே முன்வந்து மனமுவந்து பொறுப் பேற்றுச் செய்து வருகின்றார்கள்.

தைப்பூசம், மாசி மகம், சிவராத்திரி, பங்குனி உத்தரம், சித்திரா பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆவணிச் சதுர்த்தி, புரட்டாசி மாலயம், நவராத்திரி பூசைகள், கார்த்திகை விளக்கீடு, திருவெம்பாவை, ஆகிய விசேட நாட்களிலும், பூசைகள், அலங்காரங்கள் அங்கு மிகவும் சிறப்பாக நடாத்துகின்றார்கள். புலம்பெயர்ந்த நாடுகளில் இருக்கும் உறவினர்கள், நண்பர்கள், அனேகமானோர், தமது பிதிர் காரியங்கள் யாவற்றையும் கொக்குவில் கிழக்கில் அமைந்திருக்கும் தென்னாட்டு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் செய்வதற்கு பணம் அனுப்புகிறார் கள். அங்கு பிதிர் காரியங்கள் யாவும் செய்யப்படுவதுடன், அவர்களின் வேண்டுகோளின் படி அங்குள்ள ஆதரவு அற்றவர்களுக்கு உணவுப்பொதி, உலர் உணவுப் பொதிகள் ஆகியவற்றை யும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்தும் கொடுக்கின்றார்கள். அடியார்கள் தங்களது கிரக தோசங்களை நிவர்த்தி செய்வதற்கு, தங்கள் கைகளினால் ஐம்பூத நாதருக்கு பால் அபிசேகம் செய்யக்கூடிய வசதிகளையும் சிவமடத்தில் செய்து கொடுத்துள்ளார்கள்.

பிரதோச விரதம் இருப்போர் தமது கைகளினால் ஐம்பூத நாதருக்கு பாலினால் அபிசேகம் செய்து, அன்றைய பூசையையும் தாமே பொறுப்பேற்று செய்து, அங்கு வரும் அடியார்களுக்கு உணவும் தமது பொறுப்பில் கொடுக்கிறார்கள். நுண்கிருமிகள் தொற்றின் காரணமாக மக்கள் தூர இடங்களில் அமைந்திருக்கும் கோயில்களுக்குச் சென்று வருவது மிகவும் சிரமம். தற்போது தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் அமைந்திருப்பது அங்குள்ள மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம். “தென்னாடு செந்தமிழ் ஆகம சிவ மடத்தில்” ஒவ்வொரு மாதமும் வரும் நிறைமதி (பௌர்ணமி) நாள்களில் சைவத்தமிழ் திங்கள் இதழ் இலவசமாக வெளியிடப்படுகின்றது. அநேகமானோர் இவ்விதழை வாசித்துப் பயன் அடைகின்றனர். தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் நடைபெறும் விசேட பூசைகளுக்கும் மற்றும் நாளாந்த பூசைகளுக்கும் மிகவும் அழகாக, சாத்துபடி அலங்காரங்களைச் செய்து வருபவர்களுக்கும் மற்றும் தினமும் காலை, மாலை, பூசைகளை செய்து வருபவர்களுக்கும், பூசை நேரத்தில் பூசை செய்வதற்கு உதவி செய்பவர்களுக்கும், எனது நன்றிகளையும், மனம் நிறைந்த பொன்னான வாழ்த்துக்களையும் மனமகிழ்வுடன் கூறிக்கொள்கின்றேன்.

விதியை மாற்றும் ஒரே ஒரு கடவுள் சிவன். முன்பு ஒரு நாள் திருநெல்வேலி சிவன் கோயில் குருக்கள் சொன்னது ஞாபகத்தில் வருகிறது. பெரிய, பெரிய வைத்திய நிபுணர்கள் கைவிட்ட நோயாளிகள் பலர் இங்குள்ள வைத்தியநாதர் ஆகிய சிவனிடம் வந்துதான் தமது நோய்க்கான மருந்தை கண்டுபிடித்து புத்துயிர் பெற்றுள்ளார்கள். என்று குருக்கள் கூறினார். இது உண்மையான கூற்று.

**அருமருந்து ஒரு நனி மருந்து.**
**அம்பலத்தில் கண்டேனே - தில்லை**
**அம்பலத்தில் கண்டேனே**
**திருமருந்துடன் பாக மருந்து**
**தில்லை அம்பலத்தாடும் மருந்து**
**இரு வினைகளை அறுக்கும் மருந்து**
**ஏழை அடியார்க்கு இரங்கும் மருந்து**
**கொன்றை தும்பை அணிந்த மருந்து**
**கோதை நீரில் படர்ந்த மருந்து**
**மண்றுள்ளே நின்றாடும் மருந்து**
**மாணிக்கவாசகர் கண்ட மருந்து**
**இந்திரன் ஆணவர் வானவரும் தானும்**
**இருதிகள் தமக்கு எட்டா மருந்து**
**சந்திரர் சூரியர் காணா மருந்து**
**தானே முளைத்து தழைத்த மருந்து**
**திருதித்தீ என்று ஆடும் மருந்து**
**தேவாதி மூவரும் கானா மருந்து**
**கருத்தை திருத்தி இருக்கும் மருந்து**
**காலனை காலால் உதைத்த மருந்து**

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் எழுந்தருள் புரியும் ஐம்பூதநாதர் இப்போது எங்களுக்கு குல தெய்வம் ஆகிவிட்டார். “இறை தரிசனம் இணையில்லா இன்பம்”

"ஊக்குவிக்க ஆள் இருந்தால் ஊக்குவிற்பவனும் தேக்குவிற்பான்" என்ற முதுமொழி ஒன்று உண்டு. அந்த முதுமொழிக்கு இணங்க எனது அக்கா அமரர். இரத்தினம்மா சிவபாதசுந்தரத்தின் மூத்த பேரனும் அமரர்கள் குணரத்தினம் சிவநேசரத்தினம் தம்பதியினரின் மூத்த மகனும் ஆகிய திரு. பார்த்தீபன் என்னை ஊக்குவிக்க, எனது ஊர் பற்றிய பழைய ஞாபகங்களை மீட்டிப் பார்த்து அங்கு நடந்தவை யாவற்றையும் என்னால் இப்போது இங்கு எழுத முடிந்தது. திரு. குணரத்தினம் பார்த்தீபனுக்கு எனது நன்றியையும், மனம் நிறைந்த பொன்னான வாழ்த்துக்களையும் மனமகிழ்வுடன் கூறிக்கொள்கிறேன். அடுத்ததாக எனது மகள் திருமதி. பாமினி தர்மதாசுக்கும் மனம் நிறைந்த நன்றிகள். ஊர் விடயங்கள் பற்றி திரு பார்த்தீபன் எழுதச் சொன்னவற்றை எழுதி விட்டீர்களோ என்று தினமும் என்னை ஊக்குவிக்க, நாளாந்தம் எனது ஞாபகத்தில் வரும் ஊர் பற்றிய விடயங்களை உடனுக்குடன் என்னால் எழுத முடிந்தது.

திருமதி. பாமினி தர்மதாசும், திரு. குணரத்தினம் பார்த்தீபனும், அவர்களது சிறு பராயத்தில் ஒரே வீட்டின் கூரையின் கீழ் ஒன்றாக விளையாடி, ஒன்றாக வளர்ந்தவர்கள். திருமதி. பாமினி சில சமயம் அழுதால், அப்போது பாமினியைப் பார்த்து பார்த்தீபனும் அழுவார். உடனே எனது அக்கா அமரர். இரத்தினம்மா பாமினியைப் பார்த்து "நீ அழுகிற படியால் உன்னைப் பார்த்து பார்த்தீபன் அழுகிறான்." நீ அழாமல் அவனுடன் விளையாடு, என்று சொல்லி சமயோசிதமாக பாமினியின் அழுகையை நிறுத்தி விடுவார். அப்போ சிறுபராயத்தில் பாமினி அழும்போது பார்த்தீபனும் அழுதார். இப்போ பார்த்தீபன் என்னை ஊக்குவிக்க, அவரைத் தொடர்ந்து பாமினி என்னை ஊக்குவிக்க, எனது ஊர் பற்றிய பழைய ஞாபகங்கள் அவர்கள் இருவரினதும் தூண்டுதல் காரணமாக எனது ஞாபகத்தில் வரிசைக் கிரமமாக அடுக்கடுக்காய் வந்து கொண்டே இருந்தன. திருமதி. பாமினி தர்மதாசுக்கும் எனது நன்றியை யும், மனம் நிறைந்த பொன்னான வாழ்த்துக்களையும், மனமகிழ்வுடன் கூறிக் கொள்கின் றேன். ஆரம்பத்தில் திரு. குணரத்தினம் பார்த்தீபன் எனது ஊர் பற்றியும் எனது உறவுகள் பற்றியும் எழுதும் படி என்னை ஊக்குவிக்காமல் இருந்திருந்தால். இவையாவற்றையும் என்னால் விரிவாக எழுதி இருக்க முடியாது. திரு. குணரத்தினம் பார்த்தீபனுக்கு மீண்டும் ஒருமுறை நன்றிகளையும், வாழ்த்துக்களையும் மகிழ்வுடன் கூறிக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**"மூத்தோர் சொல்லும், முது நெல்லிக் கனியும்"**
**முதலில் கசக்கும், பின்பு இனிக்கும்.**

# எனது சுயசரிதை

இராசகுல சேகரவேலப்ப முதலியார் விசுவநாதர் பொன்னம்பலம் முத்துத்தம்பி (V.P Muthuthamby) எனது தந்தையார் ஆவார். கொக்குவில் கிழக்கு சைவ வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர். அமரர். செல்லமுத்து, முத்துத்தம்பி எனது தாயார் ஆவார். இவர்கள் இருவருக்கும், குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள "தனலட்சுமி வாசா" என்ற வீட்டில் 1937ம் ஆண்டு இராஜேஸ்வரி அம்மாவாகிய அடியேன் கடைசி பிள்ளையாகப் பிறந்தேன். எனக்கு அமரர்களான P.M இராசரத்தினம், இரத்தினம்மா, மாணிக்கவாசகர் ஆகிய மூத்த உடன்பிறப்புகள் மூவர் இருந்தார்கள். அமரர் மாணிக்கவாசகர் எனக்கு பதினொரு வயதுக்கு மூத்தவர். பெற்றார், சகோதரங்கள் அனைவரும், என்னை மிகுந்த பாசத்துடனும், நேசத்துடனும் வளர்த்தார்கள். கடைசி பிள்ளையாதலால் செல்லப் பிள்ளையாக வளர்ந்தேன். எனக்கு ஐந்து வயதானதும் எனது பெற்றார் கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலையில் ஆரம்பக்கல்வி கற்பதற்கு அரிவரி வகுப்பில் என்னை சேர்த்தார்கள். அங்கு ஆரம்பக் கல்வி பயில சென்று மூன்று மாதங்களின் பின் எனது தந்தையார் நோய் காரணமாக இறைவனடி சேர்ந்துவிட்டார் பிள்ளைப் பராயம் ஆதலால் எனது தந்தை காலமான விடயம் பற்றி எதுவும் விளங்கிக் கொள்ளவில்லை.

எனக்கு நான்கு வயதில் எனது அக்கா அமரர் இரத்தினம்மாவுக்கு 1941ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. 1942ம் ஆண்டு மார்ச் (March) 28ஆம் தேதி அக்காவுக்கு, மூத்த மகன் அமரர் மகேஸ்வரன் பிறந்தார். அமரர். மகேஸ்வரன் பிறந்தவுடன் எனது தந்தையார் தனது நண்பனான அமரர் கனகரத்தினம் சாத்திரியாரிடம் குறிப்பு எழுதித் தரும்படி கொடுத்துவிட்டு மூன்றாம் (30.3.1942) நாள் பங்குனி உத்திரத்தன்று நோய் காரணமாக இறைவனடி சேர்ந்துவிட்டார். எனது தந்தையார் நோயுற்றிருந்த போதும், தானில்லாக் காலம் நாங்கள் மற்றவர்களுக்கு பின் செல்லக்கூடாது என்ற நோக்கில் எங்களுக்கு பெரிய காணியுடன் கூடிய வீடு, வங்கியில் பணம், நகைகள் வேறும் சில காணிகள் அனைத்தும் சேமித்து வைத்திருந்தார். அது மாத்திரமல்ல தான் சேமித்து வைத்திருந்த சொத்துக்கள் அனைத்தையும், ஒரு சட்டத்தரணியின் முன் கையெழுத்திட்டு, எனது தாயாரின் பெயருக்கு, உயிலும் (Last Will) எழுதி வைத்திருந்தார். இப்படி தனது மனைவி, பிள்ளைகள் மேல் அக்கறையுள்ள ஒரு புத்திசாலி தகப்பனுக்குப் பிள்ளையாக பிறந்ததையிட்டு பெருமைப்படுகிறேன். எனது தாயார் அவற்றைக் கொட்டாமல், சிந்தாமல், கட்டிக்காத்து எங்களை நன்றாக கல்வி கற்க வைத்து நற்பண்பு நல்லொழுக்கமுள்ள பிள்ளைகளாக வளர்த்தெடுத்தார். எனது சிறு பிராயத்தில் நடந்த இவ்விடயங்கள் யாவும் எனக்கு விபரம் அறிந்த வயதில் எனது அம்மா, எனது அக்கா இருவரின் மூலம் அறியக்கூடியதாக இருந்தது.

எனக்கு திருமணமான பின்பும் என்னைச் சந்தித்த ஒரு அம்மா "முத்து தம்பி மாமாவின் உதவியால்தான் நாங்கள் வீடு வாசல் காணி பூமியுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்" என்று கூறினார். வேறு சிலரும் எனது தந்தையார் அவர்களுக்குச் செய்த உதவிகள் பற்றி எனக்கு

கூறினார்கள். அவர்கள் இவற்றை எனக்கு சொன்னபோது ஒருபுறம் மகிழ்ச்சியாகவும், மறுபுறம் கவலையாகவுமிருந்தது. இப்படியாக மற்றவர்களின் நிலைமைகளை அறிந்து அவர்களுக்கு உதவிகள் செய்த தர்ம சிந்தனையுடைய, எனது தந்தையாரின் அன்பு, பாசத்தை எனக்கு விபரம் தெரிந்த வயதில் என்னால் அனுபவிக்க முடியாமல் போய்விட்டது என்பதுதான் எனது கவலைக்கு காரணமாகும். எனக்கு அரிவரி வகுப்பில் அமரர். வித்துவான் பொன் கனகசபை என்ற ஆசிரியர் ஆரம்பக் கல்வியை கற்பித்தார். அந்த ஆசிரியர் புங்குடுதீவைச் சேர்ந்தவர். தனது ஊர் புங்குடுதீவல்ல “பொன்கொடுதீவு” என்று அந்த வாத்தியார் அடிக்கடி சொல்லுவார். பாடசாலைக் குப் பக்கத்தில் உள்ள வீடொன்றை வாடகைக்கு எடுத்து அந்த ஆசிரியரும், மனைவியும் மகனும் அங்கு குடியிருந்தார்கள். வித்துவான் பொன். கனகசபை ஆசிரியர் பாடசாலை வளவுக்குள் இருந்த மாமரம் ஒன்றின் கீழ், எங்கள் வகுப்பு மாணவர்கள் அனைவரையும் அமரவைத்து அ, ஆ, ஒன்று, இரண்டு ஆகியனவற்றை முதலில் சொல்லித் தருவார். எங்களுடைய சிலேற்றில் எழுதும் படியும் சொல்லுவார். அதன்பின் ஒரு கதையை பாடலின் மூலம் அபிநயத்துடன் சொல்லித் தருவார்.

உதாரணத்திற்கு -

**காட்டில் ஒருவன், மரம் தறிக்க,**
**மரத்துள் பாம்பு, துரத்திவர,**
**ஓட்டமாக, அவன் ஓடி,**
**ஒரு மரத்தில், ஏறிக் கொண்டான்,**
**அந்த மரத்தில், ஒரு குரங்கு,**
**அவனை, உதைத்து விழுத்தியது,**
**முந்தின பாம்பு, விழுந்தவனை,**
**மூசி, மூசி கடித்ததுவே,**

இப்படியாக பாடலை, அபிநயத்தின் மூலம் சொல்லித் தரும்போது எங்கள் எல்லோருக்கும் அந்தக்கதை மனப்பாடம் ஆகிவிடும். இந்தப் பாடலை மூன்று நாள்களுக்கு திரும்பத் திரும்ப சொல்லித் தருவார். அதன்பின் வேறு ஒரு பாடலைச் சொல்லித் தருவார்.

**மாமா வீட்டு முத்தத்திலே,**
**மாமரம் ஒன்று நிற்கிறது,**
**பொன்னைப் போல பூப்பூக்கும்,**
**பூவிலின் உள்ளே, பிஞ்சிருக்கும்,**
**அணில்பிள்ளை வந்து கொந்தாமல்,**
**அடிப்பேன் தகரத்தை பிந்தாமல்,**
**மாமா என்னைக் கூப்பிட்டார்,**
**மாம்பழம் தந்தார் சாப்பிட்டேன்!**

இவை போன்ற பாடல்களை சிரித்துச் சிரித்து எங்களுக்கு அபிநயத்தின் மூலம் சொல்லித் தந்து, சொற்களைச் சேர்த்து சொல்வதற்கு கற்பித்து விடுவார். அரிவரி அதன் பின் முதலாம் வகுப்பு, அதன் பின் இரண்டாம் வகுப்பு. நாங்கள் இரண்டாம் வகுப்பில் படிக்கும் போதும் அவர் கேட்கும் கேள்விகளுக்குச் சரியாக பதில் சொல்லாத மாணவர்களுக்கு புறம் கையில் பிரம்பால் அடிப்பார். எனக்கு ஐந்தாம் வகுப்பு வரை வித்துவான் பொன் கனகசபை ஆசிரியர் தான் தமிழ் பாடம் படிப்பித்தார். கேட்கும் கேள்விகளுக்கு சரியாக பதில் சொல்வதனால், அடியேன் பாடசாலையில் படிக்கும் காலத்தில் எந்த ஒரு ஆசிரியரிடமும் அடி வாங்கவில்லை. எங்களுடைய வீட்டிலும் சிறு

பராயம் தொடக்கம், இன்று வரை எவரிடமும் அடி வாங்கவில்லை. இரண்டாம் வகுப்பின் பின் அங்கு நடராசா வாத்தியார், V. கந்தையா வாத்தியார், சர்மா ஐயர் வாத்தியார், திருமதி. கனகம்மா, கந்தையா, காந்தி வாத்தியார் ஆகியோரிடமும் கல்வி கற்றேன். தலைமை வாத்தியார் (சு. கந்தையா வாத்தியார்) ஆங்கிலம் கற்பித்தார். ஐந்தாம் வகுப்புப் பரீட்சை எடுத்தபோது, இலங்கை முழுவதிலும் உள்ள பாடசாலை மாணவர்களுக்குள், முதலாவது மாணவியாக தேர்ச்சி பெற்றேன். எங்கள் தலைமை ஆசிரியர் என்னை பாடசாலை மேடையில் ஏற்றி விட்டு, எனது திறமையை பாராட்டி பல பரிசுகள் தந்தார். அங்கு ஆறாம் வகுப்பு வரை கல்வி கற்றபின், ஆங்கிலத்தில் கல்வி கற்பதற்காக, கொக்குவில் இந்துக் கல்லூரியில் அனுமதி பெற்றுச் சென்றேன். கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆரம்பத்தில் சேர்ந்த போது, கீழே மணல், மேலே கிடுகினால் வேயப்பட்ட பெரிய கொட்டில்களை அமைத்து, கிடுகினால் கட்டப்பட்ட தட்டிகளினால் A,B,C,D,E என்று வகுப்பறைகளைப் பிரித்து அவற்றிற்குள் மேசைகள், வாங்குகளைப் போட்டு, அதற்குள் எங்களை வைத்து படிப்பித்தார்கள்.

அங்கு Six Standard வகுப்பில் என்னைச் சேர்த்தார்கள். தமிழ், சங்கீதம், சமய பாடம் தவிர்ந்த மற்றைய பாடங்களை ஆங்கில மொழியில் அங்கு கற்பித்தார்கள். எனது வகுப்பு ஆசிரியையின் பெயர் செல்வி. மேதர் (Miss. Methar) அவர் எங்களுக்கு ஆங்கில மொழியும் (English language) வீட்டுப் பணியும் (Home science) கற்பித்தார். Six Standard, first form, Second form, Third form, J.S.C ஆகிய வகுப்புகளை, ஓலைக் கொட்டில்களினால் அமைந்த, வகுப்பு அறைகளில் இருந்து படித்தேன். எல்லாப் பாடங்களிலும் கூடிய புள்ளிகளைப் பெற்று, முதலாவது மாணவியாக வந்தேன். 2015ம் ஆண்டு நாங்கள் எனது பெரியண்ணையின் மகள் திருமதி. இராகினி (Rahini) வீட்டுக்கு சென்றிருந்த போது, கொக்குவில் இந்துக் கல்லூரியில், என்னோடு படித்த மாணவன் (தற்போது ஓய்வு பெற்ற நில அளவையாளர்) அங்கு வந்திருந்தார். அவர் எங்கள் வகுப்பில் இரண்டாவது மாணவனாக வருவார். அவர் என்னை கண்டபோது, தான் ஒவ்வொரு முறையும் என்னை முந்தி முதலாவது மாணவனாக வருவதற்கு, முயற்சி செய்தும், என்னை முந்த முடியாமல் போய்விட்டது என்று சொன்னார். இப்போ பேரப்பிள்ளையும் கண்ட வயதில், எனது படிக்கும் காலத்து திறமை பற்றி அவர் எல்லோர் முன்னிலையிலும் கூறியது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

Prep S.S.C வகுப்பிலிருந்து H.S.C வகுப்பு வரை ஆரம்பத்தில் கட்டிய ஓடு போட்ட பாடசாலை கட்டிடத்திலுள்ள வகுப்பறைகளில் படித்தேன். அங்கு காலையில் வணக்கம் செலுத்துவதற்கு, பெரிய வணக்கத்துக்குரிய இடம் (Prayer hall) அமைத்திருந்தார்கள். மாணவர்கள் அனைவரும் அங்கு சென்று தேவாரம், புராணம் பாடி வணங்கிய பின்தான் வகுப்பறைகளுக்கு செல்வோம். அநேகமான நாட்களில் C.K கந்தசாமி மாஸ்டர் என்னை தேவாரம் பாடும்படி சொல்லுவார். உடனே "நத்தார் படை" என்று தொடங்கும் திருக்கேதீச்சரப் பதிகத்தைப் பாடுவேன். என்னை எப்போது தேவாரம் பாடச்சொல்லி சொன்னாலும் "நத்தார் படை" என்ற பாடல் தான் பாடுவேன். அடியேன் பாடசாலையில் படிக்கும் காலத்தில், எனது இரண்டாவது பெரிய தந்தையார் அமரர். வி. பொ. சின்னத்துரை (வெளிச்சம் சின்னத்துரை) குடும்பத்தினர் என்னையும், எனது தாயாரையும் தங்களுடன், திருக்கேதீச்சரம் கூட்டிச் சென்றார்கள். அங்கு சென்று பலாவியில் நீராடி திருக்கேதீச்சரப் பெருமானை வணங்கினோம். கோயிலில் உள்ள பெரிய பாத்திரங்களை எடுத்து சமையல் செய்து அங்கு வந்த அடியார்களுக்

கும் சமைத்த உணவை கொடுத்து நாங்களும் உண்டோம். அங்கு திருக்கேதீச்சரப் பெருமானை நோக்கி திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடிய திருக்கேதீச்சரப் பதிகங்கள் அச்சிடப்பட்ட பத்திரம் ஒன்று எனக்குக் கிடைத்தது. அன்றிலிருந்து இந்தப் பதிகத்தையே அடிக்கடி பாடுவேன். சில ஆண் மாணவர்கள் இதனால் எனக்கு "நத்தார் படை" என்று பட்டம் சூட்டி விட்டார்கள். பாடசாலையில் படிக்கும் வரை இந்த விடயம் எனக்கு தெரியாது. பின்பு தான் எனது பெரியண்ணையின் மூத்த மகன் திரு. இராச மகேஸ்வரன் மூலம் அறிந்தேன்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பும் இராச மகேஸ்வரன், ராமச்சந்திரன் (குட்டி மச்சான்) மற்றும் விஜயன் இருவரையும், ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் சந்தித்த போதும், அவர்கள் என்னைப் பற்றி விசாரித்தபோது "நத்தார் படை" என்ற விடயம் பற்றியும் கதைத்ததாகச் சொன்னார். பாடசாலையில் படிக்கும் காலத்தில் மாணவ, மாணவிகளுக்கு பலவிதமான பட்டங்களை சொல்லி ஆண் மாணவர்கள் கூப்பிடுவார்கள். ஆனால் எனக்கு திருஞானசம்பந்தர் பாடிய திருக்கேதீச்சரப் பதிகத்தை பட்டமாக சூட்டியது எதுவிதக் கவலையும் இல்லை. மகிழ்ச்சி அடைந்தேன்.

Six Standard வகுப்பு தொடக்கம் J.S.C வகுப்பு வரை எனக்கு செல்வி. மேதர், செல்வி. சுந்தராம்பிகை, செல்வி. சுகிர்தலட்சுமி (எனக்கு கற்பித்த போது) திருமதி. ஞானாம்பிகை, திருமதி. பார்கவி அம்மா (Lady Teacher) கொக்குவில் இந்துக் கல்லூரி ஆரம்பித்த காலத்தில் இவர் தான் ஒரே ஒரு பெண் ஆசிரியையாகப் பணி புரிந்தார். ஆகையால் இவரை ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும், இவர் பணியிலிருந்து ஓய்வு பெற்று செல்லும் வரை Lady Teacher என்று தான் சொல்வார்கள். திருமதி. சரஸ்வதி பாக்கியராசா (சங்கீத ஆசிரியை) திருமதி. இராசராஜேஸ்வரி கணேசலிங்கம் (R.G) ஆச்சி ரீச்சர், திரு. T. சின்னத்தம்பி, திரு. தில்லைநாதன், திரு. மயில்வாகனம், திரு. வாமதேவா, திரு. இராசநாயகம், திரு. இராமநாதன், திரு. A. கந்தசாமி திரு. சிவசோதி, திரு. கிருக்ஷ்ணபிள்ளை, திரு. A. அமிர்தலிங்கம். ஆகிய ஆசிரியர்கள் கல்வி கற்பித்தார்கள். Prep S.S.C வகுப்புத் தொடக்கம் H.S.C வகுப்பு வரை திரு மகேஸ்வர ஐயர், திரு. நடராசா, திரு.கந்தையா, திரு. வேலாயுதபிள்ளை, திரு. நாகலிங்கம், திரு. சபாலிங்கம், திரு. சிதம்பரநாதன், திரு. ஆ. சின்னத்தம்பி, திரு. மகாதேவா, திரு. நவசிவாயம் இடைக்காடர், திரு. செல்வநாயகம், திரு. G. K. கந்தசாமி ஆகியோர் கல்வி கற்பித்தார்கள். திரு Handy Perinpanayakam (அதிபர்) H.S.C வகுப்பில் General knowledge கற்பித்தார்.

எனக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்கள் அனைவரையும் இன்றுவரை நினைவு கூர்ந்து கொண்டே இருக்கிறேன். ஒருமுறை எங்கள் பாடசாலைக்கு, சிங்கப்பூரிலிருந்து திரு. குணரத்தினம் என்ற சைவப் பெரியார் வந்திருந்தார். அவர் எங்கள் பாடசாலையில் அமைந் துள்ள வணக்கத்துக்குரிய மண்டபத்தில் (Prayer hall ) சைவ சமயம் பற்றி சிறிது நேரம் உரையாற்றினார். அதன் பின் அவர் முருகன் பாடல் ஒன்றைப் பாடி அதனை மனனம் செய்து சொற்களை பிழையின்றி பாடுபவருக்கு பரிசு தருவதாகவும் கூறினார். அந்தப் பாடலை மூன்று, நான்கு முறைகள் திரும்பத் திரும்ப பாடினார். மாணவ, மாணவிகள் ஒவ்வொருவராக அவர் முன்னிலையில் சென்று அந்தப் பாடலைப் பாடினார்கள். எனது முறை வந்தது அந்தப் பெரியவர் பாடிய பாடலை எதுவித சொற் பிழையுமின்றி அடியேன் பாடினேன். எனது திறமையைப் பாராட்டி, அந்த பெரியார் எனக்கு பத்து ரூபாய் பரிசாகத் தந்தார். எனக்கு திறமைக்கு கிடைத்த பரிசை எண்ணி மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். எனது வகுப்பில் படித்த திரு. செல்வரத்தினம் என்ற

மாணவன் மூன்று சொற்களை தவறவிட்டுப் பாடினார். அவருக்கு இரண்டாவது பரிசாக ஐந்து ரூபா பணத்தை அந்தப் பெரியார் கொடுத்தார்.

இதோ அந்த பாடல்-

**பாவட்டம் சோலைக்குள்ளே நீலமயில்,**
**வாய்விட்டுக் கூவுதையா,**
**அதைப் பிடித்துத் தாரும் காணோம்,**
**முருகா திருத்தணிகை மலை வேலவனே,**
**கல்லு மலை மேலே கெளதாரி**
**மெல்ல நடக்குதையா,**
**அதைப் பிடித்துத் தாரும் காணோம்**
**முருகா திருத்தணி மலை வேலவனே**
**நேற்று கொடுத்த பணம் நெல்லுக்குச் செல்லவில்லை**
**அதை மாற்றி அமைத்து தாரும்**
**முருகா திருத்தணிகை மலை வேலவனே**
**எட்டடி வீட்டுக்குள்ளே எப்படி நான் இருப்பேன்**
**மச்சுவீடு கட்டித் தாரும்**
**முருகா திருத்தணிகை மலை வேலவனே!**

கனடாவில் திரு. திருமதி. கோணேஸ்வரன், பத்மினி குடும்பத்தினரால் நடாத்தப்பட்ட சர்வதேச தமிழ் வானொலி நிகழ்ச்சி ஒன்றிலும் இந்தப் பாடலை பாடுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த நிகழ்ச்சியை நடாத்திய அறிவிப்பாளர், எல்லா நேயர்களுக்கும் பொதுவாக ஒரு கேள்வி கேட்டார் அதாவது நீங்கள் பாடசாலையில் படிக்கும் காலத்தில் நடந்த விடயம் ஒன்றினை ஞாபகப்படுத்திக் கூறுங்கள் என்பது தான் கேள்வி அப்பொழுது நேயர்கள் ஒவ்வொருவராக வானொலி இணைப்பை ஏற்படுத்தி தாங்கள் பாடசாலையில் படித்த காலத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் பற்றிக் கூறினார்கள். அடியேனும் வானொலி இணைப்பை ஏற்படுத்தி மேலே கூறிய நிகழ்வு பற்றிக் கூறி இந்தப் பாடலை பாடினேன்.

பாடசாலைக் காலத்தில் மனனம் செய்த பாடலை இன்றுவரை ஞாபகத்தில் வைத்துப் பாடிய என்னை அந்த அறிவிப்பாளர் பாராட்டி வாழ்த்துக்களை கூறினார். அறிவிப்பாளரைத் தொடர்ந்து, நேயர்களும் வானொலி இணைப்பை ஏற்படுத்தி எனக்கு வாழ்த்துக்களை கூறினார்கள். இதனைச் செவிமடுத்த எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. Prep S.S.C வகுப்பு படிக்க ஆரம்பிக்கும் போது அங்கு வகுப்புகள் நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டன. Physical science (பௌதீக விஞ்ஞானம்) Bio science (உயிரியல் விஞ்ஞானம்) Arts (பல்கலை) Commerce (வர்த்தகம்) ஆகியன. எனக்கு (Physical science) பௌதிக விஞ்ஞான வகுப்பில் படிப்பதற்கு விருப்பமாக இருந்தபடியால், அந்த வகுப்பில் படித்தேன். அந்த வகுப்பில் ஆங்கிலம், தமிழ், சமய பாடம், தூய கணிதம், பிரயோக கணிதம், உயர் கணிதம், பௌதீகம் இரசாயனவியல் ஆகிய எட்டுப் பாடங்களை எங்களுக்கு கற்பித்தார்கள். பின் S.S.C வகுப்பிலும் இந்த எட்டுப் பாடங்களைத்தான் கற்றேன்.

S.S.C. வகுப்பில் படித்த காலத்தில் எங்களுக்கு ஆடி மாதத்தில் ஒரு பரீட்சை (Application Test) வைப்பார்கள். அந்தப் பரீட்சையில் கூடிய புள்ளிகள் பெற்றால் தான் S.S.C

(Senior School Certificate) பரீட்சை எடுப்பதற்குரிய அனுமதிப் பத்திரத்தில் கையெழுத்து இடுவதற்கு பாடசாலையில் அனுமதிப்பார்கள். அதன்பின் ஐப்பசி மாதத்தில் இரண்டாம் முறையாக ஒரு பரீட்சை வைப்பார்கள். அந்தப் பரீட்சையிலும் ஐந்து பாடங்களேனும் திறமைச் சித்தி பெற்றால் தான், பரீட்சை எழுதுவதற்கு அனுமதி கிடைக்கும். குறைவான புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை பரீட்சை எழுத அனுமதிக்க மாட்டார்கள். அனுமதி கிடைக்காத மாணவர்கள் அடுத்த ஆண்டு திரும்ப ஆடி மாதப் பரீட்சை, ஐப்பசி மாதப் பரீட்சை எடுத்து அதில் கூடிய புள்ளிகள் பெற்றால் தான் S.S.C பரீட்சை எடுப்பதற்கு அனுமதி பெற்றுக்கொள்ள முடியும். S.S.C பரீட்சை மார்கழி மாதத்தில் நடாத்துவார்கள். பரீட்சை பெறுபேறுகள் பங்குனி மாதம் தான் வரும். அதுவரை ஐப்பசி மாதத்தில் எழுதிய பரீட்சையில் ஐந்து பாடங்கள் திறமை சித்தி பெற்றவர்களை அடுத்த ஆண்டு தை மாதத்தில் H.S.C Junior வகுப்பில் படிக்க அனுமதிப் பார்கள். எங்கள் ஊரில் அமரர் சின்னத்தம்பி என்று ஒரு ஐயா இருந்தார். பின்வருவது போல கூறுவார். “S.S.C. சோதனை எடுக்கிற என்றால் என்ன விளையாட்டே, பள்ளிக்கூடத்தில் ஆடி மாதத்தில் ஒரு சோதனை வைத்து மாணவர்களை ஒருவடி வடிப்பார்கள். அதன்பின் ஐப்பசி மாதத்தில் ஒரு சோதனையை வைத்து இரண்டாம் வடி வடிப்பார்கள். அந்த இரண்டு வடிகளுக்கும் மாணவர்கள் தப்பினால் தான் S.S.C சோதனை எடுக்க முடியும் என்பார்.”

S.S.C பரீட்சை நடைபெறுவதற்கு இரண்டு கிழமைகளுக்கு முன் பாடசாலை விடுமுறை விடப்பட்டு விடும் பாடசாலை விடுமுறை விடுவதற்கு முன், கேள்வி பதில்கள் எழுதி வைத்திருந்த எனது சமயபாட அப்பியாச புத்தகத்தை (Exercise Book) யாரோ திருட்டுத்தன மாக எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். S.S.C பரீட்சை எழுதப் போகும் முன்சமய பாட கேள்வி, பதில்களை எழுதி வைத்திருந்த அப்பியாச புத்தகத்தை ஒருமுறை புரட்டிப் பார்க்க முடியாத நிலைமையாகிவிட்டது. ஏதோ இறைவன் திருவருளால் அனைத்து சமய பாடக் கேள்வி களுக்கும் எனது ஞாபகத்தில் இருந்த பதில்களை எழுதிவிட்டு வந்தேன் பரீட்சை முடிவுகள் பங்குனி மாதத்தில் வந்தன எனக்கு சமய பாடத்திற்கு அதிதிறமை சித்தி கிடைத்திருந்தது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

| | | |
|---|---|---|
| English | O | Odinary pass (சாதாரணம்) |
| Physics | O | Odinary pass (சாதாரணம்) |
| Advance Maths | O | Odinary pass (சாதாரணம்) |
| Pure Maths | C | Credit Pass (திறமை) |
| Applied Maths | C | Credit Pass (திறமை) |
| Chemistry | C | Credit Pass (திறமை) |
| Tamil | C | Credit Pass (திறமை) |
| Religion | D | Distinction (அதி திறமை) |

H.S.C வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போது எங்கள் வீட்டில் எனக்கு திருமண பேச்சு ஆரம்பித்துவிட்டார்கள். எனது வகுப்பில் என்னுடன் படித்த மாணவிகள் சிலர் தங்களது உறவினர்கள் என்னைப் பற்றிய விபரங்களை விசாரித்ததாக கூறினார்கள். இவற்றை கேள்விப்பட்டதும், சக மாணவிகள் என்னை கேலி கிண்டல் செய்ததனால், பாடசாலைக்கு போகாமல் வீட்டில் நின்று விட்டேன். வீட்டில் நின்றபோது அயலவர்கள், உறவினர்கள், ஆகியோருடைய பிள்ளைகள் சிலர் என்னிடம் வந்து தங்களுக்கு விளங்காத பாடங்களை

கேட்டுப் படித்தார்கள். ஏற்கனவே எங்களுடைய வீட்டில் பிறந்து வளர்ந்த அமரர்களான மகேஸ்வரன், சிவநேசரத்தினம், ஞானேஸ்வரன், சுதந்திர ஈஸ்வரன் ஆகியோருக்கு எங்கள் வீட்டுத் திண்ணையில் அவர்களது தந்தையார் அமரர். சிவபாதசுந்தரம் மணலை ஒரு இடத்தில் பரப்பி விட்டு இவர்களுக்கு கைவிரல் தேயத் தேய அ, ஆ எழுதிப் பழக்கச் சொன்னார். அ, ஆ எழுதப் பழக்கியது தொடக்கம். பத்தாம் வகுப்பு வரை அவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுத்தேன். என்னிடம் பாடம் கேட்டு படித்தவர்களில் அநேகர் பட்டம் பதவிகள் பெற்று, சிறப்பான தொழில் வாய்ப்புகளையும் பெற்று வாழ்ந்தார்கள்.

பாடங்களைச் சொல்லிக் கொடுத்தது மாத்திரமல்ல அடியேன் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே அண்ணையின் பிள்ளைகள், அக்காவின் பிள்ளைகள், சின்னண்ணையின் பிள்ளைகள் அனைவருக்கும் வேண்டிய உடைகளை அழகாக தைத்துக் கொடுத்தேன். அத்துடன் அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரும் சட்டைத் துணிகளை வாங்கிவந்து என்னிடம் தைத்துத் தரும்படி தருவார்கள். அனைவருக்கும் அழகாக சட்டைகளை தைத்து அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் கொடுத்தேன். எனது அக்கா அமரர். இரத்தினம்மாவின் மகள் அமரர். சிவநேசரத்தினம் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த காலத்தில், தனது சக மாணவிகள் பாடசாலைக்கு போட்டுக் கொண்டு வரும் சட்டைகளின் வடிவமைப்பை பார்த்து வருவார். பின் வீட்டுக்கு வந்து ஒரு வெற்றுத் தாளில் எனக்கு கீறிக் காட்டி அந்த மாதிரி வடிவமைத்து தனக்கு சட்டை தைத்துத் தரும்படி என்னிடம் கூறுவார். அதே மாதிரி வடிவமைத்து அழகாக சட்டை தைத்து அவருக்குக் கொடுத்தேன். அவர் தனக்கு சட்டை தைத்துக் கொடுத்ததோடு என்னை விடவில்லை. எனது திருமணத்தின் பின்பும் தனது பிள்ளைகளுக்கும் சட்டை தைத்துத் தரும்படி துணிகளை வாங்கிக் கொண்டு வந்து தைத்துத் தருமாறு கேட்டார். ஆண். பெண் இருபாலாருக்கும் தைத்துக் கொடுத்தேன். சில சமயம் நாளை காலையில் சட்டை அவசரம் தேவை என்றால், இன்று இரவு சட்டைத் துணியை கொண்டு வந்து தைத்துத் தரும்படி கூறுவார். அப்போது உடனே துணியை வெட்டி இரவு பத்து மணி வரை சட்டையை தைத்து வைப்பேன். பின் காலை ஏழு மணிக்கு அவசரமாக ஓடிவந்து தைத்து வைத்த சட்டையை வாங்கிக் கொண்டு போவார்.

எனக்கு கொக்குவில் கிழக்கு உடையார் ஒழுங்கையில் வாழ்ந்தவர்களான சைவ வேளாளர் குலத்தைச் சேர்ந்த அமரர்கள். செல்லையா தங்கம்மா தம்பதியினரின் கடைசி மகன் திரு. திருநாவுக்கரசு என்பவரை திருமணம் செய்து வைக்க எனது தாயாரும் எனது சகோதரர் களும் நிச்சயித்தார்கள். எனது தாயாரின் விருப்பப்படி நந்தாவில் கற்புலத்து மனோன்மனி அம்மன் சன்னிதானத்தில் 6.11.1961 அன்று எங்கள் திருமணம் நடைபெற்றது. அமரர். முத்துக்குமாரசாமி குருக்கள் ஓமம் வளர்த்து எங்கள் திருமண நிகழ்வுகளை மிகவும் சிறப்பாக நடத்தி வைத்தார். எனது சின்னண்ணை அமரர். மாணிக்கவாசகர் மாப்பிள்ளைத் தோழனாக மாப்பிள்ளையை அழைத்து வந்தார் எனது பெரிய அண்ணை அமரர் P.M இராசரத்தினமும், மச்சாள் அமரர் மகேஸ்வரியும் கன்னிகாதானம் செய்து கொடுத்தார்கள். திருமண வைபவத்திற்கு வருகை தந்த அனைவருக்கும் எங்களுடைய வீட்டில் மதிய போசனம் வழங்கப்பட்டது. அன்று பிற்பகல் புகுந்த வீட்டிற்கு என்னை அழைத்துச் சென்றார்கள். பின் மூன்றாம் நாள் புதன் கிழமை மாலை குளங்கரை ஒழுங்கை கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள "தனலட்சுமி வாசா" என்ற எங்கள் வீட்டுக்கு கூட்டிக் கொண்டு வந்தார்கள். எனக்கு வீடு இருந்தபடியால் புகுந்த வீட்டில் வாழ வேண்டிய அவசியம் இருக்கவில்லை. எனது மாமன், மாமி இருவரும் அவர்கள் வாழ்ந்த காலம்

வரை என் மேல் மிகுந்த பாசத்துடனும், நேசத்துடனும் நடந்து கொண்டார்கள். அடியேனும் அவர்களுடன் பாசத்துடனும், நேசத்துடனும் நடந்து கொண்டேன். எனது கணவருக்கு உடன்பிறந்தோர் ஆறு பேர்.

மூத்த அக்கா அமரர். கண்மணி நடராசா அவர்கள் நவாலியில் தனது கணவன் வீட்டில் வாழ்ந்தார்கள். அவர்களுக்கு கடம்பேஸ்வரன், குகேஸ்வரன், ஜெகதீஸ்வரன், கார்த்திகை பிரகாசம், ஸ்ரீகாந்தன், ஸ்ரீமுருகன், இந்திராதேவி, சரோஜினி தேவி ஆகிய எட்டுப் பிள்ளைகள் இருந்தார்கள். தற்போது திரு. ஸ்ரீமுருகன் திருமதி. இந்திராதேவி சச்சிதானந்தன், திருமதி. சரோஜினிதேவி குமாரசாமி ஆகிய மூவரும் நவாலியில் உள்ள தனது பெற்றோரின் பூர்வீக நிலத்தில் தனித்தனி வீடுகளை அமைத்து தனது குடும்பத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மூத்த அண்ணன் ஐவரும் அமரர்களாகிவிட்டார்கள். இரண்டாவது அக்கா அமரர். அன்னம் பொன்னுத்துரை, அவர் தனது பெற்றோர் கொடுத்த காணிக்குள் வீடு கட்டி வாழ்ந்தார்கள். அவர்களுக்கு ஒரே ஒரு மகள் அவரின் பெயர் திருமதி. இராஜேஸ்வரி ஜெயரத்தினசிங்கம். அவர்கள் பொற்பதி வீதியிலுள்ள தனது தாயாரின் காணிக்குள் மாடிவீடு கட்டி அங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மூன்றாவது அண்ணன் அமரர். கந்தையா அவரின் மனைவி அமரர். பாக்கியம் அவர்கள் கொக்குவில் கிழக்கில் தமது வீட்டில் வாழ்ந்தார்கள். அவர்களுக்கு புவனேந்திரன், சின்னக்கிளி, குஞ்சுமணி, பாலு, பேரம்பலம், மகேந்திரன், நேசமணி, ஜெயலட்சுமி, தனலட்சுமி, வரலட்சுமி, இராஜேந்திரன் ஆகிய பதினொரு பிள்ளைகள் இருந்தார்கள். தற்பொழுது திரு புவனேந்திரன் 75 வயது குடும்பத்துடன் சிறுப்பிட்டி என்ற கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின் றார். திரு. குஞ்சுமணி தனது பெற்றோரின் பூர்வீக மனையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். திருமதி. நேசமணியும், திருமதி. வரலட்சுமியும் தமது பெற்றோரின் காணிக்குள் தனித்தனி வீடு கட்டித் தமது குடும்பத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

நான்காவது அண்ணன் அமரர். நவரத்தினம் அவரது மனைவி அமரர். நாகேஸ்வரி அவர்கள் கொக்குவில் கிழக்கில் தமது வீட்டில் வாழ்ந்தார்கள். அவர்களுக்கு ஒரே ஒரு மகள் அவரின் பெயர் திருமதி. தவரூபி. அவர் தனது குடும்பத்துடன் ஜேர்மனியில் வசித்துக் கொண்டி ருக்கிறார். ஐந்தாவது அமரர். இரத்தினம்மா அரியகுட்டி, அவர்கள் உடையார் ஒழுங்கை கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள தனது பெற்றோரின் பூர்வீக இல்லத்தில் வாழ்ந்தார்கள். அவர்களுக்கு திருமதி. சற்குணபோதினி பரராசசிங்கம், திரு. குகேஸ்வரன், திருமதி. லோகேஸ்வரி பாஸ்கரன், திருமதி. சரோஜினி தேவி சோமசேகரன், திருமதி. சாந்தகுமாரி கிருக்ஷ்ணானந்த ராஜா, திருமதி. இந்திராணி வீதிவிடங்கன், திரு. சிவநேஸ்வரன், திரு. சர்வேஸ்வரன், திரு. உருத்திரேஸ்வரன், திருமதி. பிரேமிலா பிரேமச்சந்திரன் ஆகிய பத்துப் பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களில் நான்கு பெண்களும், இரண்டு ஆண்களும் ரொறன்ரோ (Toronto) கனடாவில் தத்தமது குடும்பத்துடன் இருக்கிறார்கள். திரு. குகேஸ்வரனும் அவரது மனைவி புனிதவதியும், திருகோணமலையில் இருக்கும் தமது மகளின் வீட்டில் மகளின் குடும்பத்துடன் வாழ்கிறார்கள். திருமதி. இந்திராணி தனது கணவர் பிள்ளைகளுடன் டென்மார்க்கில் இருக்கிறாள். திருமதி சரோஜினிதேவி உடையார் ஒழுங்கை கொக்குவிலில் உள்ள தனது தாயின் பூர்வீக நிலத்தில் வீடு கட்டி தனது மகளின் குடும்பத்துடன் வாழ்கிறார். திரு. சிவனேஸ்வரன் தனது மனைவி உதயமதி மற்றும் பிள்ளைகளுடன் கனடாவில் இருக்கிறார்கள். சர்வேஸ்வரன் தனது குடும்பத்தினருடன் கொலண்டில் இருக்கிறார். உருத்திரேஸ்வரன் மற்றும் பிரேமிலா ஆகியோர் கனடாவில் வசிக்கிறார்கள்.

ஆறாவது அக்கா அமரர். சரஸ்வதி அரச இரத்தினம் சங்குவேலியில் தமது பிள்ளைகளுடன் வாழ்ந்தார்கள். மகள் இந்திராணி சங்குவேலியில் இருக்கும் தனது பெற்றாரின் வீட்டில் தனது குடும்பத்துடன் வாழ்கிறார். அவர்களது மகன் திரு. அரசகுலசேகரன் கொக்குவில் கிழக்கில் தனது மனைவி பிள்ளைகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார். எனது கணவர் கோண்டாவில் உபதபால் அலுவலகத்தில் உபதபால் அதிபராகப் பணிபுரிந்தார். அங்கு மூன்று அஞ்சல் ஊழியர்களும், ஒரு தந்தி ஊழியரும் பணிபுரிந்தார்கள். அங்கு வேலை நாள்களில் தபால் புகைவண்டி மூலம் வேறு ஊர்களிலிருந்து தபால் பொதிகள் (Mailbags) வந்து கொண்டே இருந்தன. அஞ்சல் ஊழியர்கள் கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு அதிகாலை 5.30 மணிக்கு சென்று தபால் பொதிகளை எடுத்து வருவார்கள். பின் பொதிகளில் இருக்கும் தபால்களை எடுத்து தத்தமது வட்டாரங்களுக்கு உரிய தபால்களை தரம் பிரித்து பட்டுவாடா Delivery செய்தார்கள். அஞ்சல் அலுவலகத்துக்கு அண்மையில் இ.போ.ச தலைமைக் காரியாலயம், பாடசாலைகள் போன்ற அலுவலகங்கள் அமைந்திருந்தமையால் அங்கு அடிக்கடி தந்திகள் வந்து கொண்டே இருந்தன. தந்தி ஊழியரும் வரும் தந்திகளை உடனுக்குடன் துரிதமாக கொண்டு செல்லும் பணியை ஒழுங்காக செய்தார்.

கோண்டாவிலில் புகையிலை வியாபாரிகள் தோட்டத் தொழிலாளர்கள் அநேகர் வாழ்ந்தார்கள். அவர்கள் தங்கள் பொருட்களை வெளியூர்களுக்கு அனுப்பி அதன் மூலம் பொருளீட்டினார்கள். இதன் காரணமாக அஞ்சல் அலுவலகத்திற்கு தினமும் தபால் மூலமும், தந்தி மூலமும் காசுக் கட்டளைகள் (Moneyorders) வந்து கொண்டே இருக்கும். இலங்கை ஓய்வூதியம், சிங்கப்பூர் ஓய்வூதியம் பெறுவோரும் அநேகர் அங்கு வாழ்ந்தார்கள். அவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவும் அஞ்சல் அலுவலகத்தில் நடைபெற்றன. அத்துடன் ஆதரவற்றோர் அரசாங்கம் கொடுக்கும் (Public allowance) பணத்தை கோண்டாவில் அஞ்சல் அலுவலகத் தில் மாதம், மாதம் வந்து பெற்றுக் கொண்டார்கள். இப்படியாக வேலைகள் கூடிய அஞ்சல் அலுவலகத்தில் எனது கணவருக்கு உதவியாளர் தேவைப்பட்டதால் எனது பெயரை தபால் அலுவலக மேலதிகாரிக்குச் சிபாரிசு செய்தார். எனக்கு தபால் அலுவலக வேலைகளை பயிற்சி அளிக்கும் படி மேலதிகாரியிடம் இருந்து பதில் வந்தது.

மேலதிகாரியின் உத்தரவுப்படி எனது கணவர் தபால் அலுவலக வேலைகள் யாவற்றையும் எனக்கு பயிற்சி அளித்தார். பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம் ஒரு நாள் எங்கள் மேலதிகாரி எங்கள் அலுவலகத்திற்கு வந்தார். அப்போது எனது வேலை திறமையை பார்த்துவிட்டு அடுத்த நாளே எனக்குப் பயிற்சி பெற்ற பத்திரம் (Training Certificate) தபால் மூலம் மேலிடத்திலிருந்து கிடைத்து விட்டது. எனது கணவர் சில நேரம் அவசர தேவைகளுக்கு லீவு எடுத்து செல்லும் போது அலுவலக வேலைகள் யாவற்றையும் பொறுப்பேற்று செய்தேன். தனித்து வேலை செய்யும் போது அன்றைய பத்திரங்கள் விநியோகிக்கும் காசு கட்டளைகள் யாவற்றிற்கும் எனது கையெழுத்து இடும் உரிமையும் எனக்கு இருந்தது.

பாடசாலையில் படித்த காலத்திலும், திருமணமான பின்பும் அம்மா தான் சமையல் வேலைகள் யாவற்றையும் செய்து தருவார். எனக்கு வீடு கூட்டுவது, தூசு இருந்தால் தட்டித் துப்பரவு செய்வது மற்றும் எங்கள் வீட்டின் பின் பக்கம் பெரிய காணி அதற்குள் மா மரங்கள், பலா மரங்கள் நிறைய நின்றன அவற்றின் சருகுகளை கூட்டித் துப்பரவு, செய்வது இவைதான் எனது

வேலை. ஒய்வு நேரங்களில் சட்டைகளை தைப்பேன், தலையணைகளுக்கு பூப் போட்டு தைப்பேன். அம்மா சமையல் வேலை யாவும் செய்ததினால், அலுவலகம் போவதில் எனக்கு எதுவித சிரமமும் இருக்கவில்லை.

நாங்கள் இருபத்தெழு ஆண்டுகள் கோண்டாவில் உபதபால் அலுவலகத்தில் பணிபுரிந்த போது அவ்வூர் மக்களுக்கு அளப்பரிய சேவைகளைச் செய்தோம். ஒரு முறை ஒரு ஐயா உரும்பிராய் காட்டு வைரவர் வேள்வியில் ஆட்டு இறைச்சி பங்கை வாங்கி, பொரித்து அதனை பொதி (Parcel) செய்து கொழும்பில் இருந்த மகளுக்கு அனுப்புவதற்கு கொண்டு வந்தார். அவர் வந்த நேரம் பதிவுத் தபால் பொதிகள் யாவும் கட்டி எங்கள் கட்டுப்பாட்டு அலுவலகத்திற்கு (Controlling Office) அனுப்பப்பட்டுவிட்டன. பதிவுத் தபால் பொதிகள் அனுப்பிவிட்டோம். இதனை சாதாரண தபால் பொதியாக தான் (Ordinary postal package) அனுப்ப முடியும். இதற்கு பற்றுச்சீட்டு கொடுப்பதில்லை. எங்கள் அலுவலகப் புத்தகத்தில் பொதி இலக்கத்தையும், விலாசத்தையும் பதிந்து விட்டு அனுப்பலாம் என்று எனது கணவர் அந்த ஐயாவுக்கு கூறினார். எப்படி என்றாலும் போய்ச் சேர்ந்தால் சரி என்று அந்த ஐயா கூறினார். பொதி அனுப்பப்பட்டுவிட்டது பொதியைப் பெற்றுக்கொண்ட மகளிடம் இருந்து பதில் எதுவும் வரவில்லை. ஐயாவின் வீட்டில் அவரது மனைவியும், மற்ற மகளும் ஐயாவைக் குறை கூறத் தொடங்கி விட்டார்களாம்.

அந்த தபால் அதிபரும், மனைவியும் காலை வந்து தபால் அலுவலகத்திற்குள் புகுந்தால் மாலையில் தான் வீட்டிற்கு செல்வார்கள் அவர்களுக்கு வேள்வி இறைச்சி வாங்கி சமைக்க நேரமிராது. நீங்கள் பதமாய் பொரித்த இறைச்சியைக் கொண்டு போய்க் கொடுத்து இருக்கிறீர்கள் அவர்கள் சாப்பிட்டிருப்பார்கள் என்றெல்லாம் கூறினார்களாம். ஒரு கிழமையின் பின் பொதி கிடைத்ததற்கு பதில் கடிதம் வந்ததாம். நீங்கள் அனுப்பிய பொரித்த இறைச்சி நன்றாக இருந்தது. எனது குழந்தைக்கு சுகம் இல்லாததால் வைத்தியசாலையில் வைத்திருந்தேன். அதனால் பதில் எழுத சுணங்கி விட்டது என்று மகள் எழுதியிருந்தாவாம். வந்த கடிதத்தை வாசித்து விட்டு அந்த ஐயா எங்கள் அலுவலகத்திற்கு வந்து மேற்கூறிய விடயங்களை ஒளிவுமறைவின்றி கூறினார். எங்கள் வீட்டில்லுள்ளவர்கள் உங்களை குறை கூறியபோது, எனது மனம் சங்கடப்பட்டது. இன்று கடிதம் வந்த பிறகுதான் மனம் ஆறுதலாய் இருக்கிறது என்று நடந்தவற்றை கூறிவிட்டுச் சென்றார். அவர் நேர்மையான மனிதன் உண்மையை மறைக்காமல் கூறினார். ஒரு சிலர் மறைமுகமாகவும் குறை கூறியிருக்கிறார்கள். உலகம் போற்றிய மகாத்மா காந்தியை கூட ஒருவன் சுட்டான் எவ்வளவு தான் சேவை செய்தாலும் குறை நிறைகள் இருக்கத்தான் செய்யும்.

எங்களுக்கு ஒரு மகனும் இரண்டு மகள்களும் இருக்கிறார்கள். மூத்த மகன் திரு. விக்னேஸ்வரன், இரண்டாவது மகள் திருமதி. ரோகிணி கிருஷ்ணகுமார், கடைசி மகள் திருமதி பாமினி தர்மதாஸ். எனது இரண்டாவது மகள் ரோகிணி ஒன்றரை வயதுக் குழந்தையாக இருந்தபோது எனது தாயார் நோயின் காரணமாக காலமாகிவிட்டார். ஒரு மாத காலம் உடல்நலக் குறைவாக இருந்த போது வைத்தியரிடம் கொண்டு சென்று மருந்துகள் வாங்கிக் கொடுத்து பராமரித்தோம். ஆனால் அவர் 1967 ஆம் ஆண்டு வைகாசி விசாகத்தன்று இறைவனடி சேர்ந்துவிட்டார். அம்மா என்னைப் பெற்றெடுத்த நாளிலிருந்து இறைவனடி செல்லும் வரை என்னுடனேயே தங்கியிருந்தார். இடையில் பெரியண்ணை, சின்னண்ணை

இருவரின் குடும்பத்தினருக்கு அம்மாவின் உதவிகள் தேவைப்படும் நேரத்தில் அவர்களின் வீடுகளில் போய் சிறிது நாட்கள் தங்கியிருந்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்து கொடுத்த பின் எங்கள் வீட்டிற்கு திரும்பி வருவார். எனது திருமணத்திற்கு முன் அவர்களின் இருப்பிடங்களுக்கு செல்லும் நாள்களில் என்னையும் தன்னுடன் கூட்டிக் கொண்டு சென்றார்.

எனது தாயார் உடல் வலிமையும், மனவலிமையும் நிறைந்த பெண். அம்மா காலமான பின்னர் குழந்தை பிள்ளைகளுடன் சமையல் வேலை, வீட்டு வேலைகள் செய்வதில் எனக்கு மிகவும் சிரமமாக இருந்தது. எனது சமையல் நேரத்தில் அமரர். பாக்கியம் இராசையா (அம்மம்மா) எனது பிள்ளைகளைத் தங்கள் வீட்டில் கூட்டிக்கொண்டு போய் வைத்திருந்தார். அவர்களின் மகள் கமலாதேவியும் (தேவி) எனது பிள்ளைகளை மிகுந்த அன்பாக கவனித்தார். அவர்களின் உதவி எனக்கு மிகுந்த ஆறுதலாக இருந்தது. எனக்கு மரக்கறி உணவுகள் தயாரிப்பதில் சுலபமாக இருந்தது. ஆனால் அசைவ உணவுகளை வெட்டவோ சமைக்கவோ தெரியாது. அமரர். பாக்கியம் (அம்மம்மா) தான் அசைவ உணவுகளை வெட்டி, சமைத்து தந்தார். “தேவையான நேரம் என்னை கூப்பிடு இராசேசு மீன் போன்றவற்றை வெட்டி, சமைத்து தருகிறேன்” என்பார்.

அமரர்களான இராசையா (ஐயா), பாக்கியம் (அம்மம்மா) தம்பதியினரின் மகன் சோதிநாதன் (கணேகூஷ் அண்ணை) எனது பெரிய மச்சாள் மகேஸ்வரியின் சிறிய தகப்பன் தம்பையா என்பவரின் மூத்த மகள் பரமேஸ்வரி என்பவரைத் திருமணம் செய்தார். அவர் களுக்கு பவானி, சாந்தி, சபேஷ் ஆகிய மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள். சோதிநாதனும், மனைவியும் லண்டனில் இருந்த போது எங்களுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு, சுகம் விசாரித்து உரையாடினார்கள். ஒருமுறை அவர்கள் லண்டனில் இருந்து U.S.A க்கு எங்களுடைய மகன் வீட்டுக்கு சென்றபோது, எங்கள் மகனுடன் Montreal லுக்கும் வந்து எங்களை சந்தித்து சென்றார்கள். எங்கள் மகன் ஈசன் அவர்களை Toronto வுக்கு கூட்டிச் சென்று, அங்கு இராகினி (Rahiny) வீட்டுக்கும், சாமினி வீட்டுக்கும் கூட்டிச் சென்றது ஞாபகமிருக்கிறது. சிறிது காலத்தில் சோதிநாதனும், மனைவியும் காலமாகிவிட்டார்கள்.

அவர்களின் பிள்ளைகள் லண்டனில் இருக்கிறார்கள். கமலாதேவியை விஜயரெட்னம் என்பவர் திருமணம் செய்தார். அவர்களுக்கு விஜேனி என்ற மகள் இருக்கிறாள். விஜயரெட்னம் இறைவனடி சேர்ந்து விட்டார். கமலா தேவி கொக்குவிலில் இருக்கிறார். விஜேனி தனது கணவர், மகள் ஆகியோருடன் கொழும்பில் இருக்கிறார்கள். வசந்தா தேவியை முருகையா என்பவர் திருமணம் செய்தார். அவர்களுக்கு சுகந்தினி, சாமினி (மினி) என்ற இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். சுகந்தினி தனது கணவர் பிள்ளைகளுடன் அமெரிக்காவில் இருக்கிறார். வசந்தா தேவியும் (வசந்தா), முருகையாவும் தங்களுடைய மகள் சாமினி (மினி) குடும்பத்தினருடன் Toronto Canadaவில் இருக்கிறார்கள். Toronto சென்ற நேரங்களில் எங்களை ஈசன் மினி வீட்டுக்கு கூட்டிச் சென்றார். தொலைபேசி மூலமும் அவ்வப்போது உரையாடிக் கொள்வோம்.

நான் கொக்குவிலில் வாழ்ந்த காலத்தில் எனக்கு உடல்நலக் குறைவாக இருந்த நேரங்களில் அம்மம்மா தானே வந்து சாப்பாடுகளை சமைத்து தந்தார். அவர்களின் உதவி எனக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது அவர்கள் எனது சிறு பராயத்திலிருந்தே என் மேல் மிகுந்த

அன்பு, பாசத்துடன் இருந்ததனால், அவர்களின் இறுதி காலத்தின் போதும் அவர்களின் ஆத்மாவை ஆறுதல் படுத்தி அனுப்புவதற்கு இறைவன் அருள் பாலித்திருந்தார். அமரர். இராசையா (ஐயா) இறைவனடி சேரும் நேரத்தில் அவரின் பக்கத்தில் நின்று தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புகழ், ஆகியவற்றைப் பாடி ஆத்மாவை ஆறுதல்படுத்தி சாந்தி அடையச் செய்தேன். அமரர். பாக்கியம் (அம்மம்மா) இறுதி நேரத்தில் நோயின் தாக்கத்தால் அல்லலுற்ற போது பக்கத்தில் இருந்து அவரை ஆறுதல் படுத்தி வைத்தியசாலைக்குச் செல்வதற்கு வேண்டிய ஒழுங்குகளை செய்து கொடுத்தேன். அவரின் மகன் அமரர். சோதி நாதனுக்கு (கணேஸ் அண்ணன்) தகவல் சொல்லி அனுப்பினேன். அம்மம்மாவை மாலை நேரத்தில் வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தோம். அன்று இரவு அவரின் பூதவுடலை வீட்டிற்கு கொண்டு வந்தார்கள். எனக்கு தாங்க முடியாத மனவேதனை ஆகிவிட்டது. “எழுதிச் செல்லும் விதியின் கை எழுதி, எழுதி மேற்செல்லும் அழுதாலும், தொழுதாலும் ஒரெழுத்தும் மாறாது” இறைவனின் அழைப்பை எவராலும் தடுக்க முடியாது. அவர்கள் என்மேல் வைத்திருந்த அன்பையும், எனக்கு அவர்கள் செய்த உதவி ஒத்தாசைகளை யும் இன்றுவரை என்னால் மறக்க முடியவில்லை. மற்றும் எனது மகள் பாமினி பிறந்திருந்த போது எனக்கு உதவியாக அமரர். சின்னப்பிள்ளை (அவரை ஆத்தை என்று கூப்பிடுவோம்.) என்ற ஆச்சி வைத்தியசாலையில் என்னுடன் தங்கி நின்றார். வைத்தியசாலையில் இருந்து வீட்டுக்கு வந்த பின்னும் இரண்டு மாத காலங்கள் எங்கள் வீட்டில் தங்கியிருந்து எங்களுக்கு வேண்டிய உதவிகளை செய்து தந்தார்.

அவருக்கு இரண்டு கால்களிலும் வாதநோய் வந்திருந்தது. அப்படி இருந்த போதும் மருந்துகளை வாங்கி குடித்துக் கொண்டு எனக்கு சமையல் வேலை, வீட்டு வேலைகளைத் தனது வீட்டு வேலை போல மிகவும் அக்கறையுடன் மனங்கோணாமல் செய்து உதவினார். அந்த ஆச்சி எனக்குச் செய்த உதவிகளையும் இன்றுவரை என்னால் மறக்க முடியவில்லை. மற்றும் எங்கள் குளங்கரை ஒழுங்கையில் வாழ்ந்த அமரர். முத்துலிங்கத்தின் தாயார் அமரர். சின்னப்பிள்ளை ஆச்சி (கண்ணனின் பேத்தியார்) அவரும் எனக்கு சமையல் தேவைகளுக்கும், வீடு கூட்டித் துப்பரவு செய்தல், வீடு கழுவுதல், போன்ற வேலைகளுக்கும் வேண்டிய நேரங்களில் மிகவும் உதவி ஒத்தாசையாக இருந்தார். அவர் செய்த உதவி, ஒத்தாசைகளையும் எனது வாழ் நாளில் மறக்க முடியாது.

தொழில்நுட்பம் வளர்ச்சி பெற்ற இன்றைய காலத்தில், அநேகமான பெண்கள் லுழரவரடிந மூலம் பார்த்து சமையல்களைச் செய்கிறார்கள். ஒருநாள் செய்த சமையல் போல ஒருநாள் செய்ய மறந்துவிட்டால் திரும்ப YouTube பார்த்து சமைத்துக் கொள்கிறார்கள். எனக்கு அந்தக் காலத்தில் YouTube பாக செயல்பட்டவர்கள் அமரர். பாக்கியம் இராசையா (அம்மம்மா) அவர் மிகவும் பொறுமையான பெண். சமைக்கும் போது மிகவும் பொறுமையாகச் சமைப்பார். அவரின் சமையலின் கைப்பக்குவம், அளவுப் பிரமானங்களை நாளாந்தம் கவனித்ததனால் தான் என்னால் நன்றாக சமைக்க கூடியதாக இருந்தது. அவரின் அன்பு, உதவி செய்யும் மனப்பாங்கு, ஆகியன சொல்லில் அடங்காது இவற்றையெல்லாம் எழுதும் போது கண்கள் குளமாகிவிட்டன.

எனது கணவரின் தகப்பன் (எனது மாமனார்) காளி கோயிலடி கோண்டாவிலில் பன்னிரண்டு பரப்பு தோட்டக் காணி வைத்திருந்தார். அந்த காணிக்குள் புகையிலைக் கன்றுகள்

பயிரிடப்பட்டு அவை வளர்ந்து பயிரானதும் புகையிலைகளை கூலியாட்களை வைத்து வெட்டி, வீட்டிற்கு கொண்டு வந்தார். பின் அவற்றை கட்டுக் கட்டாக கட்டி வீட்டின் மதில் சுவர்களில் காயவிடுவார். அவை காய்ந்த பின்பு வீட்டில் குடில் வைத்து பாணிப் புகையிலை தயாரித்து அதன் மூலம் பொருள் ஈட்டினார். பாணிப் புகையிலை தயாரிப்பதற்கு கருவாப்பட்டை, ஏலக்காய், கிராம்பு, முதலிய வாசனை திரவியங்களை வாங்கி அவற்றை வெயிலில் காய வைத்து பின் அவற்றை உரலில் இடித்து தூளாக்குவார்கள். அதன் பின் பனங்கட்டிகளை வாங்கி பாணி காச்சி, பனங்கட்டி பாணிக்குள் இடித்து வைத்துள்ள வாசனை தூள்களையும் போட்டு காச்சிய பின் புகையிலை கட்டுகளை காய்ச்சிய பனங்கட்டி பாணிக்குள் தோய்த்து குடிலில் தொங்கவிட்டு கீழே ஊமல், கொச்சி போன்றவற்றை போட்டு எரித்து புகைபோட்டு பாணிப் புகையிலை தயாரிப்பார் கள். தயாரித்த பாணிப் புகையிலைகளை சிப்பங்களாக கட்டி கண்டி, ஹட்டன், போன்ற ஊர்களுக்கு அனுப்பி பொருள் ஈட்டினார்.

அந்த ஊர்களில் கால்களை துளைத்து இரத்தம் குடிக்கும் அட்டைகள் உள்ளன. அந்த அட்டைகளின் மேல் இந்தப் பாணிப் புகையிலையை சப்பித் துப்பினால் தான் கால்களை விட்டு இறங்கி ஓடுமாம். வேறு எவ்வகையிலும் அவற்றை கால்களில் இருந்து எடுக்க முடியாதாம். ஆகையால் இந்தப் பாணிப் புகையிலைக்கு அந்த ஊர்களில் மதிப்ப கூட, எனது மாமனார் வருடா, வருடம் புகையிலை கன்றுகளை பயிரிட்டு அவற்றைப் பின் பிரயாசைப்பட்டு பாணிப் புகையிலை தயாரித்து விற்பனை செய்தார். இந்த புகையிலை விற்பனை மூலம் சேகரித்த பணத்தில் தனது நான்கு பெண் பிள்ளைகளுக்கும் வீடு, வளவு வேறு தோட்டக் காணிகள் யாவும் வாங்கிச் சீதனம் கொடுத்தார். தனது மூத்த ஆண் பிள்ளைகளுக்கும் காணிகள் வாங்கி நன்கொடையாகக் கொடுத்தார். எனது கணவருக்கு காளி கோயிலடியில் உள்ள தோட்டக் காணிக்குள் ஆறு பரப்பை நன்கொடையாக கொடுத்தார். எனது மாமனார் காலமான பின் அந்தத் தோட்ட காணிக்குள் நாங்கள் புகையிலைக் கன்று பயிரிட்டோம். எதுவித இலாபமும் கிடைக்கவில்லை. போட்ட முதல் தான் கிடைத்தது. பின் உருளைக்கிழங்கு பயிரிட்டோம். அடுத்து மிளகாய் கன்றுகள், வெங்காயம், பயறு, தினை, ஆகிய பயிர்களையும் வருடா, வருடம் பயிரிட்டோம் எதுவித இலாபமும் கிடைக்கவில்லை.

காணியை குத்தகைக்கு கொடுத்தால் சிறிது காலத்தில் அவர்களுக்கு ஆட்சியாக போய்விடும். அதனால் அதனை விற்று எங்களுடைய "தனலட்சுமி வாசா" என்ற வீடு அமைத் துள்ள பின் பக்கம் உள்ள காணிக்குள் 1982ஆம் ஆண்டு புதிய வீடு ஒன்றைக் கட்டினோம். வீடு கட்டி சிறிது நாட்களின் பின் அந்தப் வீட்டுக்குப் பொருத்தமாக கிணறு ஒன்றையும் வெட்டிக் கட்டி விட்டோம். கிணற்றுக்குள் Moter போட்டு குழாய்கள் பொருத்தி, அவை ஊடாக தண்ணீர் எடுத்தோம். தண்ணீர் பாய்ச்சும் வசதி ஏற்பட்டதும் மாங்கன்றுகள், பலாக்கன்றுகள், தென்னம் பிள்ளைகள், முதலியவற்றையும் நட்டு பயிராக்கினோம். வீட்டின் முன் பக்கத்தில் நித்திய கல்யாணி பூ மரத்தின் தடிகளை ஊன்றி, மூன்று நித்திய கல்யாணிப் பூ மரங்களை உண்டாக்கினோம். அந்த நித்திய கல்யாணி பூ மரங்களில் ஒரு நாளைக்கு ஐந்நூறு பூக்களுக்கு மேலான பூக்கள் பூத்தன. சரஸ்வதி பூசை நாட்களில் சிலர் சரஸ்வதி தேவிக்கு மாலை கட்டிப் போடுவதற்கு பூக்களை பிடுங்கிக் கொண்டு செல்வார்கள்.

ஏழு விதமான செவ்வரத்தை பூ மரங்களை தடியூன்றி உண்டாக்கினோம். அவை சாதாரண செவ்வரத்தை, தூங்கு செவ்வரத்தை, அடுக்குச் செவ்வரத்தை, பெரிய குழாய் போன்ற

சிவப்பு நிற பூப்பூத்த செவ்வரத்தை, பெரிய மஞ்சள் நிறத்தில் பூப்பூத்த செவ்வரத்தை, மெல்லிய மஞ்சள் நிறப் பூப்பூத்த செவ்வரத்தை, றோசாப்பூ நிறத்தில் பூப்பூத்த செவ்வரத்தை, ஆகியனவாகும். கிணற்றுக்குப் பக்கத்தில் ஒரு றோசாச் செடி நிறைய பூக்களை பூத்தது. வெள்ளை நிறம், மஞ்சள் நிறம், குங்கும நிறம் ஆகிய மூன்று நிறங்களில் பூக்களைப் பூத்த தேமா (Temple Tree) மரத்தடிகளை ஊன்றி, பெரிய மரங்களாக வளர்த்தோம். குங்கும நிற Temple Tree கொத்துக் கொத்தாக பூக்களைப் பூத்து சுகந்த வாசனை தந்தது. வீட்டின் முன் பகுதியில் நிறைய விதைகளைப் போட்டு துளசிச் செடிகளை நாட்டினோம். பிரத்தியேகமாக துளசிச்செடி, அறுகம்புல் இவற்றைத் தனித்தனி சாடிகளில் நாட்டி கிணற்றுக்குப் பக்கத்தில் வைத்திருந்தோம். காலையில் நீராடிய பின் அவற்றிற்கு பூக்களை வைத்து அவற்றினை வணங்கினோம். முன் பக்கம் உள்ள மதிலோரத்தில் பல நிறத்தில் பூக்களைப் பூத்த கடதாசிப் பூக்கன்றுகளின் தடிகளை ஊன்றி பெரிய மரங்களாக வளர்த்தோம். அவையாவும் பூத்துக் குலுங்கின. வீட்டின் முன் பக்கம் ஒரே பூஞ்சோலையாக திகழ்ந்தது.

இவை மாத்திரமல்ல சமையல் செய்து உண்பதற்கு உகந்த தூதுவளை, மணித்தக்காளி, முசுட்டை, தவசி, முருங்கை போன்ற செடிகளையும் வளர்த்தோம். சண்டி மரக்கிளையை ஊன்றி பெரிய மரமாக வளர்த்தோம். மேலே கூறியவை யாவற்றிலும் மருத்துவக் குணங்கள் நிறைந்துள்ளன. கரும்பு வளர்த்தோம் பொங்கலுக்கு முதல் நாள் அநேகமானவர்கள் கரும்பு தரும் படி வருவார்கள் வெட்டி, வெட்டி கொடுத்தோம். அருநெல்லி, முழுநெல்லி ஆகிய இரண்டு வகையான நெல்லி மரங்களை நாட்டி பயிராக்கி பலன் அடைந்தோம். மாதுளை மரக்கிளை களை ஊன்றி மாதுளை மரங்களை உண்டாக்கினோம். அவை நிறைய மாதுளம் பழங்களை தந்தன. வாழை மரங்களை நட்டு பயிராக்கினோம். அவை குலை குலையாக பழங்களைத் தந்தன. நாங்கள் வாழைப் பழங்களை சீப்பு, சீப்பாக வெட்டி அயலவர்களுக்கும் கொடுத்து நாமும் உண்டோம்.

மரவள்ளித் தடிகளை நட்டு மரவள்ளிக் கிழங்குகளைப் பிடிங்கி உண்டோம். பலாப்பழம் பழுத்தவுடன் துண்டு, துண்டுகளாக வெட்டி அயலவர்களுக்கும் கொடுத்து நாமும் உண்டோம். பப்பா மரங்கள் விதைகள் விழுந்து நிறைய மரங்கள் வளர்ந்திருந்தன. அவை நிறைய பழங்களை தந்தன. இவற்றை எல்லாம் இரசித்து, சுவைத்து மகிழ்ந்து வாழ்ந்து கொண்டு இருந்தோம். இங்கு எல்லாப் பழங்களும் வாங்கலாம். ஆனால் இவை எங்கள் ஊர்ப் பழங்கள் போல் சுவையானதாக இல்லை. ஏதோ மாம்பழம், வாழைப்பழம் என்ற பெயரில் வாங்கிச் சாப்பிடுகின்றோம். அங்கு கறிமுருங்கை இலை எங்கள் வீட்டில் நிறைய இருந்தன. மற்றும் எங்கள் வீட்டில் பயிரிடப்பட்ட இலை வகைகள் போன்றவை மருந்துக்கும் கிடையாது, கறிமுருங்கை இலை தேடித் திரிந்து தான் வாங்க முடியும். இப்படியான சூழ்நிலையில், எங்கள் வீட்டில் பயிரிட்ட மரங்கள், செடிகள் யாவும் நீங்காத நினைவலைகளாக கண்ணில் அடிக்கடி தோன்றித் தோன்றி மறைகின்றன. இவையாவும் எங்களின் காலம் செய்த கோலம்.

1983ம் ஆண்டு எங்கள் மகனை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தோம். 1987ம் ஆண்டு தொடக்கம் எங்கள் நாட்டு நிலைமை காரணமாக பல வகையிலும் சிரமங்களை அனுபவித் தோம். 1991ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி இலங்கைப் பாதுகாப்பு படையினர் உலங்கு வானூர்தியிலிருந்து சுழல் துப்பாக்கி (Machine gun) யால் சுட்டுக்கொண்டு போனபோது எனது இடது கையில் தவறுதலாக இரண்டு குண்டுகள் பாய்ந்து எலும்பு முறிந்து காயமும் ஏற்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைத்தியர்கள் எனது கையில் இருந்த இரண்டு குண்டுகளையும் சத்திர சிகிச்சை மூலம் எடுத்து வைத்தியம் செய்தார்கள். சிறிது நாட்களின் பின் வைத்தியசாலையில் இருந்து வீட்டுக்கு வந்தேன். எனது இடது கையை பாவிக்க முடியாமல் மாதக்கணக்கில் கஷ்டப்பட்டேன். எனக்கு பாதிப்பு ஏற்பட்டதனால் எங்கள் பெண் பிள்ளைகள் இருவரையும் வெளிநாட்டுக்கு அனுப்பும் நோக்கத்தில் அவர்களுக்கு திருமணப் பேச்சை ஆரம்பித்தோம்.

மகள் பாமினிக்கு கோண்டாவில் சைவ வேளாளர் குலத்தைச் சேர்ந்த அமரர். சின்னத்துரை சரஸ்வதி தம்பதியினரின் இளைய மகன் தர்மதாஸ் என்பவருக்கு திருமணம் செய்து வைப்பதற்கு இறைவன் திருவருள் கைகூடியது. எங்கள் மகனுக்கு இதுபற்றி அறிவித்தோம். பாமினியின் திருமணத்தை கொழும்பில் வந்து செய்யும்படி எங்கள் மகன் கூறினார். மருமகன் தர்மதாஸ் கனடா நாட்டில் பணி புரிந்து கொண்டிருந்ததால் சம்பந்த பகுதியினரும் கொழும்பில் திருமணத்தை நடத்த விரும்பினார்கள். பெரும் சிரமத்தின் மத்தியில் எங்கள் ஊரை விட்டு கொழும்புக்கு புறப்படுவதற்கு ஆயத்தமானோம். உலங்கு வானூர்திகளில் கெடுபிடியின் மத்தியில் தங்கள் சிரமத்தை பாராது எனது அக்காவின் மகன் அமரர். இராஜேஸ்வரனும் அக்காவின் மூத்த பேரன் பார்த்தீபனும் எங்கள் பயணப் பொதிகளை தமது துவிச்சக்கர வண்டிகளில் ஏற்றிக் கொண்டு வந்து எங்களை வழி அனுப்பிவைத்தார்கள். நாங்கள் 3.12.1991 அன்று கொக்குவிலில் இருந்து கொழும்பு சென்றோம். கல்லு, முள்ளு, வெள்ளம், பள்ளம் எல்லாம் தாண்டி பெரும் சிரமப்பட்டு கொழும்புக்கு போய் சேர்ந்தோம். கொழும்பில் எனது ஒன்றுவிட்ட அண்ணை அமரர். V. S பத்மநாதன் தனது குடும்பத்தினருடன் தங்கி இருந்த வாடகை வீட்டில் எங்களையும் நான்கு நாட்கள் தங்க வைத்து உணவுகள் தந்து உபசரித்து உதவி செய்தார்.

அதன்பின் நாங்கள் வெள்ளவத்தை இராமகிருக்ஷ்ணா வீதியில் அமைந்துள்ள பெரும்பான்மை இனத்தை சேர்ந்த திருமதி. ஜெயவர்த்தனா என்ற பெண்மணியின் வீட்டில் வாடகைக்கு குடியேறியிருந்தோம். முன்னாள் தபால் மந்திரி அமரர். குமாரசூரியர் வீட்டுக்கு பக்கத்து வீடு மிகவும் பாதுகாப்பான இடம் 1992 ஆம் ஆண்டு மே மாதம் எங்கள் மகன் கொழும்புக்கு வந்து பாமினியின் திருமணத்தை கொட்டாஞ்சேனை கதிர்வேலாயுத சுவாமி கோயிலில் அமைந்துள்ள திருமண மண்டபத்தில் செய்வதற்கு வேண்டிய ஒழுங்குகளை செய்தார். திருமணம் உறவினர்கள், நண்பர்கள் முன்னிலையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பின் மருமகன் தர்மதாஸ் பாமினியை கனடாவுக்கு கூப்பிடுவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்தார். விரைவில் "விசா" கிடைத்து பாமினி கனடா சென்றார்.

சிறிது காலத்தின் பின் எங்கள் மகனுக்கு திருகோணமலையில் வாழ்ந்த சைவ வேளாளர் குலத்தைச் சேர்ந்த திரு திருமதி. குகபாலன் சோமேஸ்வரி தம்பதியினரின் மூத்த மகள் சோபனாவை திருமணம் செய்துவைக்க திருவருள் கைகூடியது. இவர்களின் திருமணம் வெள்ளவத்தை அலெக்சாண்டர் வீதியில் அமைந்துள்ள "மியாமி" திருமண மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மருமகள் சோபனாவுக்கும் "விசா" கிடைத்து அமெரிக்கா சென்றார்

அடுத்ததாக மகள் ரோகிணிக்கு, உடுவிலில் வாழ்ந்த சைவ வேளாளர் குலத்தைச் சேர்ந்த திரு திருமதி. தியாகராசா ஞானம்மா தம்பதியினரின் மகன் கிருஷ்ணகுமாரை

திருமணம் செய்து வைக்க திருவருள் கைகூடியது. இவர்களின் திருமணமும் வெள்ளவத்தை அலெக்சாண்டர் வீதியில் அமைந்துள்ள “மியாமி” திருமண மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. ரோகினிக்கும் ஜேர்மனி செல்ல “விசா” கிடைத்தவுடன் ஜேர்மனிக்குச் சென்றுவிட்டாள். எங்கள் பிள்ளைகள் மூவருக்கும் எதிர்பாராத விதமாக கொழும்பில் திருமண வைபவம் நடைபெற்றது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

நாங்கள் வெள்ளவத்தையில் வாடகைக்கு இருந்த வீட்டு உரிமையாளர் திருமதி. ஜெயவர்த்தனா, நாம் வேற்று இனத்தவர் என்ற துவேசம் பாராமல் எங்களுடன் பண்பாக நடந்து கொண்டார். அவர் அங்குள்ள மயூரா அம்மன் கோயில், தெஹிவளை விஷ்ணு கோயில் ஆகிய கோயில்களுக்குச் செல்லும் போது, தனது மோட்டார் வண்டியில் என்னையும் கூட்டிக் கொண்டு சென்றார். கோயிலுக்குப் போனவுடன் அங்குள்ள விக்கிரகங்களைப் பார்த்து யார் God கணேசன், யார் God கதிர்காம முருகன் என்ற விளக்கங்களை என்னிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார். அத்துடன் யாரை முதல் கும்பிட வேணும், அடுத்து யாரை கும்பிட வேணும் என்ற ஒழுங்கு முறைகளையும் என்னிடம் கேட்டுத் தெரிந்துக் கொண்டார். மஞ்சள் துணியில் காசை முடிந்து முருகனின் பாதத்தில் வைத்து வணங்குவார்.

அவருக்கு ரவி ஜெயவர்த்தனா, குமாரி ஜெயவர்த்தனா என்று ஒரு மகனும், ஒரு மகளும் இருந்தார்கள். ஆரம்பத்தில் நாங்கள் அங்கு போன நேரம் அவரது மகன் ரவி ஜெயவர்த்தனாவும், குமாரி ஜெயவர்த்தனாவும் மருத்துவத் துறையில் பட்டப் படிப்பை படித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பட்டப்படிப்பை நிறைவு செய்து பரீட்சையில் தேர்ச்சி பெற்ற பின் களுபோவல வைத்தியசாலையில் வைத்தியர்களாக பணிபுரிந்தார்கள். அப்போ ஒருநாள் எனது ஆள்காட்டி விரலில் வீக்கம் ஏற்பட்டு நோ அதிகரித்து. மிகுந்த வேதனைப்பட்டேன். அதனை பார்த்த திருமதி. ஜெயவர்த்தனா என்னை தனது வீட்டுக்கு கூட்டிச் சென்று அவரின் மகனுக்கு எனது விரலில் ஏற்பட்ட வீக்கத்தை காண்பித்தார். உடனே அவரது மகன் ரவி ஜெயவர்த்தனாவும், மகள் குமாரி ஜெயவர்த்தனாவும் வீட்டில் வைத்தே எனக்கு வைத்தியம் செய்தார்கள். எனது விரலை அவர்கள் கீறி இரத்தம், சிதல் எல்லாம் வெளியேற்றி, மருந்து வைத்துக் கட்டி விட்டார்கள். அடுத்த நாள் எனக்கு வைத்தியசாலையில் இருந்து Antibiotic கும் பத்து நாட்கள் குடிப்பதற்கு கொண்டு வந்து தந்தார்கள். பின் விரல் புண் மாறும் வரை ஒன்றுவிட்ட ஒரு நாள் மருந்து கட்டி சுகப்படுத்தினார்கள். அவர்களின் வைத்தியம் எனக்கு மிகுந்த ஆறுதலாக இருந்தது. அவர்கள் மனிதாபிமானத்துடன் நடந்து கொண்டதை எண்ணி மகிழ்ச்சி அடைந்தேன்.

பாமினி, ரோகினி இருவரின் திருமணத்தின் போதும் உடைகள் தைப்பதற்கு ஜெயவர்த்தனாவின் தையல் Machine தரும்படி கேட்டேன் அவரது மகன் ரவியும், மகள் குமாரியும் தையல் Machine னை தூக்கிக் கொண்டு நாங்கள் அவர்கள் வீட்டில் குடியிருந்த பகுதியில் வைத்துவிட்டுச் சென்றார்கள். வேற்றின பிள்ளைகள் என்றாலும் அவர்கள் எங் களுடன் அன்பாக பண்பாக நடந்து கொண்டார்கள். அவர்களும் தங்களுக்கு தேவையானவற் றைத் தைத்து தரும்படி துணிகளை கொண்டு வந்து தருவார்கள். எனக்கு ஓய்வான நேரங்களில் அவர்களுக்கு தைத்துக் கொடுத்தேன். கொக்குவில் கிழக்கில் பிறந்து ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்த பூர்வீக இடத்தை விட்டு சொந்த பந்தம், உற்றார், அயலவர்கள் அனைவரையும் விட்டுப் பிரிந்து கொழும்பு வெள்ளவத்தையில் முன்பின் தெரியாத இடத்தில், முன் ஒருபோதும் அறிமுகம் இல்லாதவர்களின் வீட்டில் வாடகைக்கு இருந்தோம். எங்களுடைய மகனின்

முழுமையான அனுசரனையுடன் தான் நாங்கள் எங்கள் ஊரை விட்டுப் புறப்பட்டு வந்து வாடகை வீட்டில் தங்கி இருந்தோம். எங்களுடைய இரண்டு பெண்பிளைப் பிள்ளைகளுடைய திருமணத்திற்கு வேண்டிய தேவைகளும், திருமண நிகழ்வுகளும் எங்கள் மகனின் முழுமையான அனுசரணையுடன் நிறைவேறியதையிட்டு மிகவும் மன ஆறுதல் அடைந்தேன். எங்களுடைய மூன்று பிள்ளைகளும். வெளிநாடுகளில் இருக்கின்ற படியால், எங்கள் முதுமைக் காலத்தில் நாங்கள் அவர்களில் ஒருவருடன் வந்திருக்க வேண்டியதாகிவிட்டது. அதனால் ஒருவர் பின் ஒருவராக வெளிநாட்டுக்குப் புறப்பட்டு வந்தோம்.

நாங்கள் வெள்ளவத்தையில் தங்கியிருந்த போது சின்னண்ணை அமரர். மாணிக்க வாசகரின் மகள் திருமதி. ஜெயரூபியின் கணவரின் சகோதரி குடும்பத்தினர் (Mr. Mrs Packiarajah) எனக்கு பல வழிகளிலும் பக்க பலமாக இருந்தார்கள். அவர்கள் முன்பே எனது அம்மாவின் உறவினர்கள், ஜெயரூபியின் திருமணத்தின் பின் மிக நெருக்கமாகி விட்டார்கள். அங்கு இருந்த போது மாலை நேரங்களில் அடிக்கடி அவர்கள் வீட்டுக்குச் சென்று வந்தேன். நாங்கள் ஒவ்வொருவராக வெள்ளவத்தையை விட்டு வெளிநாடு செல்வதற்கு ஆயத்தமான போதும், நாங்கள் அங்கு, இங்கு அலைக்கழிந்து திரியா வண்ணம் விமானப் பிரயாணச் சீட்டுகளை (Flight Tickets) கூடிய விரைவில் சுலபமாக பெற்றுக் கொள்வதற்கு வேண்டிய ஒழுங்குகளையும் செய்து தந்தார்கள். 2018ஆம் ஆண்டு கொழும்புக்குச் சென்ற போது அவர்களின் வீட்டுக்குத் தான் முதலில் சென்றோம். அவர்கள் எங்கள் எல்லோரையும், அன்புடன் வரவேற்று உணவு பரிமாறி, உபசரித்தார்கள். “நீங்கள் எங்களை மறக்காமல், எங்களிடம் வந்து இருக்கிறீர்கள்” என்று மிகவும் மகிழ்ச்சியுடன் கூறினார்கள்.

எல்லோரையும் வெளிநாட்டுக்கு அனுப்பிய பின், எனக்கு அங்கு சில தேவைகள் இருந்ததனால் இறுதியாக அங்கிருந்து புறப்பட வேண்டியதாகிவிட்டது. நாங்கள் வாடகைக்கு இருந்த வீட்டை, வீட்டு உரிமையாளரிடம் மீளக் கையளித்து விட்டு சொய்சபுரம், மொரட்டுவாவிலிருந்த எனது அக்காவின் மகன் அமரர். இராஜேஸ்வரனின் வேண்டுகோளுக்கு இணங்கி அவர்களின் வீட்டுக்குச் சென்று அங்கு அவர்களுடன் ஒரு கிழமை தங்கி இருந்த பின் வெளிநாட்டுக்கு புறப்பட்டேன். அவர்களுடன் தங்கி இருந்த போது எனது தேவைகளுக்கு அடிக்கடி வெளியில் சென்று வந்தேன். வெளியில் சென்று வரும்போதெல்லாம் அமரரின் மனைவி திருமதி. சிவாஜினியும், அவரது தாயாரான அமரர். ரதிமதி தேவியும், சேர்ந்து சமைத்து வைத்திருந்த உணவுகளை எனக்கு அன்புடன் பரிமாறினார்கள். அவர்களின் உபசரிப்பை மறக்க முடியாது. பிரயாணத்திற்கு ஆயத்தமான போது, எனது பிரயாணப் பொதிகளை அமரர். இராஜேஸ்வரன் வானில் ஏற்றி, என்னை விமான நிலையத்துக்கு கூட்டிச்சென்று வழி அனுப்பிவைத்தார். விமான நிலையத்தில் நின்ற போது “அன்ரி எங்களிடமிருந்து பிரித்து உங்களை வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பது எனக்கு துளிகூட விருப்பம் இல்லை. ஆனால் உங்களுடைய பிள்ளைகள் மூவரும் வெளிநாடுகளில் இருப்பதனால் உங்களை அனுப்ப வேண்டிய நிலையாகிவிட்டது” என்று சொல்லி மிகுந்த கவலைப்பட்டார். அவர் எனக்கு கூறியவற்றை இப்போது நினைக்கும் நேரங்களில் எனக்கு மிகுந்த கவலையாக இருக்கிறது.

பிறந்த நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்து செல்லப் போவதை பற்றி சிலருக்கு கூறியபோது “அங்கு குளிர் தாங்க முடியாது. ஒரே பனி கொட்டுமாம் ஒருவரையும் வெளியில் சென்று சந்திக்க முடியாது. ஒரு அறைக்குள் இருக்க வேண்டியது தான்” என்று சொன்னார்கள். இங்கு வந்து

சேர்ந்த அடுத்த கிழமை எனது மகனின் இரண்டாவது மகனுக்கு ரொறன்ரோவில் (Toronto) முதலாவது பிறந்த நாள் கொண்டாட்டம் நடைபெற்றது. பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு அநேகமான உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் வருகை தந்திருந்தார்கள். அவர்கள் அனைவரையும் அங்கு சந்தித்தது மிகவும் மகிழ்ச்சி. அவர்களுடன் அன்பாக பேசி மகிழ்ந்தோம். ஒரு மாதத்தின் பின் எனது மகள் பாமினியின் இரண்டாவது மகனுக்கு மொன்றியலில் முதலாவது பிறந்தநாள் கொண்டாட்டம் நடைபெற்றது. அங்குள்ள உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு வந்து இருந்தார்கள். அவர்கள் அனைவருடனும் அன்பாகப் பேசி மகிழ்ந்தோம். அதன்பின் ரொறன்ரோவில் இருக்கும் உறவினர்கள் திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழா, பிறந்தநாள் கொண்டாட்டம் போன்ற வைபவங்களுக்கு அடிக்கடி அழைக்கும் போது அந்த கொண்டாட்டங்களுக்கும் எல்லோரும் சென்று வந்தோம். குளிர்காலம் தொடங்கியதும், குளிருக்கு அணியும் உடுப்புக்கள், காலணிகள் யாவற்றையும் பிள்ளைகள் வாங்கித் தந்தார்கள். குளிர் (Snow) காலத்திலும் வெளியில் கூட்டிச் செல்வார்கள்.

அவர்கள் வேலைக்கு செல்லும் நேரம் தவிர்ந்த மற்ற நேரங்களில் கடைகள், கோயில்கள், விழாக்கள் அனைத்து இடங்களுக்கும் தாங்கள் போகும்போது எங்களையும் தங்களுடன் கூட்டிச் செல்வார்கள். அமெரிக்காவில் இருக்கும் எங்கள் மகன் வீட்டுக்கு கோடை காலங்களில் சென்று வருவோம். மகன் குடும்பத்தினரும் இங்கு அடிக்கடி வந்து போவார்கள். அமெரிக்காவில் உள்ள "நயாகரா" நீர்வீழ்ச்சியை பார்பதற்கு மகன் எங்களைக் கூட்டிச் சென்றார். அங்குள்ள இராசேஸ்வரி அம்மன் கோயிலிற்கு பல தடவைகள் சென்று வந்தோம். மொன்றியாலில் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில், துர்க்கை அம்மன் கோயில் அருள்மிகு திருமுருகன் கோயில் யாவற்றிலும் வருடா வருடம் திருவிழாக்கள் தேர், தீர்த்தம். பூங்காவனம் யாவும் எங்கள் ஊர்க் கோயில்களில் நடைபெறுவது போல நடைபெறுகின்றன. வல்மொறின் முருகன் கோயில் மலையில் அமைந்திருக்கின்றது. அங்கு தேர் திருவிழாவுக்கு ரொறன்ரோவிலிருந்து காவடிகள், தூக்கு காவடிகள் யாவும் மிகவும் சிறப்பாக வந்து சேர்ந்துவிடும். நாங்கள் பல தடவை தேர் திருவிழாவுக்கு சென்று வந்தோம். அங்குள்ள தொங்கு பாலத்தில் நடந்து சென்று திரும்பி வந்தோம் Quebec city க்கு இரண்டு மூன்று முறை காலையில் சென்று இரவு வீட்டுக்கு திரும்பி வந்தோம்.

எங்களுடைய பேத்தி ஆஞ்சனாவை "தமிழர் ஒளி இணையம்" என்ற இடத்தில் சனிக்கிழமைகளில் தமிழ் வகுப்புக்கு கூட்டிக்கொண்டு போவார்கள். அங்கு பத்தாம் வகுப்பு வரை தமிழ் படித்தார்கள். பின் அதிகன் பாடசாலைக்குப் போக ஆரம்பித்ததும் அவரையும் தமிழ் வகுப்புக்கு கூட்டிக்கொண்டு போனார்கள். அங்கு பேரப் பிள்ளைகள் தமிழ் படிப்பதற்கு போகும் நேரம் எங்களையும் கூட்டிக்கொண்டு போனார்கள். "தமிழர் ஒளி இணையத்தில்" தமிழர் ஒளி மூத்தோர் இணையம் (Tamilar Oli Senior Association) செயல்படுவதாக அறிந்தோம். அந்த மூத்தோர் இணையத்தில் நாங்கள் இருவரும் அங்கத்தவர்களாகச் சேர்ந்தோம்.

அங்கு ஒவ்வொரு மாதமும் முதல் வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் கூட்டம் நடை பெற்றது. நாங்கள் மாத கூட்டங்களுக்கு சென்று வந்தோம். வருடா வருடம் பொங்கல் விழா, அன்னையர் தினக் கொண்டாட்டம், தந்தையர் தின கொண்டாட்டம் யாவும் நடைபெற்றன. கொண்டாட்டங்களுக்கு தமிழர் ஒளி இணைய பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள்,

மாணவர்களின் பெற்றோர்கள், மூத்தோர், இணைய அங்கத்தவர்கள் அனைவரும் வருகை தந்தார்கள். கொண்டாட்டங்களுக்கு அங்குள்ள வட்டார MP, City Councelar ஆகியோரை யும் அழைத்தார்கள். வருடா வருடம் பிரத்தியேகமாக மண்டபம் எடுத்து "முத்தமிழ் விழா" கொண்டாடினார்கள். முத்தமிழ் விழாவின் போது தமிழர் ஒளி இணைய ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நாடகங்கள், நடனங்கள், வில்லுப்பாட்டு முதலியவற்றை பயிற்றுவித்து அவர்களை மேடை ஏற்றினார்கள்.

மாணவர்களின் பாடசாலை விடுமுறைக் காலத்தில் கிராம சபையினரிடம் உத்தரவு பெற்று பூங்கா மைதானத்தில் விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றன. எங்களுடைய பேரப்பிள்ளைகளும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி பரிசுகள் பெற்றார்கள். மூத்தோருக்கு குண்டெறிதல், வேக நடை போன்ற விளையாட்டுகளும் நடைபெற்றன. எனது கணவர் அடுத்தடுத்து மூன்று வருடங்கள் பங்குபற்றி முதலாம், இரண்டாம் இடங்களில் வெற்றி பெற்று வெண்கல கேடயங்களை பரிசாகப் பெற்றார். எனக்கு வேக நடைப் போட்டியில் தொடர்ந்து மூன்று வருடங்கள் பங்கு பற்றியதால் மூன்று வெண்கல கேடயங்கள் பரிசாகக் கிடைத்தன. தமிழர் ஒளி மூத்தோர் இணையத்தில் பல வருட காலங்கள் அங்கத்தவர்களாக இருந்தமையால் எனக்கும், எனது கணவருக்கும் பரிசுகள் தந்தார்கள்.

பாடசாலையில் பிறமொழிகளில் கல்வி கற்கும் எங்கள் பேரப் பிள்ளைகள் இருவரும் தமிழ் படிப்பதற்கு "தமிழர் ஒளி இணைய" பாடசாலைக்கு தொடர்ந்து சென்று வந்ததால் அவர்கள் தமிழில் பேச, எழுத வாசிக்க கற்றுக் கொண்டார்கள். இங்கு நடைபெற்ற பொது அறிவுப் போட்டிகள் அனைத்திலும் இருவரும் பங்குபற்றி தங்கப் பதக்கங்களை (Gold Medal) வென்றெடுத்தார்கள். மகாஜனா கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் நடத்திய தமிழ் அறிவு போட்டிகளிலும் பங்குபற்றி தங்கப் பதக்கங்களை வென்றெடுத்தார்கள்.

நாங்கள் தமிழர் ஒளி மூத்தோர் இணையத்தில் மாத்திரமல்ல Himalaya Seniors Association என்று பல்வேறு நாட்டு மக்களும் பங்குபற்றும் கூட்டங்களுக்கும் சென்று வந்தோம். அங்கு ஒவ்வொரு ஆண்டும் பிரமாண்டமான விழாக்கள் நடைபெற்றன. உணவுகளும் பரிமாறினார்கள். Himalaya Seniors Association கூட்டங்களுக்கும் தொடர்ந்து பல வருட காலங்கள் சென்று வந்ததால் எனக்கும், எனது கணவருக்கும் வெள்ளிக் கேடயங்கள் அன்பளிப்பாகத் தந்தார்கள். வேறு நாடுகளில் இருக்கும் உறவினர்கள், நண்பர்கள் எங்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளும் போது உங்களுக்கு என்ன பொழுது போக்கு என்று எங்களைக் கேட்பார்கள். மூத்தோர் இணைய கூட்டங்கள், கொண்டாட்டங்கள் அனைத்திற்கும் செல்வது, Himalaya Seniors Association கூட்டங்களுக்கு, கொண்டாட் டங்களுக்கு செல்வது மற்றும் பேரப்பிள்ளைகள் சிறுவர்களாக இருந்த போது அவர்களுக்கு வீட்டில் செய்யவேண்டிய பாடங்களை செய்வதற்கு, விளங்காதனவற்றை சொல்லிக் கொடுப்பது போன்றவைகளெல்லாம் எங்கள் பொழுது போக்குகள் என்று சொல்லுவோம்.

கனடா மொன்றியலில் ஆரம்பத்தில் மொன்றியல் தமிழ் வானொலி (M.T.R) சர்வதேச தமிழ் வானொலி (I.T.R) ஆகிய இரண்டு வானொலிகள் சேவையில் இருந்தன. இரண்டு வானொலிகளின் நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவதற்கும் கேட்பதற்கும் M.T.R வானொலிப்பெட்டி I.T.R வானொலிப்பெட்டி இரண்டு வானொலிப் பெட்டிகளையும் வாங்கி வைத்திருந்தேன்.

மொன்றியலில் தமிழ் வானொலியில் வாழ்த்து நிகழ்ச்சி, விரும்பிய பாடல்களை கேட்கும் நிகழ்ச்சி, பொது அறிவு, கேள்வி பதில்கள், போன்ற நிகழ்ச்சிகளில் பங்குபற்றினேன். அங்கு சில போட்டி நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றி பரிசுகள் பெற்றேன். அவர்கள் பிரத்தியேகமாக மண்டபம் எடுத்து ஒன்றுகூடல் நிகழ்ச்சி நடத்தினார்கள். அந்த நிகழ்ச்சிக்கு மகள் பாமினி குடும்பத்தினர் எங்களையும் கூட்டிக் கொண்டு போனார்கள் வானொலியை செவிமடுக்கும் போது அறிவிப்பாளர்கள், நேயர்கள் ஆகியோரின் குரல்களை மாத்திரம் கேட்போம். ஒன்று கூடல் நிகழ்ச்சியின் போது அங்கு பணிபுரியும் அறிவிப்பாளர்கள் நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் நேயர்கள், அனைவரையும் நேரில் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது முன்பின் தெரியாத வெவ்வேறு ஊர் மக்களின் நட்பும் கிடைத்தது.

சர்வதேச தமிழ் வானொலியில் வாழ்த்து நிகழ்ச்சி, பொது அறிவு, கேள்வி பதில், மங்கையர் மஞ்சரி, பலதும் பத்தும், பொதுமேடை, குறுக்கெழுத்துப்போட்டி, திருவருள் ஆகிய நிகழ்ச்சிகள் அனைத்திலும் பங்கு பற்றினேன். அங்கு பல போட்டி நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அவற்றில் எல்லாம் பங்குபற்றி பரிசுகளும் பெற்றேன். சர்வதேச தமிழ் வானொலியினரும் ஒன்றுகூடல் நடத்தினார்கள். அவர்கள் “கணேசா விருந்துபசார மண்டபத்தில்” ஒவ்வொரு ஆண்டும் ஒன்றுகூடல் நடத்தினார்கள். அதன் பொழுது முதலில் வரவேற்புரை நடைபெற்று, அதன் பின் மேடை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மேடை நிகழ்ச்சிகளில் எங்கள் பேத்தி ஆஞ்சனா எட்டு வயது சிறுமியாக இருந்த காலத்திலிருந்து நடனம், பேச்சுப் போட்டி, வினோத உடை போட்டி, சங்கீத கதிரை போன்ற நிகழ்ச்சிகளில் பங்கு பற்றினார். எங்கள் பேரன் அதிகன் மூன்று வயதில் மேடையில் ஏறி ஒலிவாங்கிக்கு முன்னால் நின்று “சின்னத்தம்பி சின்னத்தம்பி நித்திரையோ நித்திரையோ மணி அடிக்கிறது மணி அடிக்கிறது எழும்புங்கோ எழும்புங்கோ” என்று பாடி மண்டபங்கள் நிறைந்த கரகோஷங்களைப் பெற்றார். அவருக்கு பரிசுப் பொருட்களும் கிடைத்தன.

மொன்றியலில் “அகரம் தமிழ் வானொலி” பெயரிலும் ஒரு வானொலி சிறிது காலம் சேவையில் இருந்தது. அந்த வானொலி நிகழ்ச்சிகளிலும் எனது பங்களிப்பு இருந்தது. அவர்களும் ஒன்று கூடல்கள் கணேசா விருந்துபசார மண்டபத்தில் நடாத்தினார்கள். அதன் போது அங்கு பணிபுரிந்த அறிவிப்பாளர்கள், நேயர்கள் ஆகியோரின் நட்பும் எனக்கு கிடைத்தது. தற்பொழுது மேலே கூறிய வானொலிகள் யாவும் சேவையில் இல்லை. இப்போ மொன்றியலில் Time FM என்ற வானொலி தான் சேவையில் இருக்கிறது. இந்த வானொலி நிகழ்ச்சிகளில் சிறிது காலம் பங்குபற்றினேன். இப்போ எனது உடல் நலக்குறைவு காரணமாக பங்குபற்றுவது இல்லை. சிறுபராயத்தில் எனது பேரப்பிள்ளைகள் ஆஞ்சனா, அதிகன் இருவரும் இணைந்து எனக்கு அன்னையர்தின வாழ்த்து மடல் எழுதித் தந்தார்கள் அதனை இத்துடன் இணைத்துள்ளேன்.

அன்னையர் தின வாழ்த்துகள்

**தாய் போல் எந்த உறவும் கிடைப்பதில்லை**
**தாய்ப் பாசத்தை போல் எதுவும் அருமை இல்லை**
**வானம் நிறைய நட்சத்திரங்கள் இருந்தாலும்**

**வாழ்க்கைக்கு தேவையான ஒரே நட்சத்திரம் அம்மா**

**உங்களின் விவேகமுள்ள சொற்கள்**
**எனது எதிர்காலத்துக்கு உதவும்**

நான் பிறக்க முதல் முருகன் உங்களுக்கு சொன்னது நீங்கள்தான் என் கடவுள் இன்று போல் பல ஆண்டுகள் அன்னையர் தின வாழ்த்தை நான் உங்களுக்கு வாழ்த்த விரும்புகிறேன்

**அன்பான அம்மம்மா**
**அறிவான அம்மம்மா**

**திறமையான அம்மம்மா**
**புகழான அம்மம்மா**

**அழகான அம்மம்மா**
**உங்கள் பாசத்திற்கும் அன்பிற்கும்**

**அடிமையான உங்கள் பேரப் பிள்ளைகள் ஆஞ்சனாவும் அதிகனும்**

2007ம் ஆண்டு ஜேர்மனியில் இருக்கும் எங்கள் மகள் திருமதி. ரோகிணி கிருஷ்ணகுமார் வீட்டுக்கு சென்று வந்தோம். ஜேர்மனி நாட்டுக்கு பக்கத்து நாடான சுவிற்சர்லாந்தில் எனது சின்னண்ணை அமரர். மாணிக்கவாசகரின் பிள்ளைகள் ஐவர் இருக்கிறார்கள். மூத்த மகள் திருமதி. தவரூபி சுகந்தன் Basal என்ற இடத்திலும், மூன்றாவது மகள் சிவரூபி பிரேமகுமர் Zurich என்ற இடத்திலும், நான்காவது மகள் ஜெயரூபி ஜெயக்குமார் குடும்பத்தினரும், திரு. மணிவண்ணன் குடும்பத்தினரும் Bern என்ற இடத்திலும், திரு. சீராளன் கூர் என்ற இடத்திலும் இருக்கிறார்கள். ஜேர்மனியில் இருந்து புகையிரதம் மூலம் அங்கு சென்று அனைவரது வீடுகளிலும் இரண்டு இரண்டு நாட்கள் தங்கி நின்று வந்தோம். திரு மணிவண்ணன் அல்ப்மலை தொடருக்கு எங்களைக் கூட்டிச் சென்று காண்பித்தார். மலைமீது ஓடும் மின்சார வண்டியில் எங்களை கூட்டிச் சென்று திரும்ப கூட்டிக்கொண்டு வந்தார். பாராளுமன்ற கட்டிடம் மற்றும் இன்னும் பல இடங்களுக்குக் கூட்டிச் சென்றார். திருமதி. ஜெயரூபி வீட்டுக்கு சென்றபோது திரு. ஜெயக்குமாரும், மகள் யதானாவும் எங்களை ஜெனிவாவுக்கு கூட்டிச் சென்றார்கள். எங்களுடன் சின்ன மச்சாளும் (அமரர் றோசம்மா) வந்திருந்தார். அங்கு U.N.O வில் சகல நாடுகளின் கொடிகள் அமைந்திருந்த இடத்தில் எங்களை நிற்கும்படி சொல்லி புகைப்படம் எடுத்தார்கள். உள் பகுதிகளுக்கும் சென்று சுற்றி பார்த்து வந்தோம். அந்த வளாகத்தில் இரண்டு மயில்கள் ஜோடி நின்றன. அவற்றையும் போட்டோ எடுத்தோம்.

திருமதி. தவரூபி வீட்டிற்கு போனபோது அங்குள்ள இராச இராசேஸ்வரி அம்மன் கோயிலுக்கு எங்களை கூட்டிச் சென்றார்கள். திரு. சீராளன் வீட்டுக்கு சென்றபோது அன்றைய தினம் சுவிட்சர்லாந்தின் சுதந்திர தினம். (August 01 - 2007) அவர்கள் எங்களை சுதந்திர தினத்தை முன்னிட்டு அன்று இரவு வாண வேடிக்கை நடைபெற்ற இடத்திற்கு கூட்டிச்சென்று காண்பித்தார்கள். வாணவேடிக்கை எங்களுக்கு புதிதல்ல, ஏற்கனவே கனடா சுதந்திர

தினத்தன்று (July1) கனடாவில் பார்த்தோம். July 4ம் திகதி அமெரிக்காவின் சுதந்திர தினத்தன்று கடற்கரையில் பெருந்திரளான மக்கள் மத்தியில் நின்றும் வாண வேடிக்கை பார்த்து மகிழ்ந்தோம். சுவிஸ் நாட்டு சுதந்திர தினத்தன்றும் அங்கு சென்றபோது வாண வேடிக்கை பார்த்தது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

அதன்பின் நாங்கள் புகைவண்டி மூலம் ஜேர்மனிக்கு திரும்பி சென்றோம். ஜேர்மனியில் கேளின் என்ற இடத்தில் மருக்கொழுந்து அக்காவின் இளைய மகள் திருமதி தேவகுமாரி பாக்கியநாதன் (ராசாத்தி) வீட்டுக்கு எங்கள் மருமகன் திரு. கிருஷ்ணகுமார் தனது குடும்பத்துடன் புகைவண்டியில் எங்களையும் கூட்டி சென்றார். அங்கு இரண்டு நாட்கள் தங்கி நின்று வந்தோம். ராசாத்திக்கு இரண்டு ஆண்பிளை பிள்ளைகள் இருக்கிறார்கள். மூத்த மகன் யனா இரண்டாவது மகன் சந்தோஸ். இரண்டாவது மகன் புகையிரத நிலையத்திற்கு வந்து எங்களைக் கூட்டிச் சென்றார். பின் எங்களை வழியனுப்பவும் புகையிரத நிலையம் வரை கூட்டி சென்றார். இரு மகன்களும் அழகாக தமிழில் எங்களை வரவேற்று அன்பாக உபசரித்தார்கள். அடுத்த நாள் எனது சின்னண்ணை அமரர் மாணிக்கவாசகரின் இரண்டாவது மகள் திருமதி கலாரூபி ஜேசுதாசன் வீட்டுக்கு சென்று வந்தோம் அதன்பின் திரு கிருஷ்ணகுமார் ரோகிணி குடும்பத்தினருடன் திரு மணிவண்ணனின் இரண்டாவது மகள் ஜஸ்மினின் பூப்புனித நீராட்டு விழாவிற்கு அதிகாலையில் வானில் (van) சுவிஸ் சென்று அன்று இரவு ஜேர்மனிக்கு திரும்பி வந்தோம். சிறிது நாள்கள் ஜெர்மனியில் தங்கி நின்றபின் கனடாவுக்கு வந்து சேர்ந்தோம்.

2010ம் ஆண்டு திரு. திருமதி கிருஷ்ணகுமார் ரோகினி தம்பதியினரின் மூத்த மகள் ஆதித்யாவின் (எங்கள் பேத்தி) பூப்புனித நீராட்டு விழாவை முன்னிட்டு ஜேர்மனிக்கு சென்றோம். நீராட்டு வைபவம் சுவிற்சர்லாந்தில் எனது சின்னண்ணன் அமரர். மாணிக்க வாசகரில் மூத்த மகள் திருமதி. தவரூபி சுகந்தன் வீட்டில் 30.12.2010இல் நடைபெற்று அதனைத் தொடர்ந்து பிரத்தியேக மண்டபம் ஒன்றில், எல்லோரும் ஒன்று கூடி விழாவை சிறப்பாக நடத்தி, விருந்துபசாரத்தில் கலந்து கொண்டோம். கனடாவில் இருந்து பாமினியும் பிள்ளைகள் ஆஞ்சனா, அதிகன் ஆகியோரும் அமெரிக்காவில் இருந்து எங்கள் மகன், மருமகள் சோபனா பிள்ளைகள் அபிலாசன், ஆரூரன் ஆகியோரும் அங்கு சென்று விழாவை சிறப்பித்தார்கள். எனது மச்சாள் அமரர். றோசம்மா மாணிக்கவாசகர், மூத்தமகள் தவரூபி, சுகந்தன் குடும்பத்தினர், இரண்டாவது மகள் கலாரூபி ஜேசுதாசன் குடும்பத்தினர், மூன்றாவது மகள் சிவரூபி, பிரேமகுமார் குடும்பத்தினர், நான்காவது மகள் ஜெயரூபி, ஜெயக்குமார் குடும்பத்தினர், மகன் மணிவண்ணன் குடும்பத்தினர், இளைய மகன் சீராளன் குடும்பத்தினர் யாவரும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

எங்கள் மகள் பாமினியின் பிறந்தநாள் அன்றைய தினம் 30.12.2010 ஆதலால் அதே மண்டபத்தில் பாமினிக்கு மென்வெதுப்பம் வெட்டி எல்லோரும் மகிழ்ச்சியாக கொண்டாடினோம். அடுத்த நாள் 31.12.2010ல் நாங்கள் அனைவரும் சுவிட்சர்லாந்தில் இருந்து ஜேர்மனிக்கு சென்றோம். 1.1.2011 ஆங்கில வருடப் பிறப்பன்று எங்கள் மகன் மருமகள் அவர்களின் பிள்ளைகளும் பாமினியும் பிள்ளைகளும் நாங்களும் ரோகிணி வீட்டில் தங்கியிருந்தோம் அன்றிரவு ஜேர்மனி நாடே ஒளிமயமாக வாணவேடிக்கைகள் நடைபெற்றன. நாங்கள் எல்லோரும் வாணவேடிக்கை பார்த்து மகிழ்ந்தோம்.

ஆங்கிலத்தை அரசகரும மொழியாகக் கொண்ட நாடான அமெரிக்காவில் ஆங்கில மொழியில் கல்வி கற்ற எங்கள் பேரப்பிள்ளைகள் அபிலாசன், ஆரூரன் இருவரும், ஆங்கிலமொழி, பிரான்ஸ் (Franch) மொழி ஆகிய இரு மொழிகளையும், அரசகரும மொழியாக கொண்ட நாடான மொன்றியல் கனடாவில் கல்வி கற்ற எங்கள் பேரப்பிள்ளைகள் ஆஞ்சனா, அதிகன் ஆகிய இருவரும், ஜேர்மன் மொழியை (Dotch) அரசகரும மொழியாக கொண்ட நாடான ஜேர்மனி நாட்டில் கல்வி கற்ற எங்கள் பேரப்பிள்ளைகள் ஆதித்யா, அதிசயா, அனுசன் ஆகிய மூவரும் என எல்லோருமாக எங்களுடைய சப்தஸ்வரங்கள் போன்ற ஏழு பேரப்பிள்ளை களும் ஜேர்மனி நாட்டில் ஒருவருக்கொருவர் தமிழ் மொழியில் பேசி ஒன்று கூடி விளையாடி யதைப் பார்த்து நாங்கள் அளவிலா மகிழ்ச்சி அடைந்தோம். வெவ்வேறு நாட்டு மொழியில் அவர்கள் கற்ற போதும் எங்கள் தாய் மொழியாகிய தமிழில் பேசி மகிழ்ந்தது எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது. பின் மகன் குடும்பத்தினர் அமெரிக்காவுக்கு திரும்பிச் சென்றார்கள் அவர்கள் ஜேர்மனியிலிருந்து சென்றபின் நாங்கள் 5.1.2011ல் ஜேர்மனியிலிருந்து மொன்றியல் கனடாவுக்கு வந்து சேர்ந்தோம்.

ஆரம்பக் காலத்தில் தமிழர் ஒளி இணையத்தில் தமிழ் மொழியை கற்கும் மாணவர்கள், அவர்களது பெற்றார்கள், தமிழ் ஒளியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள், தமிழ் ஒளி இணை யத்தின் மூத்தோர் இணையத்தினர் ஆகிய அனைவரும் ஒருங்கிணைந்து அன்னையர் தினத்தை கொண்டாடினார்கள். ஒவ்வொரு ஆண்டும் City Counciller Mery Deros அம்மையார் அன்னையர் தினக் கொண்டாட்டத்திற்கு வருகை தந்து அனைத்து அன்னையர் களுக்கும் வாழ்த்துக்களைக் கூறுவார். சிறுவர்கள் பாடல்களை பாடுவார்கள், நடனமாடுவார்கள் மிகவும் மகிழ்ச்சியாக தமது தாயைப் பற்றி சிறப்பாக உரையாற்றுவார்கள் மூத்தோரும் பாடத் தெரிந்தவர்கள் அம்மாவைப் பற்றிய பாடல்களை பாடுவார்கள், நடனமும் ஆடுவார்கள், நாடகமும் நடித்தார்கள், எல்லோருக்கும் சிற்றுண்டி பரிமாறினார்கள்.

பின் 2010ம் ஆண்டிலிருந்து கணேசா விருந்து உபசார மண்டபத்தில், மொன்றியலில் இருக்கும் அன்னையர்கள் அனைவரையும் அழைத்து அன்னையர் தினம் கொண்டாடப்பட்டது அந்தச் சந்தர்ப்பத்தில், அன்னையர்களுக்கு மலர்கள் கொடுத்து கௌரவித்தார்கள். சிறுவர்கள் அன்னையைப் பற்றிய பாடல்களைப் பாடினார்கள், நடனமும் ஆடினார்கள். அன்னையர்கள் தத்தமது தாய்மார்கள் தம் மேல் வைத்திருந்த அன்பு பாசத்தை பற்றி நினைவு கூர்ந்து உரையாற்றினார்கள், எல்லோருக்கும் சிற்றுண்டிகளும் இரவு உணவுகளும் பரிமாறப்பட்டது. சர்வதேச தமிழ் வானொலியின் முன்னாள் அறிவிப்பாளரான உமாவின் நெறியாள்கையில் நிகழ்ச்சிகள் யாவும் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

2008ம் ஆண்டு எங்களுக்கு மிக நெருங்கிய உறவினர்களை வீட்டுக்கு அழைத்து எங்கள் பேத்தி ஆஞ்சனாவுக்கு பூப்புனித நீராட்டி மிகுந்த மகிழ்ச்சி அடைந்தோம். நீராட்டலின் போது எங்கள் மகனும், மருமகளும் மாமன் மாமி பெண்ணை அழைத்து வர, நில பாவாடை விரித்து எங்கள் கலாசார முறைப்படி நீராட்டியதில் பெருமகிழ்ச்சி அடைந்தோம். அனைவருக்கும் சிற்றுண்டி, மதிய போசனம் வழங்கினோம். அதன்பின் ரொறன்ரோவில் பிரத்தியேக மண்டபம் ஒழுங்கு செய்து அங்குள்ள ஏனைய உறவினர்கள், நண்பர்களை அழைத்து வெகு விமரிசையாக விழாவைக் கொண்டாடி மகிழ்ந்தோம்.

2017ம் ஆண்டு திரு திருமதி. தர்மதாஸ் பாமினி தம்பதியினருக்கு 25வது திருமண நாளை கணேசா விருந்து உபசார மண்டபத்தில் கொண்டாடினோம். அவர்களது பிள்ளைகள் ஆஞ்சனாவும், அதிகனும் பெற்றாரை வியப்பூட்டும் வண்ணம் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் மிக அமைதியாக அழைத்து சிறப்பாக கொண்டாடியது எங்களுக்கு பெருமையாக இருந்தது. பிள்ளைகள் பெற்றாரை மகிழ்விக்கும் வண்ணம் விழா எடுத்தது பெருமைக்குரிய விடயம். முதலில் தர்மதாஸ், பாமினி தம்பதியினரின் மகன் அதிகனுக்கு பதினெட்டாவது பிறந்த நாள் நிகழ்வு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து பெற்றாரை வியப்பூட்டும் வகையில் வெள்ளி விழா (Silver Jubili) நிகழ்வை நடத்தினார்கள். கணேசா விருந்துபசார மண்டபத்தினர் முதலில் சுடச்சுட அப்பமும், சம்பலும் அதனுடன் சிற்றுண்டியும் வழங்கினார்கள். வெள்ளி விழா நிறைவு பெற்றபின் இரவு உணவு வழங்கினார்கள். அங்கு வருகை தந்தவர்கள் சிலர் பாடல்களை பாடினார்கள், சிறுவர்கள் சிலர் நடனமாடினார்கள். தம்பதியினர் எங்களை வணங்கி ஆசிர்வாதம் பெற்றார்கள். உறவினர்கள் மேடையில் சென்று வாழ்த்துக்களைக் கூறி மகிழ்ந்தார்கள்.

6.11.2011 ஞாயிற்றுக் கிழமை எங்களுடைய ஐம்பதாவது திருமண நாள் (பொன்விழா) கனடா மொன்றியலில் அமைந்திருக்கும் கணேசா விருந்துபசார மண்டபத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது. விழாவுக்கு எங்கள் மகன் குடும்பத்தினர் அமெரிக்காவிலிருந்து வந்தார்கள். தமிழ் ஒளி மூத்தோர் இணையத் தலைவர் உட்பட அங்கத்தவர்கள், எல்லா நாட்டவர்களும் ஒன்று கூடும் மூத்தோர் இணையத்தினர், (Himalaya Seniors Association) சர்வதேச தமிழ் வானொலி அறிவிப்பாளர்கள், என்னுடன் மிக நெருக்கமாகப் பழகிய வானொலி நேயர்கள், அகரம் தமிழ் வானொலி அறிவிப்பாளர்கள், நேயர்கள் சிலர், மற்றும் மொன்றியலில் இருக்கும் எங்கள் தூரத்து உறவினர்கள் ஆகியோரை விருந்துபசாரத் திற்கு அழைத்திருந்தோம். அன்றைய தினம் மொன்றியலில் ஒரே பனிப் பொழிவும், குளிருமாக இருந்தது. காலநிலை மிக மோசமாக இருந்த போதும், எங்களது அழைப்பை ஏற்று அனைவரும் பொன் விழாவை சிறப்பிப்பதற்கு, வருகை தந்திருந்தமை மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

விழாவை எங்கள் மருமகள் சோபனாவும், எங்கள் இளைய மகள் பாமினியும் மங்கள விளக்கு ஏற்றி ஆரம்பித்து வைத்தார்கள். பொன் விழாக் காண வந்தவர்கள் ஒவ்வொருவராக மேடைக்கு வந்து வாய்மொழி மூலமும், கவிதைகள் மூலமும் எங்களை வாழ்த்தினார்கள். சிலர் கண்ணாடியால் அமைந்த சட்டத்தினுள் வாழ்த்து மடல்களை வடிவமைத்து மேடையில் கொண்டு வந்து வாசித்த பின் எங்களிடம் கையளித்தார்கள். பாடல்கள் பாடத் தெரிந்தவர்கள் பாடல்களைப் பாடினார்கள். அங்கு வருகை தந்த அனைவருக்கும் விருந்து உபசாரம் மண்டபத்தினர் சிற்றுண்டி வழங்கினார்கள். எங்கள் மகன், மருமகள், பேரப்பிள்ளைகள், மகள், மருமகன், பேரப்பிள்ளைகள் அனைவரும் எங்களை வணங்கி ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டார்கள். அங்கு வருகை தந்தவர்களின் பிள்ளைகள் சிலர் நடனமாடினார்கள். நிமாலின் சங்கீத மைந்தர்கள் குழுவினர் மிகவும் அட்டகாசமாக நடனமாடினார்கள் எங்கள் பேத்தி ஆஞ்சனாவும் ஒரு பாடலுக்கு நடனமாடினார்.

கணேசா விருந்துபசார மண்டபத்தினர் மதிய போசனம் தயார் என்று அறிவித்தார்கள் வருகை தந்த அனைவரும் வரிசையாகச் சென்று தமக்கு வேண்டிய உணவுகளை எடுத்து வந்து ரசித்து, சுவைத்து உண்டு மகிழ்ந்தார்கள். விழாவை சிறப்பிக்க வருகை தந்தவர்கள்

ஒவ்வொரு குடும்பமாகவும், தனித்தும் மேடைக்கு வந்து எங்களுக்கு அன்பளிப்புகள் தந்து, ஆசீர்வாதமும் பெற்றுக் கொண்டார்கள். சகல நிகழ்வுகளும் Video வும் புகைப்படங்களும் எடுக்கப்பட்டது. எங்கள் வட்டார பாராளுமன்ற உறுப்பினர் (M.P), Prime minister of Canada, Government General of Canada ஆகியோர் பொன் விழாவை முன்னிட்டு எங்களுக்கு வாழ்த்து மடல்களை அனுப்பியிருந்தார்கள். அவற்றை எங்களுடைய பேத்தி ஆஞ்சனாவும், பேரன் அபிலாசனும் மேடையில் கொண்டுவந்து வாசித்தார்கள். விழாவுக்கு வந்தவர்கள் கைதட்டி ஆரவாரித்தார்கள். விழா மிகவும் சிறந்த முறையில் நடைபெற்று மகிழ்ச்சியாக நிறைவுபெற்றது.

எங்களுடைய மூன்று பெண் பேரப்பிள்ளைகளில் மூத்தவர்களான ஆஞ்சனா, ஆதித்தியா, ஆகிய இருவருடைய பூப்புனித நீராட்டு விழாக்களை நேரில் பார்ப்பதற்கு எங்களுக்கு எல்லாம் வல்ல இறைவனின் திருவருள் கிடைத்தது. ஆனால் எங்களுடைய இரண்டாவது பேத்தி அதிசயாவின் பூப்புனித நீராட்டு விழாவை நேரில் சென்று பார்த்து மகிழ்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்காமல் போய்விட்டது. Video மூலம் பார்த்து மன திருப்தி அடைந்தோம்.

2018ம் ஆண்டு எங்களுடைய மூத்த பேத்தி ஆஞ்சனாவின் திருமணத்தை முன்னிட்டு நாங்கள் எல்லோரும் மொன்றியல் கனடாவில் இருந்து இலங்கைக்கு சென்றிருந்தோம். எங்களுடைய மகனின் குடும்பத்தினரும் அமெரிக்காவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்திருந்தார்கள். திருமண வைபவத்திற்கு அங்கு இருந்த எங்கள் உறவினர்களை அழைத்து இருந்தோம். எங்கள் அழைப்பை ஏற்று அவர்கள் திருமண நிகழ்வுக்கு வருகை தந்து சிறப்பித் தார்கள் இலங்கையில் நாங்கள் ஒரு மாத காலம் தங்கி இருந்தோம். அப்போது கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, ஆகிய இடங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் சந்திப்பதற்கு எங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

மட்டக்களப்பில் எனது சிறிய தகப்பனாரின் மகன் அமரர். தெய்வேந்திரராசாவின் (காந்தி) வீட்டுக்குச் சென்றோம். அங்கு அவரின் மனைவி திருமதி. ஜெகதாம்பிகை மகள் ஹரிசாந்தி மருமகன் பேரப்பிள்ளைகள் ஆகியோர் எங்களை வரவேற்று, சிற்றூண்டியும் அதன்பின் மதிய போசனமும் பரிமாறி உபசரித்தார்கள். நாங்கள் எமது ஊரை விட்டு இடம் பெயர்ந்து இருபத்தேழு ஆண்டுகளின் பின் எங்களுடைய உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், அனைவரையும் சந்தித்ததில் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தோம். எங்களுடைய பெண் பேரப்பிள்ளைகள், மூவரினது விழாக்களும், மிகவும் சிறப்பாக நடைபெற்றன. எங்களுடைய மகனுக்கு இரண்டு ஆண்பிளைப் பிள்ளைகள் ஆதலால் அவர்களது இருவரது முதலாவது பிறந்தநாள் கொண்டாட்டத்தை உறவினர், நண்பர்களுக்கு இராப்போசன விருந்தளித்து றொறன்ரோ, கனடாவில் மிகவும் சிறப்பாக கொண்டாடினார்கள். அதன் பின்னர் அவர்களின் பிறந்தநாட்களை வீட்டில் அமைதியாகவே கொண்டாடினார்கள்.

2019ல் எங்களுடைய மகனின் மூத்தமகன் (எங்களுடைய மூத்த பேரன்) அபிலாசன், தனது பொறியியல் (Engineering) பட்டப்படிப்பை நிறைவுசெய்து பரீட்சையில் சித்திபெற்று, உடனடியாக தொழில் வாய்ப்பையும் பெற்றிருந்தார். இந்த மகிழ்ச்சிகரமான நிகழ்வை உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அழைத்து, இராப்போசன விருந்துபசாரம் ஒன்றை

ரொறன்ரோ, கனடாவில் ஏற்பாடு செய்தார்கள். எனது மனம் நிறைந்த சிறப்பான வாழ்த்துக் களுடன் அந்த நிகழ்வு ஆரம்பமானது. வாழ்த்துக்கள், ஆடல், பாடல்களுடன் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. எங்களுடைய உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் குடும்பம், குடும்பமாக வருகை தந்து நிகழ்வை சிறப்பித்ததையிட்டு எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

2020ம் ஆண்டு மூத்த பேத்தி ஆஞ்சனா, றிசோயனுக்கு (Rishojan) ஒரு பெண் குழந்தை பிறந்தாள். எங்களுக்கு முன்னம், முன்னம் வந்த முத்து பூட்டியின் வருகையினால் அளவில்லா மகிழ்ச்சி அடைந்தோம். குழந்தைக்கு ஆக்சனா என பெயர் சூட்டி அவரின் சோறு ஊட்டல், பல்லு முளைத்ததும், கொழுக்கட்டை கொட்டுதல், முதலாவது பிறந்தநாள் கொண்டாட்டம் ஆகியவற்றை கண்டுகளித்ததோடு அவரது மழலை மொழிகளையும் நாளாந்தம் கேட்டு மகிழ்ந்து கொண்டிருக்கிறோம்.

2021ல் November 6ம் திகதி எங்களுடைய திருமண வாழ்வின் அறுபது ஆண்டுகள் நிறைவு பெற்ற நாள். இதற்கு முதல் நாள் இரவு எங்களுடைய மகன் குடும்பத்தினர் நாங்கள் எதிர்பாராத வகையில் எதுவித அறிவித்தலும் இன்றி அமெரிக்காவிலிருந்து மொன்றியல் கனடாவுக்கு வருகை தந்திருந்தார்கள். மகன், மருமகள், பேரப்பிள்ளைகளும் மகள் பாமினி, மருமகன் பேரப்பிள்ளைகளுடன் பூட்ட பிள்ளையும் சேர்ந்து எங்கள் அறுபதாவது திருமண விழா (வைர விழா)வை மிகவும் சிறப்பாகவும், அமைதியாகவும் கொண்டாடி மகிழ்ந்தார்கள். மருமகள் சோபனாவும் மகள் பாமினியும் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்கள். பூட்ட பிள்ளையுடன் கொண்டாட்டம் நடைபெற்றதையிட்டு எங்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருந்தது. மகன் குடும்பத்தினர், மகள் குடும்பத்தினர், பேத்தி குடும்பத்தினர் அனைவரும் எங்களை வணங்கி, ஆசீர்வாதங்களை பெற்றுக்கொண்டார்கள். எங்கள் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் (M.P), Prime Minister of Canda, Grovemet Genaral of Canada மாட்சிமை தங்கிய எலிசபெத் மகாராணியார் ஆகியோர் எங்களின் அறுபதாவது திருமண நாளுக்கு வாழ்த்து மடல்கள் அனுப்பியுள்ளார்கள். 2022இல் எங்கள் பேத்தி ஆஞ்சனா. றிசோயனுக்கு (Rishojan) ஒரு ஆண் குழந்தை பிறந்திருக்கிறார். அவருக்கு அரோன் என்று பெயர் சூட்டி உள்ளார்கள்.

வாழ்க்கைப் படகு சமுதாயம் என்னும் கடலில் செல்லும்போது இன்னல்கள் என்ற அலைகள் அடிக்கடி வந்து தாக்கும். அறிவு என்ற சுக்கானை நாம் நல்லபடி உபயோகித்தால் இன்னல்கள் என்ற அலைகள் தாமாகவே விலகிக் கொள்ளும் எனது அறுபது வருட திருமண வாழ்வில் சுக துக்கம் சுழல் சக்கரம் என்பது போல சுகசௌகரியங்கள் பற்பல இன்னல்கள் யாவற்றையும் அனுபவித்து பெற்றெடுத்த பிள்ளைகளைப் பேணிப் பாதுகாத்து அவர்களுக்கு திருமணங்களையும் செய்து வைத்தேன். எனது பிள்ளைகளுக்கு பாசமுள்ள அம்மாவாக, மருமக்களுக்கு பாசமுள்ள மாமியாக, பேரப்பிள்ளைகளுக்குப் பாசமுள்ள பேத்தியாக, பூட்டபிள்ளை களுக்கு பாசமுள்ள பாட்டியாக இருந்து எனது வாழ்வில் நிறைவான பலனை அடைந்துள்ளேன். சப்தஸ்வரங்கள் போன்ற எனது பேரப்பிள்ளைகள் பல்கலைக்கழக பட்டப்படிப்பை மேற் கொண்டது. எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி அபிலாசன், ஆரூரன், ஆஞ்சனா, அதிகன் ஆகிய நால் வரும் பல்கலைக்கழக பட்டப் படிப்பில் தேர்ச்சி அடைந்து விட்டார்கள். ஆரூரன் மேற்கொண்டு தொடர்ந்து M.S.C படித்துக் கொண்டிருக்கிறார். ஆஞ்சனா திருமண பந்தத்தில் இணைந்து பெண், ஆண் ஆகிய இரு குழந்தைகளுக்கு தாயாகி விட்டார். ஆதித்யா M.S.C நிறைவு பரீட்சை

எழுத ஆயத்தமாக இருக்கின்றார். அதிசயா பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டுள் ளார். அனுக்ஷன் பல்கலைக்கழக பட்டப்படிப்பை ஆரம்பிக்கவுள்ளார். வாழ்க்கையைப் பூரணமாக நிறைவு செய்த திருப்தியுடன் பூட்ட பிள்ளை ஆக்சனாவின் மழலை மொழிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். இவற்றை விட இனி என்ன தேவை இருக்கிறது. சகலதும் பூரண திருப்தி ஆகிவிட்டது இனி மாதொருபாகனின் அழைப்பு வரும் வரை காத்திருக்கிறேன். இவையாவற்றையும் எழுதுவதற்கு என்னை ஊக்குவித்த திரு. பார்த்தீபனுக்கு மீண்டும் நன்றிகளையும் மனம் நிறைந்த வாழ்த்துக்களையும் கூறிக்கொள்கிறேன்.

# இராஜேஸ்வரி அம்மாவின் நினைவுகள்














# இராஜேஸ்வரி அம்மாவின் நினைவுகள்





BUCKINGHAM PALACE

PALAIS DE BUCKINGHAM

*Mr. Thirunavukarasu Selliah and*

*Mrs. Rajeswaryammah Thirunavukarasu*

*I am delighted to hear that you are celebrating the sixtieth anniversary of your wedding and send you my warmest congratulations and good wishes on this splendid occasion.*

*Elizabeth R.*



Sa Majesté la Reine du chef du Canada/Michelle Perles and/et Corey de Laplante, Rideau Hall

© Her Majesty The Queen in Right of Canada represented by the Office of the Secretary to the Governor General (2011
© Sa Majesté la Reine du chef du Canada représentée par le Bureau du secrétaire du gouverneur général (2011

### Congratulatory Messages from Her Majesty The Queen

Her Majesty The Queen personally approved this message, which was specially designed for the transmission of Her Majesty's best wishes to Canadians. The photograph was taken during The Queen's Royal Tour, from June 28 to July 6, 2010; Her Majesty visited Halifax, Ottawa, Winnipeg, Toronto and Waterloo.

### Message de félicitations de Sa Majesté la Reine

Sa Majesté la Reine a personnellement approuvé l'utilisation de ce message pour transmettre ses meilleurs vœux aux Canadiens. La photo a été prise durant la Tournée royale de la Reine qui s'est déroulée du 28 juin au 6 juillet 2010; Sa Majesté avait alors visité Halifax, Ottawa, Winnipeg, Toronto et Waterloo.

# இராஜேஸ்வரி அம்மாவின் நினைவுகள்







# இராஜேஸ்வரி அம்மாவின் நினைவுகள்











# இராஜேஸ்வரி அம்மாவின் நினைவுகள்












# எனது தந்தையார் வி.பொ.முத்துத்தம்பி

எனது தந்தையார் வி.பொ.முத்துத்தம்பி கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலைக்குப் பின்பக்கம் உள்ள தனது தாயார் அமரர். அன்னப் பிள்ளை அவர்களின் காணிக்குள் அமைந்திருந்த வீட்டில் பிறந்தார். எனது தந்தையாருக்கு மூன்று ஆண் சகோதரர்கள் இருந்தார்கள். அவர்களில் இருவர் மூத்தவர்கள். ஒருவர் இளையவர். மூத்த தமயனின் பெயர் வி.பொ. அப்பாதுரை. அவர் தனது தாயார் அன்னப்பிள்ளையின் வீட்டில் தனது மனைவி பிள்ளைகளுடன் வாழ்ந்தார். அவருக்கு அமரர்களான பொன்னுத்துரை, சண்முகநாதன், இரத்தினம், கனகமணி, அன்னம் ஆகிய ஐந்து பிள்ளைகள் இருந்தார்கள். அவர் தாங்கள் இருந்த வீட்டின் காணியின் பின்பகுதியில் ஒரு கொட்டில் அமைத்து அங்கு சுருட்டு தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி சுருட்டு தொழில் செய்தார். சுருட்டுக்களை வெளி ஊர்களுக்கு அனுப்பி அதன் மூலம் வருமானத்தை பெற்றார். சிறிது காலத்தின் பின் சுருட்டு தொழிலை நிறுத்திவிட்டு, யாழ்ப்பாண பட்டினத்தில் கஜலட்சுமி ஸ்ரோர் என்ற கடையை ஆரம்பித்து, அவரது இரண்டாவது மகன் சண்முகநாதனும் அவருமாக கடையில் வியாபாரம் செய்தார்கள். அங்கு தேயிலை பொதிகள் பிரதானமாக விற்பனை செய்தார்கள். பெரிய சாக்குகளில் தேயிலையை கொள்வனவு செய்து அதனை வீட்டிலிருந்த பெண் பிள்ளைகளான அமரர்கள் இரத்தினம், கனகமணி இருவரும் தராசில் ஒவ்வொரு இறாத்தலாக நிறுத்து, ஈயத்தால் தயாரிக்கப்பட்ட பைகளில் பொதிகள் செய்து வைத்தவற்றை கடையில் கொண்டுபோய் எனது பெரிய தந்தையார் விற்பனை செய்தார். தேயிலை பொதிகள் மாத்திரமல்ல வேறு பாவனைப் பொருட்களும் அங்கு விற்கப்பட்டன. 1946இல் அவர்கள் வாழ்ந்த எங்களுடைய அப்பாச்சியின் வீட்டை இடித்துவிட்டு கல் அரிந்து புதிய வீடொன்றை கட்டி அதில் வாழ்ந்தார்கள். அதன்பின் 1948 ஆம் ஆண்டளவில் அந்த வீட்டின் பக்கம் சுவர்களை நீட்டி நாற்சார் வீடாக கட்டி பெரிய வசதியான வீடாக அமைத்து வாழ்ந்தார்கள்.

எங்கள் பெரிய தந்தையார் எங்கள் மேல் மிகுந்த பாசமும், நேசமும் வைத்திருந்தார். எனது சிறுபராயத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலையில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் மதிய நேர உணவு உண்பதற்கு, பாடசாலையில் மணி அடிப்பார்கள் மணி அடிக்க சிறிது நேரத்துக்கு முன்னரே எனது பெரிய தந்தையார் பாடசாலையின் முற்றத்தில் வந்து நிற்பார். பாடசாலை மணி அடித்தவுடன் என்னை தங்கள் வீட்டுக்கு கூட்டிச் சென்று வாளியில் தண்ணி எடுத்து தந்து முகம், கை, கால்களை கழுவச் சொல்வார். கழுவிய பின் எனக்கு நெற்றியில் விபூதி பூசி விட்டு, தனது பக்கத்தில் இருந்து மதிய உணவு உண்ணச் சொல்வார். உணவு உண்ட பின் என்னை மறுபடியும் பாடசாலையில் கூட்டிக்கொண்டு போய் விடுவார்.

1949ல் அவரது மகள் அமரர். இரத்தினம் என்பவருக்கும், அமரர். இராமநாதன் (முன்னாள் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர்) என்பவருக்கும் திருமணம் நடைபெற்றது. திருமண நிகழ்வுக்கு எனது அம்மாவும், அக்கா குடும்பத்தினரும் என்னையும் அங்கு கூட்டிச் சென்றார்கள். எனக்கு அப்போது பன்னிரெண்டு வயது அங்கும், இங்கும் ஓடித்திருந்தேன். எனது



சிவத்திரு-விசுவநாதர் பொன்னம்பலம் முத்துத்தம்பி
(1890-1942)

பெரியண்ணை குடும்பத்தினரும், சின்னண்ணையும் வவுனியாவிலிருந்து திருமண நிகழ்விற்கு வருகை தந்திருந்தார்கள். அந்த திருமண நிகழ்வு நடந்தபின், எங்களுடைய பெரிய தந்தை அமரர். V.P. அப்பாத்துரை எங்கள் வீட்டுக்கு வந்து போவதை குறைத்துக்கொண்டார். நிறுத்தி விட்டார் என்றே சொல்ல வேண்டும். அதன் பின் எனது அம்மா, சகோதரர்கள் எவரும் அவர்கள் வீட்டுக்கு செல்வதில்லை. எனது சிறுவயதில் அங்கு போக்குவரவு இல்லாததால், அவர்களின் மிகுதி வரலாறு எனக்கு தெரியாது. எங்கள் மேல் அளவு கடந்த பாசமும், நேசமும் வைத்திருந்த எங்களுடைய பெரிய தந்தை எப்படி எங்களை மறந்தார் என்பது எனக்கு மிகுந்த ஆச்சரியமும், கவலையுமாக இருந்தது.

எனது தந்தையாரின் இரண்டாவது தமயனின் பெயர் வி. பொ. சின்னத்துரை அவரை ஊர் மக்கள் "வெளிச்சம் சின்னத்துரை" என்று சொல்வார்கள். அவர் தனது குடும்பத்தினருடன் "ஆனந்த லட்சுமி வாசா" என்ற பெரிய நாட்சார் வீட்டில் வாழ்ந்தார். அவருக்கு அமரர்களான முத்துக்குமார சாமி, தையல்நாயகி, ஆனந்த குமாரசாமி ஆகிய மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். அவர் ஒரு சுருட்டு முதலாளி. ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலைக்குப் பின்பக்கம் இருந்த தனது இருபத்தைந்து பரப்புக் காணியின் முன் பகுதியில் பெரிய நீளமான கொட்டில் அமைத்து, சுருட்டு தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி, சுருட்டுத் தொழில் செய்தார். அவர் அடிக்கடி மட்டக்களப்புக்குச் சென்று அங்கு புகையிலைகளை கொள்வனவு செய்து, அவற்றை சிப்பம் கட்டுபவர்களுக்கு கூலி கொடுத்து, சிப்பங்களை கட்டி, புகையிரதம் மூலம் தனது வீட்டு விலாசத்திற்கு அனுப்புவார். அவர் ஊருக்கு திரும்பி வந்தபின் சிப்பங்களைப் பிரித்து புகையிலைப் பாடங்களாக அடுக்கிவைப்பார். அவற்றுள் தனது சுருட்டுத் தொழிலுக்குத் தேவையான புகையிலைகளை எடுத்தபின் எஞ்சியவற்றை, புகையிலைக்கு நல்மதிப்பு வரும் நேரத்தில் நல்ல லாபத்திற்கு விற்று சமயோசிதமாக பணத்தைச் சம்பாதித்துக் கொள்வார். சுருட்டுகளை Sunlight Soap அடுக்கி வரும் மரப்பெட்டிகளுக்குள் அங்கு வேலை செய்யும் தம்பி அப்பா என்பவர் கட்டுக் கட்டாக ஒழுங்காக அடுக்கி மேல்பெட்டிக்கு பலகை வைத்து நான்கு பக்கமும் ஆணிகளைத் தறைந்து மேல்பெட்டியில் சேரவேண்டிய விலாசத்தையும் எழுதியபின், அவற்றை புகையிரதம் மூலம் அனுப்பிவைப்பார்.

புகையிலைச் சிப்பங்களை புகையிரத நிலையத்திலிருந்து எடுத்து வருவதற்கும், சுருட்டு பெட்டிகளைப் புகையிரத நிலையத்தில் ஒப்படைப்பதற்கும் எனது பெரிய தந்தையார் இரட்டை மாட்டு வண்டில் வைத்திருந்தார். ஒட்டுனராக நாகமுத்து என்பவரை வேலைக்கு அமர்த்தியிருந்தார். புகையிலைச் சிப்பங்களை புகையிரத நிலையத்திலிருந்து வீட்டுக்கு ஏற்றி வருவதும், அடுக்கி வைத்துள்ள சுருட்டுப் பெட்டிகளை புகையிரத நிலைய அதிபரிடம் ஒப்படைத்து பற்றுச் சீட்டு வாங்கி வருவதும் நாகமுத்து என்பவரின் வேலை. சுருட்டுப் பெட்டிகள் விலாசக்காரர்களுக்கு போய்ச் சேர்ந்தவுடன் எனது பெரிய தந்தையார் V.P சின்னதுரைக்கு அங்கிருந்து காசு கட்டளைகள் (Money Orders) வந்து சேர்ந்து கொண்டே இருந்தன.

இரட்டை மாட்டு வண்டிலுக்கு மேல் கூடாரமும் வைத்திருந்தார். குடும்பத்திலுள்ளவர் கள் கோயில்களுக்கு மற்றும் தேவைகளுக்குச் செல்லும் போது நாகமுத்து என்பவர் கூடாரத்தை தூக்கி வண்டிலில் மாட்டிவிட்டு, மாடுகளை வண்டிலில் பூட்டி ஆயத்தம் செய்வார். அமரர்களான முத்து குமாரசாமி, இரத்தினகாந்தி தம்பதியினர் வெள்ளிக்கிழமைகளில் பின்னேரப் பூசை பார்க்க நல்லூர் கந்தசாமி கோயிலுக்கு இரட்டை மாட்டு வண்டிலில் செல்வார்கள். அவர்கள்

கோயிலுக்கு செல்லும் போது அமரர்களான தையல்நாயகி, ஆனந்த குமாரசாமி ஆகிய இருவருடன் என்னையும் கூட்டிக்கொண்டு போவார்கள். நல்லூர் கந்தசாமி கோயில் திருவிழாக்களுக்குப் போகும் போது என்னையும் வரச்சொல்லி கூட்டிச் செல்வார்கள். கீரிமலை, தில்லை அம்பலப் பிள்ளையார் கோயில் ஆகிய இடங்களுக்கும் மாட்டு வண்டிலில் என்னையும் கூட்டி செல்வார்கள். ஒருமுறை அவர்கள் பெரிய வானை (Van) வாடகைக்கு அமர்த்தி, குடும்பத்தில் உள்ள அனைவரும் திருக்கேதீச்சரத்துக்குச் சென்றபோது எனது அம்மாவையும், என்னையும் அங்கு கூட்டிச் சென்றார்கள். எல்லோரும் பாலாவி ஆற்றில் நீராடி கோயில் தரிசனம் செய்த பின் கோயிலில் பெரிய பாத்திரங்களை எடுத்துச் சோறு, கறிகள் சமைத்து அங்கு வந்த பக்தர்களுக்கும் கொடுத்து நாங்களும் சாப்பிட்டு அடுத்த நாள் ஊர் வந்து சேர்ந்தோம்.

அவர்களின் குடும்பத்தினர் அனைவரும் எங்களுடைய குடும்பத்தினர் மீது மிகுந்த அன்பும், பாசமும் வைத்திருந்தார்கள். நாங்களும் அவ்வண்ணமே அன்பாகவும், பாசத்துடனும் நடந்து கொண்டோம். எனது சிறு பிராயத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலை யில் கல்வி கற்றுக் கொண்டிருந்தபோது, வெள்ளிக்கிழமைகளில் பாடசாலை விட்டதும், அமரர். தையல்நாயகி (அக்கா) என்னை தங்கள் வீட்டுக்கு வரும்படி கூட்டிச் செல்லுவார். அங்கு சுருட்டுத் தொழிலுக்கு வரும் தம்பி அப்பா என்பவரிடம் என்னை தங்கள் வீட்டுக்கு கூட்டிக்கொண்டு போன விடயத்தை எனது அம்மாவுக்கு சொல்லி விடும்படி அவரிடம் சொல்லி விடுவா. அங்கு சென்றால் ஞாயிறு பின்னேரம் தான் என்னை எங்கள் வீட்டுக்குப் போக விடுவார்கள். சில சமயம் எனக்கு வெள்ளிக்கிழமை பின்னேரம் பாடசாலை விட்டதும் எங்களுடைய வீட்டிற்கு ஓடி வர வேண்டும் போல தோன்றும். வீட்டுக்கு ஓடி விடுவேன் அடுத்த வெள்ளிக்கிழமை அமரர். தையல்நாயகி (அக்கா) எனது வகுப்பு மாணவிகளிடம் "இவள் பாடசாலை விட மணி அடித்ததும் வீட்டுக்கு ஓடி விடுவாள் போக விடாமல் பிடித்து வைத்திருங்கோ" என்று சொல்லிவிட்டு தனது வகுப்புக்கு போவார். அவர்களும் என்னை பிடித்து வைத்து அவரிடம் ஒப்படைப்பார்கள். இப்படியான பழைய நினைவு களை மீட்டிப் பார்க்கும்போது, அவர்களை நினைத்து மிகுந்த கவலையாக இருக்கின்றது.

அமரர்கள் முத்துக்குமாரசாமி, இரத்தினகாந்தி தம்பதியினர் சாந்தி, சாந்தன், ஜெயந்தன், வசந்தன், ஜெயந்தி, ரஜந்தன், சொரூபி என்ற ஏழு பிள்ளைகளைப் பெற்றெடுத்தார்கள். அவர்களுள் ஜெயந்தனும், ரஜந்தனும் காலமாகி விட்டார்கள். அவர்களின் மூத்த மகளான சாந்தியும், அவரது கணவர் பாலச்சந்திரனும் தங்களது ஏக புத்திரியான கீதா, கண்ணன் குடும்பத்தினருடன் பிரித்தானியாவில் வசிக்கின்றார்கள். சாந்தன் தனது குடும்பத்துடன் வினிபெக் கனடாவில் வசிக்கின்றார். ஏனையோர் தத்தமது குடும்பத்துடன் பிரித்தானியாவில் வசிக்கிறார்கள்.

அவர்களின் குடும்பத்தினர் அனைவரும் ஒருங்கிணைந்து "வெளிச்சம் அறக்கட்டளை" என்ற கணக்கில் வங்கியில் வைப்புச் செய்துள்ளார்கள். கிளிநொச்சியில் ஆதரவற்ற குடும்பம் ஒன்றுக்கு வெளிச்சம் அறக்கட்டளை மூலம் "வெளிச்சம் வீடு" என்ற பெயர் பொறித்த வீடு ஒன்றைக் கட்டி, இருப்பிட வசதி செய்து கொடுத்துள்ளார்கள். ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் பயனடையும் வண்ணம் கணணிகள் (Computers) வாங்கி அன்பளிப்பு செய்துள்ளார்கள். வீட்டிலிருந்து சுயதொழில் செய்து தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த விரும்பும் ஆதரவற்றோருக்கு தையல் இயந்திரங்களை வாங்கி அன்பளிப்பு செய்துள்ளார். பாடசாலை மாணவர்களின் கல்வி உயற்சிபெற, அவர்கள் கற்கும்

பாடசாலையில் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்பில் படிப்பதற்கு நிதி உதவிகள் செய்துள்ளார்கள். நலிவுற்ற குடும்பத்தினருக்கு கோழிப்பண்ணை அமைக்க வழிவகை செய்துள்ளார்கள். இப்படியாக “வெளிச்சம் அறக்கட்டளை” மூலம் பல நற்காரியங் களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இக்கைங்காரியங்களை ஊக்கத்துடன் முன்னின்று செய்வது கீதபாலினி, சுதர்சன் (கீதா,கண்ணன்) என்பது குறிப்பிடத்தக்கது. துவிச்சக்கர வண்டிகள், பாடசாலை உபகரணங்கள் யாவையும் மனமுவந்து கொடுத்து உதவியிருக்கிறார் கள். மேலே குறிப்பிட்டுள்ள விடயங்கள் பற்றி எனக்கு தெளிவாக தெரிந்தமையால் இங்கு எழுதியுள்ளேன். வேறு சிலரும் இப்படியான கைங்காரியங்களை செய்திருக்ககூடும், ஆனால் எனக்குத் தெளிவாகத் தெரியாத விடயங்களை புத்தகத்தில் குறிப்பிட இயலாது.

அடுத்ததாக அமரர். தையல்நாயகி, கனகஇரத்தினம் பற்றிய விவரங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். அமரர். தையல்நாயகி, கனக இரத்தினத்திற்கு ரூபி, ரூபன், சத்தி ஆகிய மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர் தனது முதுமைக் காலத்தில் தனது இளைய மகன் சத்தி குடும்பத்தினருடன் பிரித்தானியாவில் வசித்தார். அவர் என் மேல் சிறு பிராயத்திலிருந்து மிகுந்த அன்பு பாசத்துடன் பழகினார். அவரின் மகள் ரூபி தனது கணவன், மகள் ஆகியோருடன் பிரித் தானியாவில் வசிக்கிறார். மகன் ரூபனும் தனது மனைவி, பிள்ளைகளுடன் பிரித்தானியாவில் வசிக்கிறார். சக்தி தனது மனைவி மகனுடன் பிரித்தானியாவில் வசிக்கிறார்.

அடுத்ததாக அமரர். ஆனந்த குமாரசாமி அவர் எனக்கு இளையவர். அவரின் மனைவியின் பெயர் இராஜேஸ்வரி (கிளி). அவர்களுக்கு இரண்டு மகன்கள் பிரித்தானியாவில் வசிக்கிறார்கள். மூத்த மகனின் பெயர் அரவிந்தன். இரண்டாவது மகனின் பெயர் திலீபன். அவரின் மனைவி இராஜேஸ்வரி தனது மூத்த மகன் அரவிந்தன் குடும்பத்தினருடன் பிரித்தானியாவில் வசிக்கிறார். இரண்டாவது மகன் திலீபனும் தனது குடும்பத்தினருடன் வசிக்கிறார். அமரர். ஆனந்தகுமார சாமியும் பிரித்தானியாவில் தனது மனைவி, பிள்ளைகளு டன் வசித்துக் கொண்டிருந்த காலத்தில் நோய்வாய்ப்பட்டு இறைபதம் எய்தினார்.

எனது இரண்டாவது பெரிய தந்தையாரின் குடும்பத்தினர் அனைவரும் என்மேல் மிகுந்த அன்புடனும், பாசத்துடனும் நடந்து கொண்டார்கள். இன்றுவரை அவ்வண்ணமே நடந்து கொண்டிருக்கிறார்கள். வெவ்வேறு நாடுகளில் வசித்துக்கொண்டிருந்தாலும் தொலைத் தொடர்பு கருவிகள் ஊடாக ஒருவருக்கொருவர் தொடர்பு வைத்துள்ளோம். அவர்களுள் சிலர் அவ்வப்போது சுகம் விசாரித்து என்னுடன் உரையாடி கொள்வார்கள்.

இராசகுலசேகரவேலப்ப முதலியார் எனது கொப்பாட்டன் ஆவார். விஸ்வநாதர் எனது பாட்டனார் ஆவார். பொன்னம்பலம் எனது பேரனார் ஆவார். பொன்னம்பலம் அன்னப்பிள்ளை தம்பதியினரின் மூன்றாவது மகனாகிய வி. பொ. முத்துத்தம்பி என்பவர் எனது தந்தையார் ஆவார். எனது தந்தையார் வி. பொ. முத்துத்தம்பி கொக்குவில் கிழக்கு சைவ வேளாளர் மரபைச் சேர்ந்த செல்லப்பா திருப்பதிப்பிள்ளை தம்பதியினரின் மூத்த மகளான செல்லமுத்து என்பவரைத் திருமணம் செய்ததன் பயனாக இராசரெத்தினம், இரத்தினம்மா, மாணிக்கவாசகர், இராஜேஸ்வரி அம்மா ஆகிய நான்கு பிள்ளைகளைப் பெற்றெடுத்தார்கள். இவர்களின் கடைசிப் பிள்ளையாகிய எனது பெயர் தான் இராஜேஸ்வரி அம்மா எனது தந்தையார் வி பொ. முத்துத்தம்பி கொக்குவிலில் பிரபல புகையிலை வியாபாரி. இவர் பிரபல பணக்காரரும் ஆவார்.

எனது அக்கா இரத்தினம்மா எனக்கு பதினாறு வயது மூத்தவர். எனது அக்காவுக்கு கொக்குவில் மேற்கில் வாழ்ந்த சைவவேளாளர் மரபைச் சேர்ந்த Apothecary செல்லதுரை, விசாலாட்சி தம்பதியினரின் மகன் சிவபாதசுந்தரம் என்பவரை 1941ம் ஆண்டு எனது தந்தையார் திருமணம் செய்துவைத்தார். அக்காவுக்கு 1942.03.28ல் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. பேரப்பிள்ளை பிறந்த மகிழ்ச்சியில், எனது தந்தையார் சாத்திரியிடம் சென்று, குழந்தை பிறந்த நேரம், திகதி யாவும் கூறி குறிப்பு எழுதித் தரும் படி கொடுத்து விட்டு வீட்டுக்கு வந்தார். மூன்றாம் நாள் எனது தந்தையார் உடல்நலக் குறைவு காரணமாக தன்னை வைத்தியசாலைக்கு கூட்டிச் செல்லும் படி எனது பெரியண்ணை P.M இராசரத்தினத்திடம் கூறிய போது, அவர் மானிப்பாய் வைத்தியசாலைக்கு கூட்டிச் சென்றார். அங்கு சிகிச்சை பலனளிக்காததால் எனது தந்தையார் இறைவனடி சேர்ந்துவிட்டார். 1942. 03.30ல் பங்குனி உத்தரத்தன்று இறைவனடி சேர்ந்தார்.

எனது தந்தையார் மனிதாபிமானமுள்ள ஒரு மாமனிதன் வசதி குறைந்த எங்கள் உறவினர்கள், அயலவர்கள், ஊரார்கள் எவராக இருந்தாலும் தக்க சமயத்தில் அவர்களுக்கு முன்னின்று உதவிகள் செய்தார். எனக்கு ஐந்து வயதில் எனது தந்தையார் காலமானதால், மேற்கூறிய விடயங்கள் யாவும் எனது உடன் பிறந்தவர்கள் சொன்ன போது அறிந்து கொண்டேன். தந்தையார் காலமான பின் எனது தாயார் பெரியண்ணை இராசரத்தினத்துக்கு 1944ம் ஆண்டு தாவடி கொக்குவில் சைவ வேளாளர் மரபைச் சேர்ந்த திரு. திருமதி கந்தையா மங்கையர்க்கரசி தம்பதியினரின் புதல்வி மகேஸ்வரி என்பவரை திருமணம் செய்து வைத்தார். எனது சின்னணண்ணை மாணிக்கவாசகரிற்கு உரும்பிராய் சைவ வேளாளர் மரபைச் சேர்ந்த திரு. திருமதி. சின்னையா கனகமுத்து தம்பதியினரின் மகள் றோசம்மாவை திருமணம் செய்து வைத்தார்.

கடைசி மகளாக எனக்கு உடையார் ஒழுங்கை கொக்குவிலில் வாழ்ந்தவர்களான சைவ வேளாளர் மரபைச் சேர்ந்த திரு. திருமதி. செல்லையா தங்கம்மா தம்பதியினரின் கடைசி மகனான திருநாவுக்கரசு என்பவருக்கு திருமணம் செய்து வைத்தார். பெரியண்ணைக்கு பிள்ளைகள் நான்கு ஆண்களும், நான்கு பெண்களுமாக எட்டு பிள்ளைகள். அக்காவுக்கு நான்கு ஆண்களும், நான்கு பெண்களுமாக எட்டு பிள்ளைகள். சின்னணண்ணைக்கு நான்கு பெண்களும், இரண்டு ஆண்களுமாக ஆறு பிள்ளைகள். எங்களுக்கு ஒரு ஆணும், இரண்டு பெண்களுமாக மூன்று பிள்ளைகள். சேர்த்து வைத்த புண்ணியம் தான் சந்ததியைக் காத்து நிற்கும் என்ற பெரியோர்களின் வாக்கின் படி, எங்களுடைய தந்தையார் செய்த தர்ம காரியங்களின் பயனாக அவரது பேரப்பிள்ளைகள் பூட்டப் பிள்ளைகள் யாவரும் கல்வியில் மேம்பட்டு, நற்பிரசைகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

எனது தந்தையின் தம்பியின் பெயர் V.P அப்பையா அவரை வீட்டில் தர்மலிங்கம் என்று கூப்பிடுவார்கள். அவர் இளைஞனாக இருக்கும்போதே அவரது தந்தையார் அமரர். பொன்னம்பலம் அவரை சிங்கப்பூருக்கு அனுப்பியிருந்தார். அங்கு அவர் சென்று மேற்கொண்டு தனது கல்வியை தொடர்ந்து, பின் புகையிரத நிலைய அதிபராக (Station Master) பணிபுரிந்தார். சிறிது காலத்தின் பின் அவரது தந்தை அமரர். பொன்னம்பலம் அவரை ஊருக்கு வரும்படி அழைத்து உரும்பிராயைச் சேர்ந்த தங்கம்மா என்னும் பெண்ணை திருமணம் செய்து கொடுத்தார். திருமணத்தின் பின் தனது மனைவியையும் சிங்கப்பூருக்கு அழைத்து சென்றார். அங்கு அவர்கள் வாழ்ந்த காலத்தில் அவர்களுக்கு அன்னலக்சுமி (பெரிய அக்கா),

மகாலக்சுமி (பாப்பா அக்கா) செல்வ லக்சுமி (செல்வம்) ஆகிய மூன்று பெண் பிள்ளைகள் பிறந்தார்கள்.

ஆயிரத்து தொழாயிரத்து நாற்பத்திரண்டில் (1942) சிங்கப்பூரில் யுத்தம் நடைபெற்றது. எங்கள் நாட்டில் நடந்தது போல் இனப்பிரச்சனை காரணமாக குண்டுகள் போட்டு பெரும் கலவரம் ஏற்பட்டது. அந்நேரத்தில் எனது சிறிய தகப்பனார் தனது மனைவி பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு ஊருக்கு வந்துவிட்டார். அங்கு வந்து ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியா சாலை க்குப் பின்பக்கம் இருந்த தனது தகப்பன் அமரர். பொன்னம்பலத்தின் சிறிய மண் வீட்டில் தங்கி இருந்து, முன் பகுதியில் கல் வீடு கட்டினார். 1945இல் அவரது மகன் தெய்வேந்திர ராசா (காந்தி) பிறந்தார். தனது மூத்த மகள் அன்னலக்சுமியை கொக்குவிலை சேர்ந்த செல்லப்பா ஆறுமுகம் என்னும் சட்டத்தரணிக்கு (Lawyer) திருமணம் செய்து கொடுத்தார். மனைவியை யும் பிள்ளைகளையும் கொக்குவில் வீட்டில் தங்க வைத்த பின் மீண்டும் சிங்கப்பூருக்கு சென்று தன் பணியை தொடர்ந்தார். குடும்பத்தினருக்கு சிங்கப்பூரில் இருந்து பணம் அனுப்பினார். சிறிது காலத்தின் பின் பணியிலிருந்து ஓய்வு பெற்று ஊருக்கு திரும்பி வந்தார்.

அவரது மூத்த மகள் அன்னலக்சுமிக்கு சறோஜினி தேவி, ரூபரஞ்சினி என்ற இரு பெண் குழந்தைகள் பிறந்தார்கள். எல்லோரும் ஒரே வீட்டில் ஒன்றாக வாழ்ந்தார்கள். காலப்போக்கில் எனது சிறிய தந்தையின் மனைவி நோய்வாய்ப்பட்டு காலமாகிவிட்டார். அதன்பின் இரண்டாவது மகள் மகாலக்சுமிக்கும் திருமணம் நடைபெற்றது. அவரின் திருமண வாழ்க்கை நிலைக்க வில்லை. சிறிது காலத்தின் பின்னர் எனது சிறிய தகப்பனாரும் இறைபதம் எய்திவிட்டார். உறவினர்களின் முயற்சியால் செல்வலக்சுமிக்கும் திருமணம் நடைபெற்றது. அவருக்கும் வாழ்க்கை நிலைக்கவில்லை. இவை யாவும் கவலைக்குரிய விடயங்கள். தெய்வேந்திர ராசா (காந்தி) உறவினர் ஒருவரின் உதவி மூலம் மட்டக்களப்புக்குச் சென்று அங்கு கணக்காளராகப் பணிபுரிந்தார். அவர் நல்ல பிரயாசி. அவருக்கு எனது பெரிய அண்ணையும், எனது அக்காவும் எங்கள் பக்கத்து வீட்டில் வாழ்ந்தவர்களான அமரர்கள் வல்லிபுரம் நாகம்மா தம்பதியினரின் மகள் ஜெகதாம்பிகையை திருமணம் செய்து வைத்தார்கள். அவர்களின் திருமணம் 15.03.1978 நடைபெற்றது. அவர்கள் திருமணத்தின் பின் மட்டக்களப்புக்குச் சென்று அங்கு வாழ்ந்தார்கள். அவர்களுக்கு ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தொன்று (1981) செப்டம்பர் மாதம் ஒரு மகன் பிறந்தார். அவருக்கு செந்தூரன் என்று பெயர் வைத்தார்கள். அதன்பின் ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தி மூன்றில் மகள் பிறந்தார். அவளுக்கு ஹரி சாந்தி என்று பெயர் வைத்தார்கள். இவரின் திருமணத்தின் பின் இவரது மூத்த சகோதரி அன்னலக்சுமி. ஆறுமுகம் நோய் வாய்ப்பட்டு காலமாகிவிட்டார். 1983ல் ஆறுமுகம் அன்னலட்சுமி தம்பதியினரின் மூத்த மகள் சறோசினிக்கும், பிரம்படி ஒழுங்கை கொக்குவிலைச் சேர்ந்த ஆறுமுகதாஸ் என்பவருக்கும் நந்தாவின் கற்புலத்து மனோன்மணி அம்மன் கோயிலில் திருமணம் நடைபெற்றது. இவர்களின் திருமணத்தின் போது எங்களுடைய மகன் (ஈசன்) மாப்பிள்ளை தோழனாகச் சென்றார்.

சறோசினியின் கணவர் ஆறுமுகதாஸ் வீட்டுக் காணிக்குள் ஒரு சிறிய வைரவர் கோயில் அமைத்திருந்தார்கள். அந்த வைரவருக்கு மாலைகள் கட்டிப்போட்டு சாத்துப்படி சாத்தி அலங்கரித்து தினமும் காலை, மாலை ஆறுமுகதாஸ் பூசை செய்தார். அயலிலுள்ளவர்கள் பூசை நேரம் சென்று வைரவரை வணங்குவார்கள். எண்ணெய், கற்பூரம், ஊதுபத்தி போன்ற பூசைப்

பொருட்களையும் கொண்டு சென்று கொடுப்பார்கள். சிலர் நேர்த்திக்கடன் வைத்து பொங்கல் செய்து வைரவருக்கு படைத்து தமது நேத்திக்கடனை நிறைவு செய்வார்கள். சறோஜினியின் திருமணத்தின் பின் அவரது தங்கை ரூபரஞ்சனி (ரூபா)க்கு பிரித்தானியா செல்வதற்கு எங்கள் உறவினர் ஒருவர் பொறுப்பேற்பு (Sponser) செய்ததனால் அவர் பிரித்தானியா சென்றார். அங்கு சென்று தொழில் வாய்ப்பையும் பெற்றுக் கொண்டார். அங்கு பணிபுரிந்து நல்ல வருமானத்தைப் பெற்று மகிழ்ச்சியாக வாழ்ந்தார்.

சிறிது காலத்தின் பின் விடுமுறையில் ஊருக்கு வந்தபோது எங்கள் வீட்டுக்கு வந்து எங்களையும் சந்தித்து சென்றார். அதன் பின் இவரது தந்தையார் நோய் காரணமாகக் காலமாகி விட்டார். சிறிது காலத்தின் பின் இவரது சின்னம்மா மகாலக்சுமியும் (பாப்பாக்கா) காலமாகி விட்டார். ஒருநாள் ரூபரஞ்சனி பணியில் இருந்த போது நெஞ்சுநோ ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மாரடைப்பால் காலமாகிவிட்டார். இந்தச் சம்பவம் 1992இல் சம்பவித்தது. இவரின் பிரிவுத்துயர் எங்களுக்கும், மற்றைய உறவினர்களுக்கும் மிகுந்த கவலையாகி விட்டது. தங்கை ரூபரஞ்சினியின் பிரிவால் மனம் உடைந்திருந்த சறோஜினிக்கு அவரது கணவர் ஆறுமுகதாஸ் வைரவருக்கு பூசைக்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்து கொண்டி ருந்தபோது திடீர் மாரடைப்பால் இறைபதம் எய்தியது பேரிடியாகிவிட்டது. அதன்பின் இவரது சின்னச்சின்னம்மா செல்வலக்சுமி (செல்வம்) நோய் காரணமாக காலமானார். அடுத்தடுத்து துயரச் சம்பவங்கள் ஏற்பட்டதால் சறோஜினியின் உடல் நலமும் பாதிக்கப்பட்டுவிட்டது.

சறோஜினி அடிக்கடி வைத்தியசாலையும் வீடுமாக அலைந்து திரிந்தார். எனது சிறிய தகப்பனாரின் மகன் தெய்வேந்திரராசா (காந்தி) மட்டக்களப்பிலேயே தொடர்ச்சியாகப் பணி புரிந்ததனால் அங்கு தமக்கு சொந்தமாக ஒரு காணியை வாங்கி அதில் வீடு ஒன்றைக் கட்டி தனது மனைவி பிள்ளைகளுடன் வாழ்ந்தார். அவரது மகன் செந்தூரன் BSC பட்டப்படிப்பை நிறைவு செய்தபின் அவரது பெற்றோர் அவருக்கு சேணுகா (Shenuka) என்ற நற்குணவதியைத் திருமணம் செய்து வைத்தார்கள். 2008இல் திருமணத்தின் பின் செந்தூரன் பிரித்தானியா சென்று அங்கு தொழில் வாய்ப்பை பெற்றுக் கொண்டார். அதன்பின் 2009இல் அவரது மனைவி சேணுகாவும் பிரித்தானியாவுக்குச் சென்றார். அவர்களுக்கு மூன்று பெண் குழந்தைகள் இருக்கிறார்கள். செந்தூரன் பிரித்தானியா சென்ற பின் தனது கல்வியைத் தொடர்ந்து அங்கு MSC பட்டமும் பெற்றார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவரது தங்கை ஹரிசாந்தி மட்டுநகரில் Hatton national Bank இல் பணிபுரிந்து கொண்டிருக்கின்றார். இவரது பெற்றோர் இவருக்கு மட்டுநகர் Hatton national Bank இல் Manager ஆகப் பணிபுரிந்து கொண்டிருக்கும் Anjelo Arasaratnam என்பவரை 2009 இல் திருமணம் செய்து கொடுத்தார்கள். Anjelo என்பவரும் ஒரு பட்டதாரி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவர்களின் திருமணம் நடைபெற்று ஆறுமாத காலத்தில் தெய்வேந்திரராசா (காந்தி) மாரடைப்பு காரணமாக இறைப்பதம் எய்திவிட்டார். அதன் பின் 2010 மே மாதம் ஹரிசாந்திக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தார். அதன் பின் இவர்களுக்கு ஒரு மகனும் இருக்கிறார். தெய்வேந்திர ராசாவின் மனைவி ஜெகதாம்பிகை தனது மகள் ஹரிசாந்தி குடும்பத்தினருடன் மட்டக்களப்பில் தமது இல்லத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். எனது சிறிய தகப்பனாரும் அவரது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அனைவரும் எங்கள் மேல் மிகுந்த அன்புடனும், பாசத்துடனும் பழகிக் கொண்டார்கள் நாங்களும் அவர்களுடன் அன்பாகவும்

பாசத்துடனும் பழகிக் கொண்டோம். மாமன் தெய்வேந்திரராசாவின் (காந்தி) பிரிவுச்செய்தி கேள்விப்பட்டவுடன் சறோஜினி கொக்குவிலில் இருக்கும் உறவினர்கள், அயலவர்களையும் அழைத்துக் கொண்டு மட்டக்களப்புக்குச் சென்று தனது மாமனின் இறுதிக்கிரியை நிகழ்வுகளில் கலந்து கொண்டார். சிறிது காலத்தின் பின் அவரும் இறைவனடி சேர்ந்து விட்டார். இவர்கள் எல்லோரின் பிரிவுத்துயர் அறிந்து நாங்களும் மிகுந்த மன வேதனை அடைந்தோம்.

2018ல் நாங்கள் எல்லோரும் இலங்கைக்குச் சென்ற போது மட்டக்களப்புக்குச் சென்று அமரர். தெய்வேந்திரராசா(காந்தி)வின் மனைவி ஜெகதாம்பிகை, அவர்களது மகள் ஹரிசாந்தி, கணவர், பிள்ளைகள் அனைவரையும் சந்தித்து வந்தோம். அவர்கள் அவ்வப்போது எங்களுடன் தொடர்பு கொண்டு சுகம் விசாரித்து கதைப்பார்கள். அவர்களது மகன் செந்தூரன் குடும்பத்தினரும் அடிக்கடி சுகம் விசாரித்து கதைப்பார்கள். அமரர். தெய்வேந்திரராசா எவ்வாறு எங்களுடன் அன்பு, பாசத்துடன் நடந்து கொண்டாரோ அவ்வாறு அவர்கள் எல்லோரும் எங்களுடன் அன்பு, பாசத்துடன் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்து கொண்டு இருக்கிறேன்.



அமரர்
திருமதி. செல்லமுத்து முத்துத்தம்பி
[1895-1967]

# எனது தாயார் திருமதி. மு. செல்லமுத்து

எனது தாயார் அமரர். செல்லமுத்து, அமரர்களான செல்லப்பா திருப்பதி பிள்ளை தம்பதியினரின் மூத்த மகளாவார். அவர் ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலை க்குச் செல்லும் வீதியின் இடது பக்க முகப்பில் இருக்கும் காணிக்குள் அமைந்திருந்த பழமையான கல்வீட்டில் பிறந்தார். எனது தாயாருக்கு அமரர்களான பொன்னம்மா இராசலிங்கம், நாகம்மா கணபதிப்பிள்ளை (இராமசாமி) ஆகிய இரண்டு தங்கைகளும் அமரர்களான வேலாயுத பிள்ளை, சோமசுந்தரம் ஆகிய இரண்டு தம்பிகளும் இருந்தார்கள். அமரர். பொன்னம்மாவுக்கு கனகம்மா, கனக சௌந்தரி, கனகசபாபதி ஆகிய மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். அமரர் சின்னத்துரை (ஆசிரியர்) அமரர். கனகம்மாவை கரம் பிடித்ததன் பயனாக யோகசௌந்தரி, அமரர்களான தங்கராசா, கனக சௌந்தரி மற்றும் தவராசா ஆகியோர் பிள்ளைகளாகப் பிறந்தார்கள். யோகசௌந்தரி அவுஸ்திரேலியாவில் (Australia) இருக்கிறார். தவராசா இலங்கையில் இருக்கிறார்.

இரண்டாவது மகள் அமரர். கனக சௌந்தரி (ஆசிரியை), அமரர். பண்டிதர் நடராசா (ஆசிரியர்) என்பவரைத் திருமணம் செய்தார். அவர்களுக்கு ஒரு மகளும், மூன்று மகன்களும் இருக்கிறார்கள். அமர்களான கனகசபாபதி, யோகராணி தம்பதியினருக்கு பாலினி, சுரேக்ஷ் என்ற இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். பாலினி தனது கணவர் பிள்ளைகளுடன் கொழும்பில் தனது வீட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். நாங்கள் எல்லோரும் இலங்கைக்கு சென்ற போது அவர்கள் வீட்டுக்கும் சென்று அவர்களை சந்தித்தோம். சுரேஷ் தனது மனைவி மகளுடன் டொரண்டோ கனடாவில் இருக்கிறார். அமரர்களான கணபதிப்பிள்ளை நாகம்மா தம்பதியினருக்கு அமரர் பரராச சிங்கம் (மிருக வைத்தியர்) மற்றும் Dr. செகராச சிங்கம் ஆகிய இரு பிள்ளைகள் இருக்கிறார்கள்.

அமரர். பரராச சிங்கம் மற்றும் பரமேஸ்வரி (ஆசிரியை) தம்பதியினருக்கு ரஜனி, ரமணி ஆகிய இரண்டு பெண் பிள்ளைகளும், விக்னேஸ்வரன், பாலகுமார் ஆகிய இரண்டு மகன்களும் பிறந்தார்கள். அவர்களும் விக்னேஸ்வரன் இளைஞனாக இருக்கும் போதே காலமாகிவிட்டார். மூத்த மகள் ரஜினி தனது குடும்பத்துடன் கனடாவில் இருக்கிறார். அவர்களுடன் தாயார் பரமேஸ்வரியும் இருக்கிறார். இரண்டாவது மகள் ரமணியின் கணவர் காலமாகிவிட்டார். ரமணி தனது இரண்டு மகள்களுடன் பிரித்தானியாவில் இருக்கிறார். பாலகுமாரும் தனது குடும்பத்தினருடன் பிரித்தானியாவில் இருக்கிறார். Dr. செகராச சிங்கமும் பிரித்தானியாவில் இருக்கிறார்.

எனது அம்மாவின் தம்பி வேலாயுத பிள்ளை என்பவர் திருமணமாகி இளம் வய திலேயே நோய் வாய்பட்டு காலமாகிவிட்டதாக அறிந்தேன். இரண்டாவது தம்பி அமரர். சோமசுந்தரம் அமரர் பவளம்மா (வெள்ளை மாமி) என்பவரைத் திருமணம் செய்தார். அவர்களுக்கு சறோஜினி, சாரதா தேவி ஆகிய இரு பெண் பிள்ளைகளும் பாலச்சந்திரன்

பாலகிருக்ஷ்ணன் ஆகிய இரண்டு ஆண் பிள்ளைகளும் இருக்கிறார்கள். பாலசிங்கம் (A.G.A) என்பவர் சறோஜினியைத் திருமணம் செய்தார். அவர்கள் தற்போது ரொறண்ரோ கனடாவில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வாசுகி, ஜானகி, தேவகி சித்திரா என்ற பெண் பிள்ளைகளும் ரவி என்ற மகனும் இருக்கிறார்கள். மேற்கூறிய ஐந்து பிள்ளைகளும் அமெரிக்காவில் இருக்கிறார்கள். பாலச்சந்திரன் தனது குடும்பத்தினருடன் பிரித்தானியாவில் இருக்கிறார். பாலகிருஷ்ணனும் பிரித்தானியாவில் இருக்கிறார். சாரதாவும் அவரது கணவர் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அனைவரும் அமெரிக்காவில் இருக்கிறார்கள் எல்லோரும் சுகம் விசாரித்து அவ்வப்போது என்னுடன் தொடர்பு கொள்வார்கள்.

நல்லூர்த் தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் (M.P) அமரர். அருளம்பலம், எனது அம்மாவின் மாமன் மகன் (மச்சான்). அமரர். அருளம்பலத்தின் தகப்பனார் எனது அம்மாவின் தாய் அமரர். திருப்பதிப்பிள்ளையின் உடன் பிறந்த சகோதரன். எனது கணவரின் தாய் அமரர். தங்கம்மா எனது தாயாரின் மாமியின் மகள் (மச்சாள்). அமரர். தங்கம்மாவின் தாய் அமரர். காமாச்சி எனது அம்மாவின் தகப்பன் அமரர். செல்லப்பாவின் உடன் பிறந்த சகோதரி. அமரர். சின்னத்துரை வாத்தியாரின் தாய் செல்லாச்சி எனது கணவரின் தாயின் மூத்த சகோதரி. அமரர். செல்லாச்சி என்பவரும் எனது அம்மாவின் மச்சாள். எங்களுடைய வருங்கால சந்ததியினர் இவற்றை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக தெளிவான விளக்கத்துடன் இங்கு குறிப்பிட்டுள்ளேன்.

எனது அம்மா மிகவும் சத்தான உணவுகளை எங்களெல்லோருக்கும் சமைத்து தந்தார். அம்மாவின் கைப்பக்குவத்தில் சமைத்து தந்த உணவுகளை, அம்மாவின் பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள் அனைவரும் இரசித்து சுவைத்து உண்டு மகிழ்ந்தோம். எங்களுக்கு உடல் நலக் குறைவு ஏற்படும் நேரங்களில், அதற்கு தகுந்தாற்போல் உணவு வகைகளைச் செய்து தந்து குணப்படுத்தி விடுவார். எனது அம்மா தந்த சாப்பாடுகளின் தைரியம் காரணமாகத் தான் Montreal, Canada வில் கடும் குளிரையும் தாக்குப் பிடித்துக் கொண்டு காலத்தை நகர்த்திச் செல்லக் கூடியதாக இருக்கிறது. எனது ஒன்றுவிட்ட சகோதரி செல்வம் எங்கள் வீட்டுக்கு வரும்போதெல்லாம் “சொந்தம் எப்போதும் தொடர்கதை தான்” என்று பாடுவார். அவரின் வாய்மொழிபோல சொந்தங்கள் தொடர வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

எனது பெற்றார் ஆரம்பத்தில் நந்தாவில் கற்புலத்து மனோன்மனி அம்மன் ஆலயத்திற்கு அண்மையிலுள்ள தென்னை மரங்கள் நிறைந்த அம்மாவின் சீதனக் காணிக்குள் அமைந்திருந்த கிடுகினால் வேயப்பட்ட வீட்டில் வாழ்ந்தார்கள். அந்த வீட்டுடன் சேர்ந்து ஒரு பத்தியும் அமைத்திருந்தார்கள். அந்த பத்திக்குள் பாவித்த சேலைகள், உடுப்புகள், முதலியவற்றை தோய்த்து காய்ந்த பின் கயிற்றினால் கொடி கட்டி போட்டு வைப்பார்களாம். எனது சின்னண்ணை சிறுவயதில் ஒரு நாள் மாலை பொழுதில் விளையாடுவதற்கு பந்தை தேடி எடுப்பதற்கு கைவிளக்கை எடுத்துக்கொண்டு அந்த பத்திக்குள் சென்ற போது கொடியில் இருந்த சேலையில் தீப்பிடித்து பத்தியின் கூரை எரிய தொடங்கிவிட்டதாம்.

அந்தநேரம் எனது தந்தையாரும், பெரியண்ணையும் வெளியில் சென்றிருந்தார்களாம். வீடு எரிவதைக் கவனித்த எனது தாயார் வீட்டுக்குள் இருந்த பெட்டகத்தை இழுத்துக் கொண்டு

வந்து முற்றத்தில் வைத்துவிட்டாராம். அந்த பெட்டகத்தை நான்கு பேர் நான்கு பக்கத்திலும் பிடித்துத்தான் தூக்கி வெளியில் கொண்டுவர முடியும் எனது தாயார் தனது மன வலிமையினால் பெட்டகத்தை வெளியில் இழுத்து வந்தது பெரிய சாதனை. அந்தப் பெட்டகத்திற்குள் "தனலட்சுமிவாசா" அமைந்துள்ள பதினான்கு பரப்பு (14 பரப்பு) காணியின் உறுதி மற்றும் எனது பெற்றாரின் மற்றைய காணிகளின் உறுதிகள், நகைகள் பணம், அடைவு பிடித்த நகைகள், கணக்குகள் பதிந்து வைத்த கொப்பிகள், விலை உயர்ந்த பட்டுச் சேலைகள், வேட்டிகள் உடுப்புகள் யாவும் பாதுகாப்பாக வைத்திருந்தார்களாம். பெட்டகத்தில் தீப்பிடித்திருந்ததால் எனது பெற்றாரின் வாழ்க்கையே இருள் சூழ்ந்ததாயிருந்திருக்கும். நந்தாவின் கற்புலத்து மனோன்மணி அம்மன் எனது தாயாருக்கு மனோபலத்தை கொடுத்தருளியதனால் பொருட்கள் யாவும் காப்பாற்றப் பட்டன. எரிந்த கூரையை பின் கிடுகை வாங்கி வேய்ந்தார்களாம். இந்த சம்பவத்தின் பின்னர் தான் குளக்கரை ஒழுங்கையில் இருந்த காணிக்குள் "தனலட்சுமி வாசா" என்ற வீட்டைக்கட்டு வித்து அங்கு வந்து வாழ்ந்தார்களாம்.

எனது சகோதரர்களான அமரர்கள் P.M. இராசரத்தினம், இரத்தினம்மா, சிவபாதசுந்தரம், மாணிக்கவாசகர் ஆகிய மூவரும் என்மேல் அன்புடனும், பாசத்துடனும் நடந்து கொண்டார்கள். எனது தந்தை அமரர். முத்துத்தம்பி எனது தாயார் செல்லமுத்துவின் பெயருக்கு மரணசாசனம் (Will) எழுதிவைத்திருந்தபோதும், அம்மா அவற்றை எல்லாம் எனது பெரியண்ணை P.M. இராசரத்தினத்திடம் ஒப்படைத்ததாகக் கூறினார். சின்னண்ணைக்கும் எனக்கும், பெரியண்ணை தந்தை ஸ்தானத்தில் இருந்து எங்களை நல்வழிப்படுத்தி வைத்தார். அம்மாவுக்கும், சின்னண்ணைக்கும், எனக்கும் பெரியண்ணை தான் பாதுகாவலராகவும், செயற்பட்டார்.

1944ல் பெரியண்ணைக்கும் மச்சாள் மகேஸ்வரிக்கும் திருமணம் நடைபெற்றது. அதன்பின் பெரியண்ணையும், எனது அக்காவின் கணவர் சிவபாதசுந்தமும் (மச்சான்) சேர்ந்து தமது சொந்த பாவிப்புக்காக ஒரு குதிரையுடன் கூடிய வண்டியை விலைக்கு வாங்கினார்கள். குதிரை வண்டி ஓட்டுனராக தங்கராசா என்பவருக்கு மூன்று வேளை சாப்பாடும், மாதம் ஒரு குறிப்பிட்ட தொகைப் பணமும் கொடுத்து வேலைக்கு அமர்த்தினார்கள். தங்கராசா தினமும் காலை ஏழு மணிக்கு வந்து தனது வேலை முடிந்த பின் தனது வீட்டுக்குச் செல்லுவார். வீட்டுக்கு செல்வதற்கு முன் குதிரை உண்பதற்கு தேவையான அளவு கொள்ளுத் தானியத்தை, கொள்ளுச்சாக்கிலிருந்து எடுத்து தண்ணி விட்டுக் கழுவியபின் அதனை வாளி ஒன்றில் போட்டு தண்ணீர் விட்டு ஊறவைத்து விட்டு செல்வார். அடுத்தநாள் காலையில் வந்து, ஊறவைத்த கொள்ளை தண்ணீரை வடித்த பின், இரண்டு பக்கங்களும் நாடா (Tape) கோர்க்கப்பட்ட துணிப்பையில் போட்டு குதிரையின் வாய்ப் பகுதி முழுவதையும் அந்த பைக்குள் விட்டு இரண்டு பக்க நாடாவையும் குதிரையின் கழுத்தின் பின்பக்கம் கட்டி விடுவார். குதிரை கொள்ளும் முழுவதையும் உண்ணும். குதிரை கொள்ளை உண்ணும் நேரத்தில் தங்கராசா குதிரை நிற்கும் கொட்டிலுள்ள லொத்திகளை (சாணம்) மண்வெட்டியால் அள்ளி ஒரு இடமாக போட்ட பின் கொட்டிலை சுத்தம் செய்வார். அதன் பின் குதிரைக்கு கடிவாளத்தை மாட்டி, ஆரிய குளத்துக்கு குளிக்க வார்க்க கொண்டு போவார். திரும்பி வரும்போது குளத்தில் பிடுங்கிய அல்லி பூக்கள் சிலவற்றை எனது சின்னண்ணைக்கு (மாணிக்கவாசகர்) கொடுப்பார்.

அநேகமாக வெள்ளிக்கிழமை பின்னேரங்களில் நல்லூர் கந்த சுவாமி கோயிலுக்கு பெரியண்ணையும், மச்சாளும், அக்காவும், மச்சானும் செல்வார்கள். திருவிழா காலங்களில்

தேர்த்திருவிழாவுக்கும் மற்றும் இரவு திருவிழாவுக்கும் குதிரை வண்டியில் செல்வார்கள். புதிய சினிமா படங்கள் வரும் நாட்களில் சனிக்கிழமை பார்க்கச் செல்வார்கள். சில நேரம் சனிக் கிழமைகளில் கீரிமலைக்குச் செல்வார்கள் அவர்கள் எங்கு குதிரைவண்டியில் செல்லும்போதும் என்னையும் சின்னண்ணையையும் தங்களுடன் கூட்டிச் செல்வார்கள். எனக்கு ஏழு வயதில் “ஹரிதாஸ் சிவகவி”, “ஞானசௌந்தரி” ஆகிய சினிமா படங்களை பார்த்த ஞாபகம் இருக்கிறது. ஹரிதாஸ் படத்தில் M.K தியாகராஜ பகவதர் பாடிய கீழ்காணும் பாடல் “அன்னையும் தந்தையும் தானே- பாரில் அண்ட சராசரம் கண்கண்ட தெய்வம்” என்ற பாடல் இன்றும் நினைவில் இருக் கிறது. ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தேழாம் (1947) ஆண்டு பெரியண்ணை யாழ்ப்பாணத் திலிருந்து, வவுனியாவுக்கு வேலை மாற்றலாகி (Transfer) செல்ல வேண்டியதாகிவிட்டது. அதனால் குதிரை வண்டியை விற்க வேண்டியதாகிவிட்டது. 1947ல் சின்னண்ணை (அமரர். மாணிக்கவாசகர்) வவுனியா கச்சேரியில் வேலை கிடைத்த தனால் அவரும் வவுனியாவுக்கு சென்றார். எனது பாடசாலை விடுமுறைக்கு சின்னண்ணை வவுனியாவிலிருந்து வந்து என்னையும் அம்மாவையும் அங்கு கூட்டி சென்றார். பின்னர் பாடசாலை தொடங்குவதற்கு சில தினங்களுக்கு முன் எங்களை கொக்குவிலுக்கு கூட்டிக் கொண்டுவந்து விட்டார்.

1950ல் பெரியண்ணை புத்தளம் காணிப்பதிவு காரியாலயத்திற்கு வேலைமாற்றம் (Transfer) காரணமாகச் சென்றார். அவரைத் தொடர்ந்து சின்னண்ணையும் புத்தளம் கச்சேரிக்கு, மாற்றம் (Transfer) பெற்றுச் சென்றார். 1950ல் சின்னண்ணை புத்தளத்திலிருந்து கொக்குவிலுக்கு வந்து என்னையும் அம்மாவையும் கதிர்காமத்திற்கு கூட்டிச்சென்றார். அப்போது எனது அக்கா அமரர். இரத்தினம்மா தனது மூத்த மகன் மகேஸ்வரனையும் (சந்திரன்) எங்களுடன் கதிர்காமம் செல்வதற்கு அனுப்பி வைத்தார். அந்தக் காலத்தில் கதிர்காமம் செல்வதென்றால் புகைவண்டியில் கொழும்புக்குச் சென்று, பின் அங்கிருந்து புகைவண்டியில் மாத்தறைக்குச் சென்று, மாத்தறையிலிருந்து பேரூந்தில் (Bus) “திசை மாறா” என்ற இடத்திற்கு சென்று, அங்கிருந்து இரட்டை மாடுகள் பூட்டிய வண்டியில் கதிர்காமத்தைச் சென்றடைய வேண்டியதாகிவிட்டது. வண்டி ஓட்டுநர் அனைவரும் சிங்களம் பேசும் மக்கள் எனது சின்னண்ணைக்கு “சிங்கள மொழி” பேசத் தெரிந்ததால் நாங்கள் சிங்கள மொழி பற்றி கவலைப்படவில்லை. கொக்குவிலில் இருந்து மாலை ஆறு மணிக்கு புறப்பட்டு, மறுநாள் இரவு தான் கதிர்காமம் சென்றடைந்தோம். மறுநாள் அதிகாலையில் காட்டுப்பாதை (ஒற்றையடிப் பாதை) ஊடாக தமிழ் மக்கள் சிலருடன் சேர்ந்து செல்லக் கதிர்காமத்திற்குச் சென்றோம்.

செல்லக் கதிர்காமத்திலுள்ள புனித நீரூற்றில் எல்லோரும் நீராடிய பின், பொங்கல் செய்வதற்கு தேவையான பொருட்களை (பானை, அகப்பை திருகணி, அரிசி, பருப்பு, சக்கரை, ஆகியன) வாங்கி, அம்மா பொங்கல் செய்து, அதனை சுவாமிக்குப் படைத்தார். பின் அங்குள்ள பக்தர்களுக்கு உண்ணக் கொடுத்து, நாமும் உண்டோம். மாலை நேரமானதும், அதே ஒற்றை அடிப் பாதை ஊடாக கதிர்காமத்திற்குத் திரும்பிச் சென்றோம். அடுத்தநாள் அதிகாலையில் காலைக் கடன்களை முடித்த பின் மாணிக்க கங்கைக்குச் சென்று நீராடினோம். அதன் பின் என்னையும், மகேஸ்வரனையும் கொக்குவிலைச் சேர்ந்த வீரலட்சுமி ஆச்சியின் பிள்ளை களுடன் மடத்தில் தங்கவைத்து, மடத்திலுள்ள முதலாளியிடம் சொல்லிவிட்டு அம்மாவும், சின்னணண்ணையும் வீரலட்சுமி ஆச்சியும் மலைக்குச் சென்று திரும்பி வந்தார்கள். அன்று இரவுப் பூசை ஆரம்பித்த போது, கோயில் யானைக்கு மேலாடைகள் போட்டு வாசலில் கொண்டு வந்து நிறுத்தினார்கள். பூசகர் ஆதிமூலத்திலுள்ள மந்திரப் பெட்டியை எடுத்துக்கொண்டு வந்தவுடன்

யானை மண்டியிட்டு (முன்னங்கால்களை மடித்து) நின்றது. மந்திரப் பெட்டியை யானையின் முதுகில் வைத்துக் கொண்டு கோயிலை வலம் வந்தபின் மந்திரப் பெட்டியை இறக்குவதற்கு, யானை மீண்டும் மண்டியிட்டு கொண்டு நின்றது. இந்தக் காட்சிகளைப் பார்த்து சிறுவர்களாகிய நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தோம்.

அடுத்தநாள் சின்னண்ணை எங்களை கதிர்காமத்திலிருந்து அனுராதபுரத்திற்கு கூட்டிச் சென்றார். அங்கு கணபதிப்பிள்ளை (Post Master) என்ற எங்கள் உறவினர் வீட்டில் தங்கினோம். அவர்கள் எங்களை அன்புடன் வரவேற்று, உணவு தந்து உபசரித்தார்கள். சின்னண்ணை எங்களை அனுராதாபுரத்தில் ஆயிரங்கால் மண்டபம் மற்றும் சில புராதன இடங்களுக்கு கூட்டிச் சென்றார். அடுத்த நாள் பெரியண்ணை, மச்சாள், பிள்ளைகள் அனைவரையும் பார்ப்பதற்குப் பேரூந்தில் (Bus) புத்தளத்துச் சென்றோம். புத்தளத்தில் இரண்டு நாட்கள் தங்கி நின்றோம். மச்சாள் எங்களுக்கு காலை உணவாக அப்பம் தந்தார். மகேஸ்வரன் (சந்திரன்) கள்ளுவிட்ட அப்பம் எனக்கு வேண்டாம் என்று சொல்லி சாப்பிடுவதற்கு மறுத்து விட்டார். இங்கே ஏது கள்ளு இந்த அப்பம் கள்ளுவிடாமல் சுட்டது என்று பெரியண்ணை சொல்லிப் பார்த்தார். இருந்த போதும் மகேஸ்வரன் சாப்பிடுவதற்கு மறுத்துவிட்டார். அதன் பின் மச்சாள் மகேஸ்வரனுக்கு புட்டு அவித்து சாப்பிட கொடுத்தார். சிறுபிராயத்திலிருந்தே உயிர் கொலை செய்யக்கூடாது மாமிச உணவுகளை சாப்பிடக்கூடாது என்று சொல்லி மகேஸ்வரன் வாழ்ந்த காலம் வரை சைவ உணவுகளையே சாப்பிட்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

புத்தளத்திலிருந்து சின்னண்ணை எங்களை மீண்டும் பேரூந்தில் (Bus) அனுராத புரத்திற்கு கூட்டி சென்றார். பின் அனுராதபுரத்திலிருந்து புகைவண்டி மூலம் கொக்குவிலுக்கு வந்து சேர்ந்தோம். 1951இல் எனது சித்திரை மாத பாடசாலை விடுமுறையின் போதும் புத்தளத் திற்கு சென்றுவர சந்தப்பம் கிடைத்தது. 1952 இல் பெரியண்ணையின் மகள் மாலினி பிறந்தவுடன் சின்னண்ணை புத்தளத்தில் இருந்து வந்து என்னையும் அம்மாவையும் அங்கு கூட்டிச் சென்றார். மாலினி பிறந்து கைக்குழந்தையாக இருந்த போது பெரியண்ணைக்கு திருகோணமலைக்கு வேலை மாற்றம் (Transfer) கிடைத்தது. மச்சாளையும், பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு பெரியண்ணை திருகோணமலைக்குச் சென்றார். கால ஓட்டத்தில் மாலினி வளர்ந்து, படித்து வைத்தியத்துறையில் பட்டம் பெற்ற பின் தான் பிறந்த ஊரான புத்தளத்தில் M.O.H ஆக பணி புரிந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். திருகோணமலையில் பெரியண்ணை காணிப்பதிவு, கல்யாணப்பதிவு (Registrar of Lands and Marriages) உத்தியோகத்தராக தொடர்ந்து பத்து ஆண்டு காலம் பணி புரிந்தார். சின்னண்ணையும் அதன் பின் புத்தளத் திலிருந்து மாற்றலாகி (Transfer) கொழும்பு கல்விக் கந்தோரில் (Education office) பணி புரிந்தார்.

எனது பாடசாலை விடுமுறைக் காலங்களில் எனது சின்னண்ணை கொக்குவிலுக்கு வந்து என்னையும், அம்மாவையும் திருகோணமலைக்கு பெரியண்ணையிடம் கூட்டி சென்றார். எனக்கு மறுபடியும் பாடசாலை ஆரம்பமாவதற்கு ஓர், இரு நாட்களுக்கு முன், சின்னண்ணை கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு வந்து என்னையும், அம்மாவையும் கொக்குவிலுக்கு கூட்டிச் சென்றார். அதன் பின் கொழும்புக்கு திரும்பி சென்றார். இப்படியாக திருகோணமலைக்குச் சென்ற காலங்களில் பல தடவைகள் "கன்னியா" ஏழு சுடுநீர்க் கிணறுகளில் நீராடியதும், நீராடிய பின் கோணேச்சரர் கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்து வந்ததும் ஞாபகமிருக்கிறது.

எனது பாடசாலை சித்திரை மாத விடுமுறைக் காலத்திலும், மார்கழி மாத விடுமுறை காலத்திலும் தான் நாங்கள் பெரியண்ணையிடம் சென்றோம். ஆவணி மாத விடுமுறைக் காலத்தில் செல்வதில்லை. ஆவணி மாத விடுமுறைக் காலத்தில் நல்லூர் கந்தசாமி கோயில் திருவிழா நடைபெறும் காலம். எனது அம்மா திருவிழா நாள்களில் தினமும் அதிகாலை பூசை நேரங்களில் நல்லூர் கந்தசாமி கோயிலுக்குச் செல்வது வழக்கம். தேர்த் திருவிழாவின் போது ஒவ்வொரு வருடமும், தேருக்குப் பின்னால் அடி அழித்துக் கும்பிடுவார். பின் தேர் இருப்பில் வந்தபின் தான் வீட்டுக்கு வருவார். அம்மா இருபத்தைந்து நாள்களும் தொடர்ந்து விரதம் இருப்பார். எனக்கு தொடர்ந்து விரதம் இருப்பது சிரமமாகவிருந்தது. அதனால் தினத்துக்கு, தினம் விரதமிருந் தேன். ஒவ்வொரு வருடமும் பெரியண்ணையும், மச்சாளும், பிள்ளைகளும் நல்லூர் திருவிழா, தேர் திருவிழாவுக்கு அண்மித்த நேரங்களில் கொக்குவிலுக்கு வந்து தங்கி நின்று தேர்த் திருவிழா பார்த்துக் கொண்டு, அதன் பின் பணி செய்யும் இடத்திற்கு திரும்பிச் செல்வார்கள்.

பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த காலங்களில் ஒவ்வொரு வருடமும் வருடப் பிறப்புக்கு இரண்டு வாரங்களுக்கு முன் எனது பெரியண்ணை அமரர் P.M இராசரத்தினம் எனக்குச் சட்டை தைப்பதற்கு அழகான சட்டை துணிகளை வாங்கி பார்சல் (Parcel) மூலம் அனுப்பிவைத்தார். எனது சின்னண்ணை அமரர். மாணிக்கவாசகர் எனக்கு வாங்கிய அழகான சட்டைத் துணிகளையும் பார்சல் (Parcel) மூலம் அனுப்பி வைத்தார். எனது அக்கா அமரர் இரத்தினம்மாவின் கணவர் அமரர் சிவபாதசுந்தரமும் (மச்சான்) அக்காவும், பிள்ளைகளுக்கும் வருடப் பிறப்புக்கு முன் கூட்டியே அழகான துணிகள் வாங்கும் போது எனக்கும் வாங்கித் தந்தார். எனக்கு நான்கு வயதாக இருந்தபோது எனது அக்காவுக்குத் திருமணம் நடைபெற்றது. திருமணம் நடைபெற்ற பின் எனது பெரியண்ணையும், சின்னண்ணையும் அக்காவின் கணவரை மச்சான் என்று கூப்பிட்டார்கள். அவர்கள் மச்சான் என்று கூப்பிடுவதைப் பார்த்து எனக்கும் மச்சான் என்று கூப்பிடும் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. எனது அக்காவின் கணவர் யாழ்ப்பாண மாநகர சபையில் (Jaffna municipality) Revenue inspector ஆகப் பணிபுரிந்தார். எங்களுக்கு ஒவ்வொரு வருடமும் சித்திரை வருட பிறப்புக்கு பாடசாலையில் விடுமுறை விட்டார்கள். நாங்கள் பாடசாலையில் படித்த போது சீருடை (Uniform) அணிய வேண்டிய தேவை ஏற்படவில்லை. அதனால் வருட பிறப்புக்கு அடுத்த நாள், எனது புதுச்சட்டையை அணிந்து கொண்டு பாடசாலைக்குச் சென்றேன். எனது வகுப்பு மாணவிகளும் தங்கள் புது சட்டைகளை அணிந்து கொண்டு வந்தார்கள். அதற்கு அடுத்த இரண்டு நாள்களும், எனக்கு வருடப் பிறப்புக்கு தைத்து வைத்திருந்த மிகுதி இரண்டு சட்டைகளையும் அணிந்து சென்றேன் உமக்கு உங்கள் வீட்டில் மூன்று உடுப்புகள் தைத்து தந்திருக்கிறார்கள் என்று சொல்லி எனது வகுப்பு மாணவிகள் என்னை வியப்புடன் பார்த்தார்கள்.

வருடப் பிறப்புக்கு அனுப்பியது போல, ஒவ்வொரு ஆண்டும் தீபாவளிக்கும் பெரியண்ணை அழகான துணிகளை வாங்கி அனுப்பிவைத்தார். சின்னண்ணையும் அழகான துணிகளை வாங்கி எனக்கு அனுப்பிவைத்தார். எனது அக்காவுக்கும், பிள்ளைகளுக்கும் தீபாவளிக்கு அழகான துணி கள் வாங்கும் போது, மச்சானும் எனக்கு துணிகள் வாங்கித் தந்தார். வருடப்பிறப்புக்கு விடுமுறை விடுவது போலவே ஒவ்வொரு ஆண்டும், தீபாவளிக்கும் பாடசாலையில் விடுமுறை விட்டார்கள். தீபாவளிக்கு அடுத்த மூன்று நாள்களும் எனது மூன்று விதமான புதிய சட்டைகளை பாடசாலைக்கு அணிந்து சென்றேன். இப்படியாக ஆண்டுதோறும் வந்த வருடப் பிறப்பு, தீபாவளிக் காலங்களில் அடுத்தடுத்து மூன்று சட்டைகளை பாடசாலைக்கு அணிந்து சென்றது வழமையாகிவிட்டது.

இன்றைய காலத்தில் எல்லோரும் எல்லா நேரங்களிலும் புதிய உடைகளை வாங்கி அணிகின்றார்கள். ஆனால் அன்றைய காலங்களில், எத்தனை உடைகள் வைத்திருந்தாலும் வருடப்பிறப்பு, தீபாவளி நாள்களில் எல்லோரும் புதிய உடைகள் வாங்கி அணிவது வழமையாக இருந்தது. வெளிநாடுகளில் இருக்கும் தமிழ் மக்கள் சிலருக்கு சித்திரை வருடப்பிறப்பு எப்போது, தீபாவளி எப்போது என்பது தெரியாது. January முதலாம் திகதி எல்லா நாடுகளிலும் விடுமுறை ஆதலால், அனைவரும் January முதலாம் திகதி அன்று கோயிலுக்குச் சென்றும், உறவினர் நண்பர்கள் வீட்டில் நடைபெறும் விருந்துக்களில் கலந்துகொண்டும், மகிழ்ச்சியாகக் கொண்டாடு வார்கள்.

நவீன வடிவமைப்பில் பாதணிகள் (செருப்பு, சப்பாத்து, குதி உயர்ந்த சப்பாத்து) வந்த நேரங்களில் எனக்கு பெரியண்ணை ஒருசோடி பாதணிகளை வாங்கி அனுப்பினார். சின்னண்ணையும் ஒரு சோடி பாதணிகளை வாங்கி அனுப்பினார். மச்சானும் அக்கா, பிள்ளைகள் அனைவருக்கும் பாதணிகள் வாங்கும் போது புதிய வடிவமைப்பில் பாதணிகளை வாங்கித்தந்தார். அந்தப் பாதணிகளையும் பாடசாலைக்கு போட்டுச் சென்றேன். எங்கள் வீட்டுக்கு அண்மையில் வாழ்ந்த ஞானேஸ்வரி (ஞானேஸ் அக்கா) அவரின் தங்கை புவனேஸ்வரி ஆகிய இருவரும் தினமும் பாடசாலைக்கு செல்லும்போது தங்களுடன் என்னையும் கூட்டிச் சென்றார்கள்.

ஞானேஸ்வரியின் (ஞானேஸ் அக்கா) தங்கை புவனேஸ்வரி என்னோடு ஒரே வகுப்பில் ஒன்றாகப் படித்தார். எங்கள் வீட்டில் எனக்கு இரண்டு காதுகளிளும், தோடுகளுடன் தூக்கணாங் களும் (தோட்டுடன் கொழுவி நீளமாகத் தொங்க விடும் காதணிகள்), கைகளில் இரண்டு சோடி காப்புகள், நீலக்கல் பதித்த பெற்றனும், சங்கிலியும் போட்டு அழகு பார்த்தார்கள். எனக்கு அழகான சட்டைகள் வேணும், செருப்புகள் வேணும் வாங்கித் தாருங்கள் என்று எவரையும் கேளாமலே, சகலவற்றையும் தாமாகவே எனக்கு வாங்கித் தந்து, தந்தை இல்லாத குறை தெரியாமல் என்னை அன்புடனும், பாசத்துடனும் வளர்த்தார்கள். அந்தக் காலத்தில் வழி, தெருவில் கள்வர் பயம் இருக்கவில்லை. ஆதலால் வீட்டில் அணிந்திருந்த நகைகள் யாவற்றை யும் அணிந்து கொண்டு பாடசாலைக்குச் சென்று வந்தேன் ஞானேஸ்வரியும் (ஞானேஸ் அக்கா), புவனேஸ்வரியும் தங்களுடைய காப்புகள், சங்கிலிகளை அணிந்து கொண்டு தான் பாடசாலைக்கு சென்றார்கள்.

ஒரு நாள் எங்கள் வகுப்பு ஆசிரியை (Miss Methar) உங்கள் தந்தை என்ன வேலை செய்கிறார் என்று எல்லா மாணவர்களையும் ஒவ்வொருவராகக் கேட்டார். ஒவ்வொரு மாணவர்களும், தங்கள் தகப்பனாரின் வேலை (தொழில்) பற்றிக் கூறினார்கள். எனது முறை வந்த போது, எனது தகப்பன் இறந்து விட்டார் என்று கூறினேன். இதனை கேட்டுக் கொண்டிருந்த எனது வகுப்பு மாணவிகள் சிலர் பத்து மணி இடைவேளையின் (Interval), போது ஏன் தந்தையார் இறந்து விட்டார் என்று பொய் சொன்னீர் என்று கேட்டார்கள், உண்மை தான் சொன்னேன் என்றேன். அவர்கள் நம்பவில்லை. அப்போது இவரின் தந்தையார் இறந்து விட்டார் என்று கூறியது உண்மை தான் என்று புவனேஸ்வரி அவர்களுக்குச் சொன்னார். அதன்பின் சக மாணவிகள் அனைவருக்கும் உண்மை நிரூபணம் (Proof) ஆகிவிட்டது. மேலே எழுதிய நிகழ்வுகள் யாவும் இன்றும் என் நெஞ்சை விட்டு அகலாத நினைவுகளாக இருக்கின்றன.

எனது பெரியண்ணையின் அனுசரனையுடன் எனது திருமணமும் நடைபெற்றது. என் உயிர் உள்ளவரை இந்த நிகழ்வுகள் யாவும், என் நெஞ்சில் நிறைந்த நினைவுகளாகவே இருக்கும். எனது தாயார் எனக்கு சுவையான, சத்துக்கள் நிறைந்த உணவுகளைச் சமைத்துத்தந்தார். அத்துடன் அவர் எனக்குத் தாயாகவும், தந்தையாகவும் இருந்து நல்ல பழக்கங்களையும், அறிவுரைகளையும் சொல்லித்தந்தார். என்னை அதிகாலையில் நித்திரையிலிருந்து எழுப்பி பல்துலக்கி, முகம், கை, கால்களைக் கழுவும் படி சொல்வார். அதன்பின் பருகுவதற்கு தேநீர் தந்து, எனது பாடங்களைப் படிக்கச் சொல்வார். பாடசாலையில் நடைபெற்ற தவணைப் பரீட்சைகள் (Term Test) ஆண்டிறுதிப் பரீட்சைகள் யாவும், நடைபெறுவதற்கு முதன் நாள் வழிமுறை களைச் சொல்லித்தந்தார். கேள்வித்தாள் தந்தவுடன், அதில் உள்ள கேள்விகள் அனைத்தையும், முதலில் இருந்து இறுதிவரை வாசிக்க வேண்டும். அதன் பின் நன்றாகத் தெரிந்த கேள்வி களுக்கு, கேள்வி இலக்கங்களைச் சரியாகப் போட்டபின் பதில்களை எழுத வேண்டும். பதில்களை எழுதி முடித்த பின், மற்றைய கேள்விகளுக்கு ஆறுதலாக யோசித்துப் பதில்களை எழுத வேண் டும் என்று திரும்பத் திரும்பச் சொல்லி என்னைப் பரீட்சை எழுதப் பாடசாலைக்கு அனுப்பினார்.

எனது தந்தையாரின் ஏழு பவுண் சங்கிலியும், அட்சரத்தையும் நந்தாவில் அம்மன் கோயிலுக்கு அண்மையில் வாழ்ந்த நகைக் கடை உரிமையாளரான இராசையா என்பவரிடம் கொடுத்து, எனது திருமணத்தின் போது, எனக்குப் பதக்கம் சங்கிலி செய்து தந்தார். அந்த பதக்கம் சங்கிலியை, எனது இளைய மகள் பாமினியின் திருமணத்தின் போது பாமினிக்கு கொடுத்து விட்டேன். அந்தப் பதக்கம் சங்கிலி இன்றும் என் தந்தையாரின் நினைவாகப் பாமினியிடம் இருக்கின்றது. எனது தந்தையார் வாழ்ந்த காலத்தில் "தனலட்சுமி வாசா" அமைந்துள்ள வீட்டின் கிழக்குப் பக்கமாக உள்ள வீட்டையும், காணியையும் எனது அக்காவின் திருமணத்தின் போது அவர்கள் கேட்டபடி எழுதிக் கொடுத்து விட்டார். அக்காவின் திருமணம் 1941இல் நடைபெற்றது. அதன்பின் எனது தந்தையார் 1942 மார்ச் 30ஆம் தேதி காலமாகிவிட்டார்.

எனது தந்தையாரின் மறைவுக்குப் பின் மிகுதியாக இருந்த காணியும், வீடும் எனக்கு கிடைத்தது. அந்தக் காணியின் பின் பகுதியில் நாங்கள் ஒரு புதிய வீட்டை அமைத்தோம். புதிய வீடு இருந்த போதும், எனது மூத்த மகள் ரோகினி தனது பேரன், பேத்தி வாழ்ந்த வீடுதான் தனக்கு வேணும் என்று விரும்பி கேட்டதனால் அவருக்கு அந்த வீட்டையும், காணியையும் எழுதிக் கொடுத்தோம். தற்பொழுது அந்த வீடு தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் எழுந் தருளியிருக்கும் ஐம்பூதநாதனின் பாதுகாப்பில் இருக்கின்றது. எனது உடல் நலம் பாதிக்கப்பட்டு பல சிரமங்களை அனுபவித்த போதெல்லாம் எனது அம்மாவின் உருவம் எனது கண்முன்னே தோன்றி மறையும். எனது உடல் நலம் பாதிப்பு காரணமாக எனது உடல் வலிமை குன்றிய போதும் அடிக்கடி என் கண்முன்னே தோன்றி மறையும் எனது அம்மாவின் ஆசீர்வாதங் களினால் எனது மனவலிமை குன்றாமல் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

**நெஞ்சம் மறப்பதில்லை - அது**
**நினைவை இழக்கவில்லை**
**எழுதுகிறேன் இங்கு எழுதுகிறேன்,**
**என் கண்களில் நீர் சொரிய,**
**காலங்கள் தோறும் உன் மடி தேடி,**
**கலங்கும் என் மனமே,**
**வரும் நோய்களின் போதும்**
**படும் சிரமத்தின் போதும் - இங்கு**
**காண்பதும் உன் முகமே - அம்மா**
**காண்பதும் உன் முகமே**



அமரர்
திரு. பொ.மு.இராசரத்தினம்
மற்றும்
திருமதி.மகேஸ்வரி இராசரத்தினம்



அமரர்கள்
திரு.செ.சிவபாதசுந்தரம்
மற்றும்
திருமதி.இரத்தினம்மா சிவபாதசுந்தரம்



அமரர்கள்
திரு.மு. மாணிக்கவாசகர்
மற்றும்
திருமதி.றோசம்மா மாணிக்கவாசகர்

# எனது சகோதரர்கள் P.M. இராசரத்தினம், இரத்தினம்மா, மாணிக்கவாசகர்.

எனது பெரியண்ணை P.M இராசரெத்தினம், மச்சாள் மகேஸ்வரி தம்பதியினருக்கு, இராச மகேஸ்வரன், மதிவதனி, றஞ்சினி, மாலினி பாலகுமார், ராகினி, இராசகுமார், இந்திரகுமார் ஆகிய பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களுள் றஞ்சினி இறைபதம் எய்தியது கவலைக்குரிய விடயமாகும். இராச மகேஸ்வரனும், அவரது மனைவி சந்திரவதனியும் பிரித்தானியாவில் இருக்கிறார்கள். அவர்களது பிள்ளைகளான நிரேஸ், மயூரேஸ், ஆகிய இருவரும் தத்தமது குடும்பத்துடன் பிரித்தானியாவிலேயே இருக்கிறார்கள். மதிவதனியும், அவரது கணவர் சரவணபவனும் தாவடி கொக்குவிலில் அமைந்துள்ள தமது வீட்டில் இருக்கிறார்கள். அவர்களது மூத்த மகள் கார்த்திகா தனது கணவர் பாலகுமாருடனும், பிள்ளைகளுடனும் சுவிற்சர்லாந்தில் இருக்கிறார். இரண்டாவது மகள் நித்திகாவும் கணவர் சிவகரனும், பிள்ளைகளும் பிரித்தானி யாவில் இருக்கிறார்கள். மகன் நஜிகேத், தனது மனைவி தர்மிகா மற்றும் பிள்ளைகளுடன் இலங்கையில் இருக்கிறார். கடைசி மகள் நிவேதிகா தனது கணவர் நிரோஷனுடனும், பிள்ளைகளுடனும் இலங்கையில் இருக்கிறார்.

றஞ்சினியின் மகன் இளங்கோ தனது குடும்பத்துடன் பிரித்தானியாவில் இருக்கிறார். மாலினி தனது கணவர் சதானந்தனுடன் Scotland நாட்டில் இருக்கிறார். பாலகுமார் தனது மனைவியுடன் Norway நாட்டில் இருக்கிறார். அவர்களது பிள்ளைகள் நீரஜா, தனுக்ஷன் அவரது மனைவி கௌரி ஆகியோரும் Norway நாட்டில் இருக்கிறார்கள். ராகினியும் அவரது கணவர் சுதனும், தமது பிள்ளைகளான சகானா, பிரனீத் (Praneeth) ஆகியோருடன் றொறன்ரோ கனடாவில் (Torento Canada) இருக்கிறார்கள். இராசகுமார் மனைவி ஜானகி, பிள்ளைகள் துர்க்கா, கிக்ஷான் ஆகியோர் Norway நாட்டில் இருக்கிறார்கள். இந்திரகுமார் தனது மனைவி கலைமதியுடனும், மகன் அபினாஷ் உடனும் பிரித்தானியாவில் இருக்கிறார்.

எனது அக்கா சிவபாதசுந்தரம் இரத்தினம்மா தம்பதியினருக்கு நான்கு ஆண்களும், நான்கு பெண்களுமாக எண்மர் பிறந்தார்கள். அவர்களுள் மகேஸ்வரன், ஞானேஸ்வரன், சுதந்திர ஈஸ்வரன், இராஜேஸ்வரன் ஆகிய நான்கு ஈஸ்வரன்களும், பெண்களுள் மூத்தவளான சிவநேசரத்தினமும் இறைவனடி சேர்ந்து விட்டார்கள். மகேஸ்வரனின் மனைவி இராஜேஸ்வரி, சுதந்திரேஸ்வரனின் மனைவி றஞ்சினி, சிவநேசரத்தினத்தின் கணவர் குணரத்தினம் ஆகிய மூவரும் இறைவனடி சேர்ந்து விட்டார்கள். இவர்கள் அனைவரின் பிரிவும் எங்களுக்கு மிகவும் கவலைக்குரிய விடயங்களாகும்.

ஞானேஸ்வரனின் மனைவி ருக்மணிதேவி அவரது பிள்ளைகள் கோகுலன், சியாமளன், மதுரன் ஆகிய அனைவரும் நியூசிலாந்தில் (New Zealand) இருக்கிறார்கள். இராஜேஸ்வரனின் மனைவி சிவாஜினி யாழ்ப்பாணத்தில் அவரது வீட்டில், இரண்டாவது மகன் அர்ஜுன் (Arujun) அவரது மனைவி கேதுஜா மற்றும் அவர்களது பிள்ளைகள் ஆகியோருடன் இருக்கிறார். இராஜேஸ்வரனின் மூத்த மகன் திலீபன் தனது மனைவி மீரா மற்றும் அவர்களது

பிள்ளைகளுடன் அவுஸ்ரேலியாவில் (Australia) இருக்கிறார். இராஜேஸ்வரனின் மகள் நிரோஷினியும் (Niroshini) அவரது கணவர் பிருந்தாபனும் (Brinthapan), அவர்களது மகனும் சிங்கப்பூரில் இருக்கிறார்கள். அமரர்களான குணரத்தினம் சிவநேசரத்தினம் தம்பதியினரின் மூத்த மகன் பார்த்தீபனும் அவரது மனைவி துஸ்யந்தியும் அவர்களது பிள்ளைகள் கேதாரன், அபிராம், சிவகன் ஆகிய அனைவரும் அவுஸ்ரேலியாவில் (Australia) இருக்கிறார்கள். பிரதீபன், யசீலா, வாதாபன் ஆகியோர் சுவீடன் நாட்டில் இருக்கிறார்கள்.

தர்ஷிகாவும், அவரின் கணவர் தயாகரனும், அவர்களுடைய பிள்ளைகள் கேசிகன் (kesikan), கவிநயா (Kavinaya) ஆகியோரும் பிரித்தானியாவில் இருக்கிறார்கள். சுகந்தீபன் இறைவனடி சேர்ந்துவிட்டார். சிவநேசராணியும் அவரின் கணவர் பத்மநேசனும், மகள் கௌசல்யாவும் கணவர் நந்தீஸ் அவர்களின் மகன் அனுசயன் ஆகியோர் கொக்குவிலில் இருக்கிறார்கள். பத்மநேசன் சிவநேசராணி தம்பதியினரின் மகன் முகுந்தனும், அவரின் மனைவி திவாகரியும் அவர்களின் பிள்ளைகள் ஆதினி, ஆதிரன் ஆகியோரும் கொழும்பில் இருக்கிறார்கள். ஜெயபாலன் சிவநேசமலர் தம்பதியினரும், அவர்களின் மகள் பிரியவதனியும், அவரின் கணவர் அகல்யன், மகன் அயிலவன் ஆகியோர் கொக்குவிலில் இருக்கிறார்கள். ஜெயபாலன் சிவநேசமலர் தம்பதியினரின் மகன் சுஜீவன், அவரது மனைவி சுதா இருவரும் சுவிசர்லாந்தில் (Switzerland) இருக்கிறார்கள். சிவானந்தராசா சிவநேசஜோதி தம்பதியினரும் அவர்களின் மகள் பானுரதியும் நியூசிலாந்தில் இருக்கிறார்கள்.

எனது சின்னண்ணை மாணிக்கவாசகர், மச்சாள் றோசம்மா தம்பதியினருக்கு தவரூபி, கலாரூபி, சிவரூபி, ஜெயரூபி, மணிவண்ணன், சீராளன் ஆகிய ஆறு பிள்ளைகள் இருக்கிறார் கள். தவரூபியும், அவரின் கணவர் சுகந்தனும் சுவிசர்லாந்தில் இருக்கிறார்கள். அவர்களின் மூத்த மகன் விதுஷனும், மனைவி ஜெயகௌரியும் பிள்ளைகள் காயத்திரி, திவ்வியா ஆகியோரும், இரண்டாவது மகன் சுகாசனும், மனைவி யாழினியும், பிள்ளைகள் பூஜா, சாருகான் ஆகியோரும், மூன்றாவது மகன் ரிஷிகேசனும், மனைவி சிந்தியாவும், பிள்ளைகள் Valatino, Ariyana ஆகியோரும், நான்காவது மகன் மதுக்ஷனும், மனைவி ரஞ்சினிதேவியும் மகன் துநலனயெ ஆகியோரும், ஐந்தாவது மகன் கௌதமும் அவரின் மனைவி சங்கீதா ஆகியோரும் சுவிற்சர்லாந்தில் (Switzerland) இருக்கிறார்கள்.

கலாரூபியும் அவரது கணவர் ஜேசுதாசனும், அவர்களின் இளைய மகன் தினேசும் ஜெர்மனியில் இருக்கிறார்கள். அவர்களின் மூத்த மகன் அனிஷ்ரன் றொமேக்ஷ் மனைவி செரீனா இருவரும் சுவிட்சர்லாந்தில் இருக்கிறார்கள். அவர்களின் மகள் கரீனும் அவரது கணவர் பிரசாந் ஆகியோர் சுவிற்சர்லாந்தில் இருக்கிறார்கள். சிவரூபியும் அவரது கணவர் பிறேமகுமாரும், அவர்களது மகன் பிருந்தன் அவரின் மனைவி Jobena மற்றும் மகன் ஜெய்சன் ஆகியோர் சுவிற்சர்லாந்தில் இருக்கிறார்கள். ஜெயரூபியும் அவரது கணவன் ஜெயக்குமார், அவர்களது மகன் யதீன் ஆகியோர் சுவிசர்லாந்தில் இருக்கிறார்கள். அவர்களின் மகள் யதானாவும் அவரது கணவர் கதீசன் ஆகியோரும் சுவிற்சர்லாந்தில் இருக்கிறார்கள். மணிவண்ணன் அவரது மனைவி உசீலா (வதனி) இரண்டாவது மகள் யஸ்மின் ஆகியோர் சுவிற்சர்லாந்தில் இருக்கிறார்கள். அவர்களின் மூத்த மகள் மெலீனா (Melina) அவரது கணவர் நிசாந்தன் ஆகியோரும் சுவிட்சர்லாந்தில் இருக்கிறார்கள். சீராளனும், அவரது மனைவி மணி மாலாவும், அவர்களின் பிள்ளைகள் பவித்திரன், அக்சரா, ஆகியோர் சுவிற்சர்லாந்தில் இருக்கிறார்கள்.

# எங்கள் சைவத் திருப்பணிகள்

எங்கள் ஊரிலுள்ள பழமை வாய்ந்த கோயில்களான பொற்பதி விநாயகர் கோயில், நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் கோயில், மற்றும் 1984ல் அமைக்கப்பட்ட ஸ்ரீ சாயி துர்க்கை அம்மன் கோயில் ஆகிய கோயில்களுக்கு அடிக்கடி சென்று வணங்கி வந்ததோடு, திருப்பணிகளையும் செய்துள்ளோம். நல்லூர்க் கந்தசாமி கோயில், கோட்டை முனியப்பர் கோயில், மருதடிப் பிள்ளையார் கோயில், தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோயில், செல்வச் சந்நிதி முருகன் கோயில் ஆகிய கோயில்களுக்கும் சென்று வழிபட்டு வந்தோம். கொக்குவில் மாத்தனை முருகன் கோயில், மஞ்சவனப்பதி முருகன் கோயில், புதுக் கோயில் சிவசுப்பிரமணியர் கோயில் ஆகிய கோயில்களுக்கும் சென்று வழிபட்டேன்.

பாடசாலையில் படித்த காலத்தில் 1949ம் ஆண்டு தொடக்கம் 1953ம் ஆண்டு வரை புதுக்கோயில் சிவசுப்பிரமணியர் கோயில் முன் வாசல் தான் எங்களுடைய Prayer Hall அங்கு எல்லா மாணவர்களும் வரிசையாக நின்று ஒரு மாணவன் அல்லது ஒரு மாணவி தேவாரம் புராணம் பாடி "நமப் பார்வதி பதையே" என்று சொன்னதும் ஏனைய மாணவர்கள் "அரகர மகாதேவா" என்று சொல்லி முடித்த பின் ஒழுங்காக அவரவர் வகுப்புகளுக்குச் சென்றோம். தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோயிலில் உள்ள மூத்தோர் பராமரிப்பு நிலையம், கோண்டாவிலில் அமைந்துள்ள மனவளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கான பாடசாலை (சிவபூமி) கருணைப்பாலம் போன்ற பராமரிப்பு நிலையங்களுக்கு உதவிக்கரம் நீட்டியுள்ளோம்.

செல்வச் சந்நிதி முருகன் கோயிலுக்கு அடிக்கடி சென்று வழிபட்டு வந்தோம் இலங்கையில் அதிகமான மடங்களை கொண்டு விளங்கும் ஆலயம் செல்வச் சந்நிதியாகும். அங்கு திருவிழா நடைபெற்ற காலங்களிலும் சென்று வழிபட்டோம். எங்களுடைய மூன்று பிள்ளைகளுக்கும், செல்வச் சந்நிதி முருகன் கோயிலில் முதன் முதல் முடி இறக்கினோம். முடி இறக்கிய பின் (மொட்டை வழித்த பின்) அங்குள்ள புனித நீரில் நீராட்டி சுவாமி தரிசனம் செய்துவந்தோம். எங்களுடைய மகன் ஈசன், மகள் ரோகினி இருவரையும் முடி இறக்க செல்வச் சந்நிதி முருகன் கோயிலுக்கு கொண்டு சென்ற போது, எனது அம்மா இரண்டு தடவையும் எங்களுடன் வந்தார். எங்கள் மகள் பாமினி பிறப்பதற்கு இரண்டரை ஆண்டுகளுக்கு முன் எனது அம்மா இறைவனடி சேர்ந்துவிட்டார். பாமினியை முதன் முதலில் செல்வச் சந்நிதிக்கு முடி இறக்க கொண்டு போன போது முன் வீட்டிலிருந்த சின்னப்பிள்ளை ஆச்சி (கண்ணனின் பேத்தியார்) எங்களுடன் வந்தார். அவர் தனது பேத்தி ரதியையும் தன்னுடன் கூட்டிக் கொண்டு வந்தார். அங்கு பாமினிக்கு முடி இறக்க (மொட்டை வழித்தல்) கொண்டு போன போது ஈசன், ரோகினி இருவருக்கும் முடி இறக்கிய ஆளே நின்றார். எங்களுடைய மூன்று பிள்ளைகளுக்கும், முடி இறக்கு வதற்கு முருகப் பெருமான் தன்னையே நியமித்திருக்கிறார் என்று கூறி அவர் மகிழ்ந்தார்.

அங்கு அன்னதானம் கொடுப்பதற்குத் தேவையான அரிசி, தேங்காய், காய்கறிகளை வாங்கிக் கொண்டு மீண்டும் ஒருமுறை சென்றோம். அப்பொழுது எனது அக்கா

இரத்தினம் மாவையும், ஐயா (இராசையா), அம்மம்மாவையும் (பாக்கியம்) அவர்களது மகள் தேவியையும் (கமலாதேவி), எங்களுடன் கூட்டிச் சென்றோம். அங்கு அன்னதான மடத்தில் தொண்டு செய்யும் பெண்கள் மூவர், நாங்கள் கொண்டு சென்ற அரிசி, மரக்கறி ஆகியவற்றை எங்களிடமிருந்து வாங்கி அவர்களே சமையல் செய்து தந்தார்கள். நாங்கள் அங்கு வந்த அடியார்களுக்கு சமைத்த உணவைப் பரிமாறிய பின் மன நிறைவுடன் வீடு வந்து சேர்ந்தோம். 1978ம் ஆண்டு வைகாசி விசாகத்தின் போது, நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயிலுக்குச் சென்று, அம்மனுக்கு நபினாபிஷேகம் செய்வதற்கு எங்களுக்கு அம்மன் அருள் கிடைத்தது.

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயிலுக்கு அதிகாலையில் சென்று, அபிஷேகம் நிறைவு பெற்ற பின் மாலையில் அங்கிருந்து வீடு திரும்பினோம். மற்றும் நயினாதீவு பிடாரி அம்மன் கோயிலில் நடைபெற்ற பொங்கல் விழாவுக்கு எனது அக்காவின் மகள் சிவநேசரத்தினம். குணரெத்தினம் எங்களை அங்கு கூட்டிச் சென்றார். மருமகன் குணரெத்தினமும் (பார்த்தீபனின் அப்பா) அவரது சகோதரர்களும் அந்தக் கோயிலை பரிபாலித்து வந்தார்கள். பொங்கலின் போது, பிடாரி அம்மன் சந்நிதானத்திற்கு முன்னால் நீளமான பெரிய பந்தல் அமைத்து, அதன் இரு மருங்கிலும் இளநீர் குலைகள், நுங்கு குலைகள் கட்டித் தொங்கவிட்டு அழகாக அலங்கரித் திருந்தார்கள். அங்குள்ள மக்கள் பெரிய கிடாரங்கள், பெரிய சருவங்களில் பொங்கல் செய்து, வடை, முறுக்கு, பால் ரொட்டி போன்ற பலகாரங்களையும் பெரும் தொகையாகச் செய்து அம்மனுக்கு படையல் செய்து வணங்கித் தங்கள் நேர்த்திக் கடனை நிறைவேற்றினார்கள்.

சிலர் அம்மனுக்கு நேர்ந்து விட்ட ஆடுகள், கோழிகளையும் கோயிலில் கொண்டு வந்து கொடுத்தார்கள். பிடாரி அம்மன் கோயிலில் ஆடுகள், கோழிகளை வெட்டி பலி கொடுப்பதில்லை. நேத்தி கடனுக்கு கொண்டு வந்த ஆடுகள், கோழிகளை பரிபாலன சபையினர் ஏலம் கூறி விற்றார்கள். அங்கு வந்த மக்கள் சிலர் அவற்றை தாங்கள் வளர்ப்பதற்கு வாங்கிச் சென்றார்கள். விற்ற பணத்தை கோயில் தேவைகளுக்கு எடுத்துக் கொண்டார்கள். எங்களுடைய பிள்ளைகள் பொங்கல் விழாவை பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். பொங்கல் நிறைவு பெற்றபின் இரட்டை மாட்டுவண்டியில் எங்களை குணரத்தினத்தின் சகோதரியின் வீட்டுக்கு கூட்டிச் சென்று, அங்கு சோறு, கறி, பொங்கல், பலகாரங்கள், பழங்கள் யாவும் தந்தார்கள். அதன் பின் இரட்டை மாட்டு வண்டியில் எங்களை கூட்டிக் கொண்டு கடற்கரைக்கு சென்று தோணியில் ஏற்றி வழி அனுப்பி வைத்தார்கள். இவையாவும் மறக்க முடியாத சம்பவங்கள்.

எங்களுடைய புது வீடு 1982ல் கட்டினோம். வீடு கட்டி சிறிது நாட்களின் பின் தெல்லிப் பளை துர்க்கை அம்மன் கோயிலுக்குச் சென்றோம். அப்பொழுது அங்கு துர்க்கை அம்மனுக்கு தீர்த்தக்கேணி வெட்டும் வேலை ஆரம்பமாகி கொண்டிருந்தது. நாங்கள் கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்த பின் தீர்த்தக்கேணி திருப்பணிக்கு பங்களிப்புச் செய்து விட்டு வீடு திரும்பினோம். இரண்டு கிழமைகளின் பின் எங்களுடைய புதிய வீட்டுக்கு கிணறு வெட்டுவதற்கு தெல்லிப்பளை துர்க்கை அம்மனின் திருவருள் கிடைத்தது. கிணறு வெட்டுவதற்கு நிலம் எடுத்த பின் கிணறு வெட்டுபவர்களை அழைத்து கிணறு வெட்டிக் கட்டினோம்.

எங்கள் பழைய வீட்டுத் தேவைகளுக்கும், புதிய வீட்டுத் தேவைகளுக்கும் எனது தந்தை, தாயார் பாவித்த பழைய கிணற்றில் தான் முன்பு தண்ணி அள்ளிப் பாவித்தோம். அந்தக் கிணறு எனது அக்கா இரத்தினம்மாவின் காணிக்குள் இருந்தது. எனக்கு அந்த கிணற்றில் வழி

வாய்க்கால் தண்ணி பங்கு இருந்தமையால் அதில் தண்ணீர் அள்ளிப் பாவித்தோம். புதிய வீட்டுக்கு வெட்டிய கிணறு எங்கள் வீட்டின் முன் வாசல் கதவுக்கு அருகாமையில் இருந்தது. எங்களுக்கு தண்ணீர் எடுப்பதற்கு சுலபமாகவும், வசதியாகவும் இருந்தது.

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் எங்களுக்கு வசதியாக தண்ணி அள்ளுவதற்கு கிணறு வெட்டுவதற்கு அருள்பாலித்ததற்கு நன்றி செலுத்துவதற்காக மீண்டும் ஒரு நாள் அங்கு சென்றோம். அப்போதும் அங்கு கேணி வெட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. மீண்டும் கேணித் திருப்பணிக்கு சிறிது பங்களிப்பு செய்துவிட்டு வீடு திரும்பினோம். அதன் பின் எங்களுடைய பழைய வீட்டிற்கும் கிணறு வெட்டி கட்டுவதற்கு அம்மன் அருள் பாலித்தார். மிகுந்த மகிழ்ச்சியுடன் பழைய வீட்டுக்கு அண்மையிலும் ஒரு கிணறை வெட்டுவித்து கட்டினோம். நாங்கள் ஒரு சிறிய பங்களிப்புச் செய்ததற்கு துர்க்கை அம்மன் எங்களுக்கு பெரிய தேவைகளுக்கு அருள் புரிந்தார்.

நாங்கள் ஒன்பது வருட காலம் கொழும்பில் தங்கியிருந்த போது Bambalappity கதிரேசன் கோயில், மயூரா அம்மன் கோயில், Dehiwela விஷ்ணு கோயில் ஆகிய கோயில்களுக்கு அடிக்கடி சென்று வந்ததுடன் திருப்பணிகளிலும் பங்கு கொண்டிருந்தோம். ஒருமுறை மயூரா அம்மன் திருவிழா நடந்த போது அம்மனை கோயிலில் இருந்து ஊர்வலமாக, வெள்ளவத்தை Charliment வீதியினூடாக கொண்டு சென்று வெள்ளவத்தைக் கடலில் தீர்த்தோற்சவம் நடத்தினார்கள். அப்போது அங்கு வந்த மக்களில் சிலர் தமது நேர்த்திக் கடனை நிறைவேற்றுவதற்கு அம்மன் தீர்த்தமாடிய பின், கடலில் இறங்கி அந்த புனித நீரில் நீராடினார்கள். இதனைக் கண்ணுற்ற எனக்கும் அம்மன் தீர்த்தமாடிய நீரில் நீராட வேண்டும் என மனதில் தோன்றியது. அடுத்த தீர்த்தோற்சவத்தின் போது நீராடுவதாக அம்மனுக்கு வேண்டுதல் செய்துவிட்டு வீட்டுக்கு வந்தேன்.

அடுத்த ஆண்டு 1997ல் மயூரா அம்மனின் தீர்த்தோற்சவத்தின் போது அம்மனை தீர்த்தம் ஆடியவுடன், கடலில் இறங்கி, தலை முதல் கால் வரை அம்மன் தீர்த்தம் ஆடிய புனித நீரில் நீராடினேன். நீராடிய பின் அம்மனை வணங்கி விட்டு தலையிலிருந்து நீர்சொட்ட நனைந்த ஆடைகளுடன் வெள்ளவத்தை இராமகிருஷ்ண வீதியில் (Ramakrishna Road) நாங்கள் தங்கி இருந்த ஆறாம் இலக்க (No 6) வீட்டுக்குச் சென்றேன். சென்ற பின் ஈர ஆடைகளைக் களைந்து, வேறு உடைகளை அணிந்து கொண்டு தலையிலுள்ள நீரைத்துவட்டிய பின் உணவு உண்டேன். சாதாரண நாள்களில் ஒரு சிறு மழைத்துளி தலையில் பட்டவுடன் எனக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டுச் சிரமப்பட்டுள்ளேன். ஆனால் அன்று அம்மன் அருளால் எனக்கு எதுவித உடல் நலப் பாதிப்பும் ஏற்படவில்லை.

நினைப்பது நிறைவேறும் – இறைவனை
இதயத்தில் இருத்தி வைத்தால்
நடப்பது நலமாகும் – இறைவன் மேல்
நம்பிக்கை வைத்திருந்தால்

நாங்கள் ரொறன்ரோ (Toronto) சென்ற நேரங்களில் எனது பெரியண்ணையின் மகள் ராகினி (Rahini) வீட்டில் தான் தங்குவது வழக்கம். அந்த நேரங்களில் ராகினி எங்களை ரொறன்ரோவில் உள்ள கனடா கந்தசாமி கோயில் நாகபூசணி அம்மன் கோயில் சிவன் கோயில்

மற்றும் North York கில் அமைந்துள்ள திருச்செந்தூர் முருகன் கோயில் ஆகிய கோயில் களுக்கு கூட்டிச் சென்றார். அமெரிக்காவில் எழுந்தருளியிருக்கின்ற இராஜ இராஜேஸ்வரி அம்மன் கோயிலுக்கு எங்கள் மகன் ஈசன் எங்களை பல தடவை கூட்டிச்சென்றார். 3.7.2010ல் இராஜ இராஜேஸ்வரி அம்மன் கோயிலில் மாபெரும் யாகம் நடைபெற்றது. யாகத்தில் பங்கு கொள்வதற்கு எங்களுடைய மகன் ஈசன் முற்பணம் ஆயிரத்து ஒரு டொலர் (1001$) செலுத்தி முன்னேற்பாடாக பதிவு செய்திருந்தார். யாகம் நடைபெற்ற அன்று அதிகாலையில் எங்கள் மகன் குடும்பத்தினருடன் நாங்களும் அங்கு சென்றோம். கோயிலின் இடது பக்க வீதிக்கு அருகாமையில் பெரிய கொட்டகைப் பந்தல் அமைத்து, அதற்குள் யாகம் செய்வதற்கு வேண்டிய ஒழுங்குகள் நடைபெற்றன.

கோயிலின் இடது பக்க வீதியில் பெரிய பசுமாடு ஒன்றையும் அதன் கன்றையும் கொண்டு வந்து நிறுத்தி அவற்றிற்கு அபிஷேகம் செய்து அவற்றின் நெற்றியில் விபூதி சந்தனம் குங்குமம் இட்டு பழம், பாக்கு, வெற்றிலை முதலியன வைத்து பசுவுக்கும், கன்றுக்கும் தூப தீபம் காண்பித்தார்கள். அதன்பின் வாழைப்பழம், வெற்றிலை யாவற்றையும் பசுவுக்கு உண்பதற்குக் கொடுத்தார்கள். அங்கு தரிசனம் செய்ய வந்தவர்களை, பசுவையும், கன்றையும் சுற்றி வலம் வந்து வணங்கச் சொன்னார்கள். நாங்களும் பசுவையும், கன்றையும் சுற்றி வலம் வந்து வணங்கினோம். அதன்பின் யாகம் ஆரம்பமானது. கோயிலில் காலை உணவு, மதியம் சோறு, கறிகள் யாவும் பரிமாறினார்கள். மதிய போசனத்தின் பின் யாகம் தொடர்ந்து நடைபெற்றது.

அன்று மதியத்தின் பின் உலக சமாதானத்துக்காகவும், மக்களின் நன்மைகள் கருதியும் தனது வாழ்க்கையை அர்ப்பணம் செய்தவரான Amma Srikarunamayi என்பவரை இராஜ இராஜேஸ்வரி அம்மன் கோயிலுக்கு அழைத்துவந்தார்கள். Amma Srikarunamayi இராஜ இராஜேஸ்வரி அம்மன் சந்நிதானத்தில் நின்று எனது கணவருக்கும், எனக்கும் நெற்றியில் குங்கும திலகம் வைத்து ஆசீர்வாதம் செய்தார். அவர் ஆசீர்வாதம் செய்த போது எனது மனம் புளகாங்கிதம் (மகிழ்ச்சி) அடைந்தது. 2010ல் Sri Amma karunamayi தனது இதய பூர்வமான ஆசீர்வாதத்தை எங்களுக்கு செய்ததன் பலன் 2021ல் எங்களின் அறுபதாவது திருமண நாளையும் நிறைவு செய்து மஞ்சள் குங்குமத்துடன் வாழ வைத்திருக்கின்றது.

நாங்கள் யாகத்தின் இரண்டாம் நாள் அதிகாலை இராஜ இராஜேஸ்வரி அம்மன் கோயிலுக்கு சென்றோம். அன்று வெளிவீதியில் குதிரை ஒன்றைக் கொண்டு வந்து நிறுத்தி முதன் நாள் பசுவுக்கும், கன்றுக்கும் செய்தது போல யாவும் செய்து தூப தீபம் காட்டி வணங்கினார்கள். யாகத்தின் மூன்றாம் நாளும் கோயில் தரிசனம் செய்த பின் வீடு வந்து சேர்ந்தோம். இப்போ இராஜ இராஜேஸ்வரி அம்மன் கோயிலில் கட்டப்படும் புதிய கட்டிடத் திருத்தப்பணிக்கும் எங்களுடைய மகன் பங்களிப்பு செய்துள்ளார். எங்களுடைய மகள் தர்மதாஸ் பாமினி குடும்பத்தினர் Montreal அருள்மிகு திருமுருகன் கோயில் கைலாச வாகன திருவிழாவுக்கு வருடா, வருடம் பங்களிப்பு செய்து வருகிறார்கள்.

கடந்த பல வருடங்களாக ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 6ஆம் திகதி (November 6) ஸ்ரீ நயினாதீவு அம்மன் கோயிலில் எனது கணவரின் பெயர் நட்சத்திரம் எனது பெயர் நட்சத்திரம் எங்கள் பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் அனைவரின் பெயர்கள் நட்சத்திரங்களுக்கு அர்ச்சனை செய்து விபூதி பிரசாதம் அங்குள்ள அறங்காவலர் சபையினர் வருடா, வருடம்

தவறாமல் எங்களுக்கு அனுப்பி வைத்துக்கொண்டே இருக்கிறார்கள். அத்துடன் அன்றைய குறிப்பிட்ட தினத்தில் (November 6) எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரின் பெயரால் அங்கு அன்னதானமும் வருடா வருடம் செய்வதற்கு வேண்டிய ஒழுங்குகளும் செய்துள்ளோம்.

எங்களுடைய வருங்கால வாரிசுகள் எங்களைப் போல சமய பற்றாளராகவும் தர்ம சிந்தனையுடையவர்களாகவும் செயல்பட வேண்டும் என்பதற்காகவே திருப்பணிகள் தர்ம காரியங்கள் பற்றி இங்கே விரிவாக எழுதியுள்ளேன். சமய சம்பந்தமான நிகழ்வுகள் பற்றி எழுதும் படி பார்த்தீபனும் (தென்னவன்) கூறியதனால் நாங்கள் பங்களிப்பு செய்தவற்றை இங்கு எழுதியுள்ளேன். அது செய்தோம் இது செய்தோம் என்று மற்றவர்களுக்கு விளம்பரப்படுத்து வதற்கு இவற்றையெல்லாம் இங்கு எழுதவில்லை. எங்களுடைய வருங்கால வாரிசுகள் மூத்தோராகிய நாங்கள் செய்தவற்றை பார்த்து தாங்களும் கடவுள் பக்தி உடையவர்களாக கோயில் திருப்பணிகள் தர்ம காரியங்களைச் செய்து சமயப் பற்றாளராகவும் வாழ்ந்து தமது வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் தான் பிரதானமாக மேற்கூறிய விடயங்களை இங்கு எழுதியுள்ளேன் என்பதை மீண்டும் ஒருமுறை கூறிக் கொள்கிறேன். எனது சிறுபராயம் தொடக்கம் அடியேன் வாழ்ந்த காலம் வரை நடைபெற்ற நிகழ்வுகள் அனைத்தையும் நினைவில் மீட்டிப் பார்த்து எழுதுவதற்கு எனக்கு ஞாபக சக்தியை தந்தருளிய எல்லாம் வல்ல இறைவனுக்கு கோடான கோடி நன்றிகளை கூறிக்கொண்டு, அவரின் பாதங்களில் பணிந்து வணங்கி எனது ஆக்கத்தை நிறைவு செய்கிறேன்.

# தேர்த் திருவிழாவும் மனிதனின் வாழ்க்கையும்

பண்டைத் தமிழ் மக்கள் தங்கள் சமய நிகழ்ச்சிகள் யாவற்றையும் தத்துவ அர்த்தங் களுடனே தான் செய்தனர். தேர் என்பது தேகம். தேர் ஓட்டம் என்பது வாழ்க்கையாகும். ஆகவே தேரோட்டத் திருவிழா மனிதனின் வாழ்க்கையை சித்தரிக்கிறது. ஒரு தேரின் அமைப்பை ஆறு பகுதிகளாக பிரிக்கலாம்.

1. **நான்கு சக்கரங்கள்**
2. **கீழ்ப்பகுதி**
3. **தட்டு அல்லது பீடம்**
4. **மேற்பகுதி**
5. **கவசம் அல்லது முடி**
6. **அதன் மேல் உச்சியில் கட்டப்படும் குடை என்பன**

வெளியாகத் தெரிகின்ற நான்கு சக்கரங்களும், சரியை, கிரிகை, யோகம், ஞானம் என்னும் நான்கு படிகளைக் குறிக்கின்றன. ஒரு மனிதன் இதன் வழிமுறைகளை அனுசரித்துத் தான் வாழ்க்கையிற் பூரணத்துவம் பெறலாம் என்பதை காட்டுகின்றது. இந்தப் படிகளில் ஈடுபடும் போது பலவிதமான ஆசா பாசங்கள், மயக்கங்கள் வந்து நமக்கு முட்டுக் கட்டை போட்டு நமது வாழ்க்கையை திசை திருப்பி விடுகின்றன. இதனையே தேரோடும் போது சறுக்கு கட்டைகளை போட்டுத் தேரோட்டத்தை தடை செய்யும் நிகழ்ச்சி குறிக்கின்றது.

தேரின் கீழ் பகுதியிலே பலவிதமான சித்திரங்கள் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருக்கும் அவை மனித வாழ்க்கையில் உள்ள காமம், குரோதம், லோபம், மோகம், மதம் என்னும் மனோவிகாரங்களையும் மனதில் தோன்றும் பல வித உணர்ச்சிகளையும் சித்தரிக்கின்றன. நாம் வாழ்க்கையை செவ்வனே நடத்த வேண்டுமானால் இவற்றையெல்லாம் கடந்து மேலான ஸ்தானத்தை அடைய வேண்டும் என்பதே இதன் கருத்தாகும்.

மூன்றாவது அங்கமாக உள்ள தட்டு அல்லது பீடம் எமது இதயத்தை குறிக்கின்றது. இறைவனின் உருவச்சிலையை கொண்டு போய் பீடத்தில் அமர்த்துகிறார்கள். இது போலவே உடலோடு அமைந்த வாழ்க்கை என்னும் தேர் நன்றாக ஓட வேண்டுமானால் மனம் என்ற பீடத்தில் நாம் இறைவனை இருத்த வேண்டும். இறைவனே உடலை இயக்கும் உயிரான பரமாத்மா இறைவன் தேரில் ஏறியதும் தேர் ஓட்டம் ஆரம்பிக்கிறது. இறைவனின் விக்கிரகத்தை தேரிலிருந்து இறக்கிய பின் தேர் ஓட்டம் நிறுத்தப்படுகிறது. இது போலவே உடம்பில் உயிர் இயங்குவது நிகழ்கின்றது.

தேரின் மேற்பகுதி வாழ்க்கையின் உன்னத இலட்சியங்களை எடுத்துக்காட்டுகிறது. மனிதனின் இலட்சியங்கள் பலதரப்பட்டன என்பதைக் கூறும் முகமாகவே பலவித வர்ணச் சோலைகளால் வரிசை வரிசையாக அலங்கரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மேற்ப்பாகம் அடியில்


அகன்று மேலே போகப் போக குறுகிச் செல்கிறது. அது இலட்சியங்கள் எண்ணங்கள் பலவகை யாக உள்ள போதும் எல்லாம் குவிந்து செல்ல வேண்டும் என்பதை காட்டுகிறது. மேலே உள்ள கவசம் வாழ்க்கையின் உன்னதப் பேறான பிறவிப்பயனைக் குறிக்கிறது. வாழ்க்கையிலே செயல்கள் குறிக்கோள்கள் ஆகியன பலவாக மாறுபட்ட நிலையில் இருந்த போதும் அவை யெல்லாம் பிறவிப்பயன் என்ற பேற்றினை நோக்கி குவிதல் அவசியம் என்பதனை மேற்பகுதியும் கவசமும் சொல்லாமல் சொல்லி நிற்கின்றன. அவ்வாறு ஒன்று சேர்ந்து குவியுமானால் ஆத்ம சாந்தி எனும் நிழல் வாழ்வில் கிட்டும் என்பதையே மேலே கட்டப்பட்டிருக்கும் குடை விளக்கு கின்றது.

ஆகவே வாழ்க்கை என்னும் தேர் ஓடிக் கொண்டு இருந்தபோதிலும் எவன் ஒருவன் தனது இதயம் என்ற பீடத்தில் இறைவனை இருத்தி மனதை ஒரு நிலைப்படுத்தி பலன் கருதாமல் கருமங்களை செய்கிறானோ அவனுக்கு ஆத்ம ஈடேற்றம் என்னும் குடை நிழல் கிட்டும் என்ற அருமையான சிறந்த தத்துவத்தை தேர் ஓட்டம் விளக்கி நிற்கின்றது. எனவே எமது இளம் சந்ததியினர் அனைவருக்கும் திருவிழாவின் அருமை பெருமைகளைக் கூறி அவர்களையும் சமய வழிவாழ வழி வகுத்து இறை அருளைப் பெறச் செய்தல் சாலச் சிறந்தது.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

திருச்சிற்றம்பலம்

# வம்ச விருத்தி




தொகுப்பு: சித்திரை 2024
இதில் திருத்தங்கள் மற்றும் சேர்க்கைகள்
இருப்பின் தொடர்பு கொள்ளவேண்டிய இலக்கம்
+ 61423331111
தென்னவன் பார்த்தீபன்



திரு. திருமதி திருநாவுக்கரசு மற்றும் இராஜேஸ்வரி அம்மா